உதயன்
www.onlineuthayan.com
26: பக்கங்கள் சுடர் 27 கதிர் 279 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 15 வெள்ளிக்கிழமை (31/08/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00




# இந்தியாவுடனான உறவுகளை பலப்படுத்த அரசு தீவிரவியூகம்

## தூதரகங்களுக்கு தமிழ் அதிகாரிகள் நியமனம்

கொழும்பு, ஓக.31

இலங்கை, சீனாவின் பக்கம் சாய்வதால் இலங்கை மீது இந்தியா அதிருப்தி கொண்டுள்ளது என்ற கருத்து மேலோங்கிவரும் இவ்வேளையில், இந்தியாவுடனான தனது இராஜதந்திர உறவுகளை மேலும் பலப்படுத்திக்கொள்வதற்கு இலங்கை தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் முன்மொழிந்த யோசனைக்கு அமைச்சரவை, அங்கீகாரத்தையும் வழங்கியுள்ளது.

இந்தியாவில் இயங்கும் இலங்கைத் தூதரகங்களின் சேவைகள் தற்போதைய தேவைக்கேற்ப மாற்றியமைக்கப்படவுள்ளன. இதன் அடிப்படையில், இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதரக, பிரதித் தூதரகப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்படவுள்ளன.

இதன்பொருட்டு சென்னையிலுள்ள இலங்கை உப தூதுவர் அலுவலகத்திற்குத் தமிழ் பேசும் இரு அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள். இவர்கள் அரச சேவையிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களாக இருப்பார்கள்.

அதேவேளை, மும்பையில் இயங்கும் உப தூதுவர் அலுவலகத் தலைமையதிகாரியாக வெளிவிவகார நடவடிக்கைகளில் தேர்ச்சி பெற்ற சிரேஷ்ட அதிகாரியொருவர் நியமிக்கப்படுவார். அத்துடன், மத்தியஸ்த அதிகாரியொருவரும் நியமிக்கப்படுவார். இவர் வர்த்தகத் திணைக்களத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்டவராக இருப்பார்.

புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் இந்தியாவுடனான பரஸ்பர பொருளாதாரம், முதலீடுகள், வர்த்தக உறவுகள் ஆகியவற்றைக் கையாள்வதற்காக மேலதிக அதிகாரியொருவர் நியமிக்கப்படவுள்ளார்.

கொல்கத்தாவில் உப தூதரகமொன்றும் திறக்கப்படும். ஆலோசகர் நாயகம், உதவியதிகாரி, இலங்கை வெளிவிவகார அதிகாரி உட்பட பல முக்கிய அதிகாரிகளும் இந்த அலுவலகத்துக்கு நியமிக்கப்படுவார்கள்.

இவர்கள் மேற்கு வங்காளம், ஒரிஸ்ஸா, ஜாகண்டி., பீஹார், வடகிழக்கு ஆகிய மாநிலங்கள் எதிர்பார்க்கும் தூதரக சேவைகளை வழங்கவுள்ளனர். அதேவேளை, ஹைதராபாத்,

பார்க்க பக்கம் 4

கல்வி அதிகாரிகளின் அலட்சியத்தால் கல்வயல் சைவப்பிரகாச வித்தியாசாலை பெரும் படைத்தளமாக விரிவாக்கப்படுகிறது. 5

பிராணப் முகர்ஜியின் வார்த்தைகளை நம்பியே ஈழத் தமிழர்களுக்கான உண்ணாவிரதத்தை கைவிட்டாராம் கருணாநிதி 8

2 ஆம் உலகப் போரில் புதையுண்ட வெடிகுண்டு வெடித்ததால் ஜேர்மனியில் பரபரப்பு 9

நான்கு வருட மௌனத்தை உடைத்து ஜப்பானும் வடகொரியாவும் மீண்டும் பேச்சுவார்த்தை. 10

## மஹிந்த - பான் கீ மூன் இன்று முக்கிய சந்திப்பு

### தெஹ்ரானில் தீர்வு முயற்சி குறித்துப் பேச்சு

கொழும்பு, ஓக.31

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ-மூனுக்குமிடையிலான முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பு இன்று ஈரானின் தலைநகர் தெஹ்ரானில் நடைபெறுகிறது.

அணிசேரா நாடுகளின் உச்சிமாநாட்டின் ஓர் இடைவேளையின்போது இந்தச் சந்திப்பு இடம்பெறுமென்று உயர்மட்ட அரச வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இந்தச் சந்திப்பு ஏற்கனவே திட்டமிடப்பட்ட ஒன்றல்ல.

பார்க்க பக்கம் 4

## ஐ.தே.க. அரசியல் செல்வாக்கு இப்போது குப்பைத் தொட்டியில்

### கிண்டலடிக்கிறது அரசு

கொழும்பு, ஓக. 31

ஐக்கிய தேசியக் கட்சி நான்காக உடைந்து அதன் அரசியல் செல்வாக்கு இன்று குப்பைத்தொட்டியின் நிலைக்கு வந்துள்ளது என விமர்சித்துள்ள அரசு, புத்தபெருமானின் புனித தாது விடயத்தைக்கூட அரசியலாக்குவதற்கு ஐ.தே.க. முயற்சிப்பது கவலையளிக்கின்றது என்றும் தெரிவித்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வீராந்த செய்தியாளர் மாநாடு நேற்று முற்பகல் 11 மணிக்கு அரச தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது ஊடகவியலாளர் ஒருவர், புத்தரின் புனித தாதுவைப் பயன்படுத்தி அரசு தேர்தல் பிரசாரத்தை

பார்க்க பக்கம் 4

## ஆஸி. கனவுடன் செல்கையில் கைதானோருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஓக. 31

ஆஸ்திரேலியக் கனவுடன் புறப்பட்ட சமயம் சுண்டிக்குளம் கடல் பகுதியில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட 68 பேரில் சிறுவன் தவிர்ந்த ஏனையவர்களை இரு வாரங்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 68 பேரும் நேற்று பிற்பகல் 3 மணியளவில் பொலிஸாரால் நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் முன் நிறுத்தப்பட்டனர்.

கைதானவர்களில் அடங்கியிருந்த 13 வயதுச் சிறுவனை மட்டும் பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார். சிறுவனின் தாயார் வரவழைக்கப்பட்டு அவரி

பார்க்க பக்கம் 4

## சோடாவில் மயங்கினார்: மாயமாகின நகைகள்

சாவகச்சேரி, ஓக.31

பஸ்ஸுக்காக காத்திருந்தவரை, சமயோசிதமாக ஓட்டோவில் ஏற்றிச் சென்றவர்கள் மயக்கமருந்து கலந்த சோடாவைக் கொடுத்து, குறித்த நபர் கொண்டு சென்ற நகைகளுடன் மாயமாகினர்.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் மீசாலைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அல்லாரை தெற்கைச் சேர்ந்த வேலும்மயிலும் பாஸ்கரன் (வயது 38) என்பவரே நகைகளைப் பறிகொடுத்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

பார்க்க பக்கம் 4

## காணாமற்போனோர் கதியென்ன? வவுனியாவில் உறவுகள் கதறல்



வவுனியா, ஓக.31

சர்வதேச காணாமற்போனோர் தினத்தையொட்டி உள்நாட்டு, வெளிநாட்டு மனிதஉரிமை அமைப்புகள், வவுனியா பஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

எனினும் இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உட்பட தமிழ்க் கட்சிகள் எவையும் கலந்து கொள்ளாததால் ஒருவித குழப்ப நிலை தோன்றியது.

தென்பகுதியில் இருந்து

பார்க்க பக்கம் 4

## வடக்கு, கிழக்கில் இராணுவம் முற்றாக அகற்றப்பட வேண்டும்

### கனடாவின் நிலைப்பாடும் இதுவே

கொழும்பு, ஓக.31

தமிழ் மக்கள் வாழும் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலிருந்து இராணுவம் முழுமையாக அகற்றப்பட்டு, சிவில் நிர்வாகம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதில் கனேடிய அரசு மிகத் தெளிவாக இருக்கிறது.

- இவ்வாறு தெரிவித்தார் கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் கிறிஸ் அலெக்ஸ்சாண்டர்.

அஜெக்ஸ் தொகுதிக்கான கனேடிய நாடாளுமன்ற உறுப்பினரும், ஆசிய நாடுகளுக்கான வெளிநாட்டு அமைச்சின் ஆலோசகரும், மக்கள் செல்வாக்குள்ள இராஜதந்திரியுமான கிறிஸ் அலெக்ஸ்சாண்டருடனான மக்கள் சந்திப்பொன்று, ரொறன்ரோ பெரும்பாகத்தில் வாழும் தமிழ் மக்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இச்சந்திப்பில் கிறிஸ் அலெக்ஸ்சாண்டர் தமது

பார்க்க பக்கம் 4

## பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க மானிய ஆணைக்குழுவுக்கு யோசனை

### பிரதம நீதியரசர் நேற்று வழங்கினார்

-எஸ்.எஸ்.ஜனகன்-

கொழும்பு, ஓக 31

பல்கலைக்கழகங்களுக்கு இந்த ஆண்டு சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறும் அதற்கேற்ற வகையில் உட்கட்டுமான வசதிகளை அதிகரிக்குமாறும் பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவுக்கு ஆலோசனை கூறியுள்ளார் பிரதம நீதியரசர் ஷிராணி ஏ.பண்டாரநாயக்க.

'இசற்' புள்ளி கணிப்பீட்டால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நீதியரசர்கள் ஷிரானி பண்டாரநாயக்க மற்றும் கே.சிறிபவன் ஆகியோர் முன்னிலையில் நடந்த விசாரணையின்போது, 1991ஆம் ஆண்டு இதேபோன்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டமையைச் சுட்டிக்காட்டிய பிரதம நீதிய

பார்க்க பக்கம் 4

## மண்எண்ணெய் ஊற்றி மனைவியை எரித்த கணவருக்கு 12 வருடங்கள் கடூழியச் சிறை

### 6 வருடங்களின் பின்னர் கிடைத்தது நீதி

யாழ்ப்பாணம், ஓக. 31

மனைவியை மண்எண்ணெய் ஊற்றிக் கொளுத்திக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்த கணவருக்கு கொலை அல்லாத இறப்பை விளைவித்தார் என்று யாழ். நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இதற்காக 12 வருட கடூழியச் சிறைத்தண்டனையும், 10 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்தது.

குறித்த வழக்கு யாழ். மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டபோது தீர்ப்பு வழங்கப்பட்டது.

2002 ஆம் ஆண்டு ஏப்ரல் 4 ஆம் திகதியன்று சுதுமலை சாவற்காட்டில் வசித்து வந்த ஜெகன்மோகன் லக்ஷ்மி (வயது-24) என்ற பெண் மண்எண்ணெய் ஊற்றி எரிக்கப்பட்டதில் படுகாயமடைந்தார்.

பின்னர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர், சிகிச்சை பயனின்றி 13 நாள்களின் பின்னர் உயிரிழந்தார். குறித்த பெண்ணை அவரது கணவரான முத்துலிங்கம் ஜெகன் மோகன் என்பவரே மண்எண்ணெய் ஊற்றி எரித்துக் கொலை செய்தார் என்று மானிப்பாய் பொலிஸார் குற்

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மிருகபலி பூஜை நடத்துவோர் நரகத்திற்கு அனுப்பப்படுவர்

## மிரட்டுகிறார் மேர்வின் சில்வா

''புத்தபெருமானின் புனித தாது இலங்கையில் காட்சிப்படுத்தப்படுகின்ற தருணத்தில், மிருகபலிபூஜை நடத்தவேண்டாம் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னேஸ்வரம் காளிகோயில் நிர்வாகத்திற்கு உத்தரவிட்டுள்ளார். ஜனாதிபதியின் இந்த உத்தரவை மீறி எவராவது மிருகபலி பூஜையை நடத்தினால் அவர்கள் நரகத்திற்குச் செல்வதற்கான பஸ் தயார் நிலையில் உள்ளது. அதில் அவர்கள் ஏறி நரகத்திற்குச் செல்லமுடியும்.''

இவ்வாறு பொதுமக்கள் தொடர்பு மற்றும் பொதுமக்கள் விவகார அமைச்சர் கலாநிதி மேர்வின் சில்வா நேற்றுத் தெரிவித்தார்.

நான் நாளை (இன்று) முன்னேஸ்வரம் காளிகோயிலுக்குச் செல்வேன். பொது மக்கள் தொடர்பு மற்றும் பொதுமக்கள் விவகார அமைச்சர் என்ற வகையில் தான் எங்கும் செல்லலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முன்னேஸ்வரம் காளி கோயிலில் நடைபெறவிருக்கின்ற மிருகபலி பூஜையைத் தடுத்து நிறுத்துமாறு நான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்தேன். அத்துடன், இது விடயம் தொடர்பிலும் நான் அவருக்கு எடுத்துரைத்தேன். இந்த விடயத்தை நன்கு அறிந்துகொண்ட ஜனாதிபதி, மஹாநாயக்க தேரர்கள் உள்ளிட்ட ஏனைய அனைத்து மத குருமார்களுடன் கலந்தாலோசித்தே இந்த மிருகபலி பூஜையை நிறுத்துமாறு முன்னேஸ்வரம் காளிகோயில் நிர்வாகத்திற்கு உத்தரவிட்டார்.

புத்தரின் புனித தாது இலங்கையில் காட்சிப்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில் இதுபோன்ற மிருகபலி பூஜைகளை நிறுத்தி அவரின் புனித சின்னத்துக்கு சகல சமயத்தவர்களும் கௌரவம் செலுத்த வேண்டும். அதைவிடுத்து மிருகபலி பூஜை நடத்துவதென்பது அது சமயத்திற்கும், நமது தேசத்திற்கும் ஏற்படுத்தும் பேரவமானமாகும்.

ஜனாதிபதி வழங்கிய உத்தரவை மீறி எவராவது மிருகபலிபூஜை நடத்தினால் அவர்கள் நரகத்திற்குச் செல்வதற்கான பஸ் தயார்நிலையிலுள்ளது. அதில் ஏறி அவர்கள் நரகத்திற்குச் செல்லமுடியும்.

கடந்த தடவைகூட முன்னேஸ்வரம் காளி கோயிலில் நடைபெறவிருந்த மிருகபலி பூஜையை நான் தடுத்து நிறுத்தினேன். இந்தத் தடவையும் அதை நடத்த விடமாட்டேன். பேய், பூதங்கள்தான் இவ்வாறு மிருகபலியை ஏற்கும். இந்த மிருகபலியைத் தடுத்து நிறுத்துவதற்கு பேய், பூதங்கள் எனக்குத் தண்டனை கொடுக்குமானால் அதனைக் கொடுக்கட்டும். அதை நான் பார்த்துக் கொள்வேன். பேய், பூதங்களுக்கு நான் பயப்படமாட்டேன்.

மிருகபலி பூஜையைத் தடுத்து நிறுத்தி அந்தப் பலியிலிருந்து மிருகங்களைக் காப்பதால் நான் சொர்க்கத்திற்குச் செல்வேன். முடிந்தால் நீங்களும் என்னுடன் வாருங்கள் - என்றார்.

# இராணுவம் ஆக்கிரமித்த காணிகளுக்கு நஷ்ட ஈடு

## மதிப்பீட்டுப் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக.31

யாழ்.மாவட்டத்தில் முப்படையினரும் ஆக்கிரமித்துள்ள தனியார் காணிகளின் உரிமையாளர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கும் பொருட்டு குறித்த காணிகள் மற்றும் வீடுகள் என்பவற்றை மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக விலை மதிப்பீட்டு திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இது குறித்து திணைக்கள வட்டாரங்கள் தகவல் தருகையில் -

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் மட்டுமே செயற்பட்டு வந்த விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் சேவைகள் வடமாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களுக்கு மானதாக விரிவாக்கப்பட்டுள்ளன.

தற்போது பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் கீழான மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் என்பவற்றின் சொத்துமதிப்பீட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் சேவைகள் வடமாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளன.**

அத்தோடு அரசின் அறிவுறுத்தலின்படி யாழ். மாவட்டத்தில் முப்படையினராலும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தனியார் காணிகளின் உரிமையாளர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கும் பொருட்டு குறித்த காணிகள் மற்றும் வீடுகள் என்பவற்றையும் மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. - என்று தெரிவித்தார். (ஙு-5)



அணிசேரா நாடுகளின் 16ஆவது உச்சி மாநாடு நேற்று ஈரான் தலைநகர் தெஹ்ரானில் ஆரம்பமானது. இந்த மாநாட்டில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஐக்கிய நாடுகள் பொது செயலாளர் பான் கீ மூன் மற்றும் ஈரான் ஜனாதிபதி அஹமடி நெஜாத் உட்பட பல உலக நாட்டு தலைவர்கள் கலந்துகொண்டனர்.

## முன்னேஸ்வரத்தில் பலிபூஜை நிறுத்தம்

கொழும்பு, ஒக. 31

ஜனாதிபதியின் வேண்டுகோளையடுத்து முன்னேஸ்வரம் காளி கோயிலில் மிருக பலி பூஜையை நிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என முன்னேஸ்வரம் காளி கோயிலின் பிரதம குருவான சிவபாத சுந்தரம் தெரிவித்துள்ளார்.

நாளை முதலாம் திகதி முன்னேஸ்வரம் காளி கோயிலில் மிருக பலி பூஜை நடத்தப்படவிருந்த நிலையில், புத்தர் பெருமானின் கபில வஸ்து புனிதச்சின்னங்கள் காட்சிக்கு வைக்கப்படும் காலத்தில், மிருக பலி பூஜை வேண்டாம் என ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார்.

# போராட்டம் தொடரும்; ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

நேற்று வெளியிடப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் அடிப்படையில் தமது தொழிற்சங்க நடவடிக்கைகள் நிறுத்தப்படமாட்டாது என பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது. அது ஒரு கொள்கை மட்டத்திலான ஆவணம் மாத்திரமே எனவும் சம்மேளனத்தின் கோரிக்கைகளுக்கான உறுதியான தீர்வு இல்லை எனவும் சம்மேளனத்தின் பேச்சாளர் கலாநிதி மஹிம் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

கல்வியியலாளர்களின் கோரிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட 8 தீர்மானங்கள் அடங்கிய அமைச்சரவைப் பத்திரம் சம்மேளனத்திற்கு கிடைத்தது எனவும் இப்பெறுபேறு குறித்து, சம்மேளனம் ஏமாற்றமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். 'மொத்த தேசிய உற்பத்தியில் 6 சதவீதத்தை கல்வித்துறைக்கு ஒதுக்கீடு செய்தல், சம்பளப் பிரச்சினைகளை தீர்த்தல் உட்பட எமது முக்கிய கோரிக்கைகள் எவை தொடர்பாக இந்த ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை. 2011 ஆம் ஆண்டின் இடைக்கால தீர்வின்படி எமது கோரிக்கைகளுக்கு தீர்வு வழங்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம்'' என அவர் கூறினார். (16)

# இலங்கைப் படைகளுக்குப் பயிற்சியா? இந்திய நாடாளுமன்றில் அமளிதுமளி

இலங்கை பாதுகாப்பு படையினருக்கு மத்திய அரசு பயிற்சி அளிப்பதை கண்டித்து அ.தி.மு.க. சார்பில் நாடாளுமன்றில் கோஷம் எழுப்பப்பட்டது.

நிலக்கரி ஊழல் பிரச்சினைக்கு தார்மீக பொறுப்பேற்று பிரதமர் பதவி விலகக் கோரி பி.ஜே.பி உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் அமளியில் ஈடுபட்டதால் 7வது நாளாக பாராளுமன்றத்தின் நடவடிக்கைகள் முடங்கின. அதன் பின்னர் நேற்று நாடாளுமன்றம் கூடியதும் சபாநாயகர் மீராகுமார் கேள்வி நேரத்தை எடுத்துக்கொள்ள முயன்றார். இலங்கை பாதுகாப்பு படையினருக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கக் கூடாது என்று தமிழக முதலமைச்சர் பலமுறை கேட்டுக் கொண்டும் மத்திய அரசு இலங்கை படையினருக்கு பயிற்சி அளித்து வருகிறது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அதிமுக உறுப்பினர்கள் கோஷங்களை எழுப்பினார்கள். இதே கோரிக்கைக்காக திமுக உறுப்பினர்களும் கோஷமிட்டனர். உறுப்பினர்களின் கூச்சல், குழப்பம் காரணமாக அவை நடவடிக்கைகளை சபாநாயகர் ஒத்தி வைத்தார். (16)

# பிரதேச சபைக் கட்டடத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு தேவை

## வலி.தெற்கில் தீர்மானம் நிறைவேறியது

யாழ்ப்பாணம், ஒக. 31

வலி.தெற்கு பிரதேச சபையின் (சுன்னாகம்) புதிய கட்டடத்திற்கு இரவு நேர காவல் கடமை செய்வதற்கு காவலாளிகள் மறுத்து வருவதால் இதற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கக் கோரும் தீர்மானம் சபையில் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி. தெற்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் புதிய கட்டடத்தில் தவிசாளர் தி.பிரகாஷ் தலைமையில் நேற்று நடைபெற்றது.

புதிய கட்டடத்திற்கான சடங்குகள் மேற்கொள்ளும் தீர்மானத்தை தவிசாளர் தனித்து எடுத்ததாகவும் சபையுடன் கலந்தாலோசித்தே தீர்மானித்திருக்க வேண்டுமென்றும் எதிர்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இதற்கு தவிசாளர் மேற்கொண்ட தீர்மானம் சரியானதுதான் என்று ஆளுங்கட்சியான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பிரதேச சபை உறுப்பினர்கள் தெரிவிக்க, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளியேறினர்.

இதன் பின்னர் பிரதேச சபைக் கூட்டம் தொடர்ந்து இடம்பெற்றது. இதில் பிரதேச சபையின் புதிய கட்டடம் மீது கடந்த 22ஆம் திகதி அதிகாலை 2.30 மணியளவில் ஆயுததாரிகளால் மேற்கொள்ளப்பட்ட கழிவு ஒயில் வீச்சு சம்பவத்துக்குக் கண்டனம் தெரிவித்து ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத்துடன் குறித்த புதிய கட்டடத்திற்கு இரவு நேர காவல் கடமைகளில் ஈடுபடுவோருக்கு காவலாளிகள் பயம் காரணமாக மறுத்து வருகின்றனர். எனவே கட்டடத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. (16-5)

# விபத்தில் இளைஞன் காயம்

சாவகச்சேரி, ஒக.31

இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் காலில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் புலோப்பளை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் புலோப்பளையைப் சேர்ந்த இராசேந்திரம் அமலதாஸ் (வயது-42) என்பவரே காலில் படுகாயமடைந்த நிலையில் பளை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக சாவகச்சேரி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (16-9)

# டெசோவின் தீர்மானம் ஐ.நாவுக்கு ஸ்டாலின் தலைமையில் விரைகிறது குழு

## நியூயோர்க் சென்று ஐ.நா. சபையின் பொதுச்செயலர் பான் கி மூனிடம் நேரில் வழங்க திட்டம்

கொழும்பு, ஒக. 31

டெசோ மாநாட்டின் தீர்மானங்களை ஐ.நா., சபையிடம் சமர்ப்பிக்க, தி.மு.க., பொருளாளர் ஸ்டாலின் தலைமையில் அமைக்கப்பட்ட குழு, அடுத்த மாத இறுதியில் நியூயோர்க் செல்லத் திட்டமிட்டுள்ளது.

இளைஞர் அணி நிர்வாகிகள் நேர்காணல் மற்றும் தி.மு.க. முப்பெரும் விழா முடிந்த பின் 'டெசோ' மாநாட்டின் தீர்மானங்களை ஐ.நா. சபையிடம் சமர்ப்பிக்க, ஸ்டாலின் தலைமையிலான குழு, நியூயோர்க் செல்ல திட்டமிட்டுள்ளது.

எதிர்வரும் 15ம்திகதி, அண்ணாதுரை பிறந்தநாளை முன்னிட்டு, தி.மு.க. முப்பெரும் விழா, விழுப்புரத்தில் நடைபெறவுள்ளது.

'டெசோ' மாநாட்டின் தீர்மானங்களை, ஸ்டாலின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழு, நியூயோர்க் சென்று ஐ.நா. சபையின் பொதுச்செயலர், பான் கி மூனிடம் நேரில் வழங்க திட்டமிட்டுள்ளது. நியூயோர்க்கில் வசித்து வரும், பான் கி மூனை சந்திப்பதற்கு திகதியும், நேரமும் தி.மு.க., சார்பில் கோரப்பட்டுள்ளது. அவரை சந்திக்க திகதி கிடைக்கவில்லை என்றால், அங்குள்ள உயர் அதிகாரியிடம் தீர்மானம் வழங்கப்படும் என, அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.மாவட்ட அபிவிருத்தி முன்னேற்றம் குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், ஓக.31

யாழ்.மாவட்டத்தில் அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்றம்- பிரச்சினைகள் குறித்து விரைவில் ஆராயப்படவுள்ளன.


இதற்கான முன்னேற்ற மீளாய்வுக் குழுக் கூட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி இடம்பெறும் என்று யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் குறிப்பிட்டார்.

விவசாயத்துறை, போக்குவரத்து, மின்சாரம், நீர்ப்பாசனம், நீர்வழங்கல், வீடமைப்பு, கைத்தொழில், மீன்பிடித்துறை, கல்வி, சுகாதாரம் ஆகிய ஒவ்வொரு தலைப்புக்களிலும் ஆராயப்படவுள்ளது.

காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை துறை சார்ந்த தலைவர்களுடன் பிரச்சினைகள், அபிவிருத்தி குறித்து ஆராயப்படும்.

இதன்போது குறித்த விடயங்களில் கூடுதல் கவனம் செலுத்தி விவரங்களைச் சமர்ப்பித்து கலந்துரையாடுமாறு அரச அதிபர் குறிப்பிட்டுள்ளார். (ம-41)

## பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ தேரில் ஆரோகணித்தான் சந்நிதியான்



பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் புடைசூழ சரித்திரப் பிரசித்திபெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் நேற்று தேரில் ஏறி வீதி வலம் வந்தான். வரலாற்றுச் சிறப்புமிக்க செல்வச்சந்நிதியானின் வருடாந்த மகோற்சவத்தின் தேர்த் திருவிழா நேற்று வியாழக்கிழமை பக்திபூர்வமாக நடந்தேறியது. காலை விசேட பூசைகள், வசந்த மண்டபப் பூசைகளைத் தொடர்ந்து முருகப் பெருமான் காலை 8.30 மணிக்கு தேரில் ஆரோகணித்தார். தேர்த்திருவிழாவை முன்னிட்டு நூற்றுக் கணக்கான காவடிகள், தூக்குக் காவடிகள், முள் மிதியுடன் காவடி, பெண்கள் கற்பூரச்சட்டிகள் ஏந்தியவாறாகவும் தமது நேர்த்திக் கடன்களை சந்நிதியானுக்கு சமர்ப்பித்தனர். பக்தி வெள்ளத்தில் அசைந்து அசைந்து நகர்ந்த சந்நிதியான் அரோகரா என்ற ஒலி வானைப்பிளக்க வலம் வந்தான்.

நேற்று தேர்திருவிழாவையொட்டி விசேட பொலிஸ் பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டதுடன் திருட்டுச் சம்பவங்கள் பெருமளவில் இடம்பெறாமல் தடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். தூக்குக் காவடி எடுத்து தனது நேர்த்திக் கடனை நிறைவேற்ற வந்த பக்தர் ஒருவரின் வாகனம் தடம் புரண்டதில் தெய்வாதீனமாக சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இன்று காலை 7 மணிக்கு சந்நிதியானுக்கு தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

(16-8-253)

## அனுமதியின்றி வியாபார நிலையங்கள் அமைக்கத் தடை

யாழ்ப்பாணம், ஓக.31

வேலணை, சாட்டி புனித சிந்தாத்திரை மாதா ஆலய பெருந்திருவிழாவில் ஐஸ்கிறீம் கடை, இனிப்புக்கடை, சாப்பாட்டுக் கடை, மற்றும் நடமாடும் உணவு வியாபாரிகள் வேலணை பிரதேச சபையின் அனுமதியை முற்கூட்டியே பெற வேண்டும்.

அனுமதி பெறாத எந்த வியாபாரமும் இங்கு மேற்கொள்ள அனுமதி வழங்கப்படமாட்டாது.

வேலணை பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா இவ்வாறு குறிப்பிட்டார்.

சாட்டி புனித மாதாவின் வருடாந்த பெருவிழா எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் 15 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் இவ்வருட திருவிழாவில் ஒன்று கூடுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆலயச் சூழலில் அமைக்கப்படும் எந்த வியாபாரமாயினும் வேலணை உப அலுவலக பொறுப்பதிகாரியுடன் தொடர்புகொண்டு வியாபார அனுமதி படிவங்களை பெற்று பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் அனுமதியுடன் எமது தற்காலிக வியாபார உரிமை பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஆலய பங்குத்தந்தை அருட்திரு பிலிப்ஸ் மற்றும் பிரதேச செயலர் திருமதி ம.சதீஷன், சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோருடன் இணைந்த வகையில் குடிதண்ணீர், சுகாதாரம், போக்குவரத்து, தொண்டர் சேவை, உப அலுவலக வேலைத் திட்டம், பொலிஸ் சேவைகள் என்பன மேற்கொள்ளப்படும் எனவும் வியாபார அனுமதி பெறும் படிவங்கள் நேற்று முன்தினம் முதல் விநியோகிக்கப்படுகின்றன என்றும் தலைவர் தெரிவித்தார். (ம-50)

## பாதகாரிக் கடவைகள் இன்மையால் சிரமம்

யாழ்ப்பாணம், ஓக.31

வீதி அகலிப்பின் பின்னர் உரிய பாதசாரிகள் கடவைகள் இன்னமும் அமைக்கப்படாததால் மக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஏ-9 வீதியில் நிமிடத்துக்கு ஒரு வாகனம் என்ற நிலையில் போக்குவரத்து இடம்பெறுகிறது. வாகனங்களும் உச்ச வேகத்தில் வீதியில் செல்கின்றன. இந்த நிலையில் மக்கள் வீதியை ஓடி ஓடிக் கடக்க வேண்டியுள்ளது.

ஏ-9 வீதியில் மக்கள் அதிகமாக நடமாடும் நகர்ப் பகுதி மற்றும் சந்திகள் பாடசாலைகள், வைத்தியசாலைகள் போன்றவற்றின் முன்பான பாதசாரிகள் கடவைகள் அமைக்கப்படல் வேண்டுமென மக்கள் கேட்கின்றனர்.

# வீதி அகலிப்புப் பணி இழுபறியில் நெருக்கடியில் யாழ்.வர்த்தகர்கள்

### பணிகளைத் துரிதப்படுத்துமாறு சங்கத் தலைவர் கோரிக்கை

*யாழ்ப்பாணம், ஓக.31*

*வர்த்தக நிலையங்கள் அதிகமாகவுள்ள யாழ்.நகரில் வீதி அகலிப்புப் பணிகள் இழுபறி நிலையில் உள்ளதனால் வர்த்தகர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பிட்ட நாள்களுக்கு அதிக வேலையாள்களை நியமித்து வீதி அகலிப்புப் பணிகளை நிறைவு செய்து வர்த்தக நிலையங்களை வியாபார நடவடிக்கைக்காகத் திறக்க வீதி திருத்தப் பணிக்குப் பொறுப்பானவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

யாழ்.வர்த்தக சங்கத் தலைவர் ஆர்.ஜெயசேகரம் இவ்வாறு கூறியுள்ளார்.

வீதி அகலிப்புப் பணிக்காக யாழ். நகரிலும் நகரை அண்டிய பகுதிகளிலும் உள்ள வீதிகளின் ஓரங்கள், கடைகளின் முகப்புக்கள் உடைக்கப்பட்டதால் தற்காலிகமாக மூடப்பட்ட வியாபார நிலையங்கள் தொடர்ந்தும் மூடப்பட்ட நிலையிலேயே உள்ளன. அதனால் வர்த்தகர்கள் வருமானம் எதுவுமின்றி பொருள்களைக் கொள்வனவு செய்தமைக்கான பணத்தைக் கூடப் பெற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கொள்வனவு செய்யப்பட்ட பொருள்களுக்கான பணத்தை வர்த்தகர்கள் உரியவர்களுக்கு காசோலைகளாக வழங்கியுள்ளனர். ஆனால் அவர்களது வங்கிக் கணக்கில் பணம் வைப்பிலிடப்படாமையால் காசோலைகள் திருப்பப்படுகின்றன. அதனால் காசோலைகளுடன் உரியவர்கள், வர்த்தகர்களுக்கு எதிராகப் பொலிஸில் மோசடிக் குற்றஞ்சாட்டி முறைப்பாடுகளும் செய்ய முற்படுகின்றனர்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் மட்டும் யாழ்.நகர்ப் பகுதியைச் சேர்ந்த நான்கு வர்த்தகர்களுக்கு எதிராகப் பொருள்களைக் கொடுத்த பெருவர்த்தகர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

பொருள்களைக் கொள்வனவு செய்யும் வர்த்தகர்கள் பொருள்களைக் கொள்வனவு செய்ததற்கான பணத்தை வழமை போன்று காசோலைகளாக வழங்குகின்றனர். அந்தக் காசோலைகளே திரும்புகின்றன.

வீதி அகலிப்புப் பணிப்காக வர்த்தக நிலையங்கள் உடைக்கப்படுகின்றன. இன்னும் சில வர்த்தக நிலையங்கள் தொடர்ந்தும் மூடப்பட்ட நிலையிலேயே உள்ளன.

யாழ்.நகரில் கே.கே.எஸ். வீதியில் இந்த இழுபறி நிலை தொடர்கிறது. எனவே வீதி அகலிப்புப் பணிக்குப் பொறுப்பானவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

குறுகிய நாள்களுக்குள் அதிக வேலையாள்களை நியமித்தாவது அகலிப்பு, திருத்த வேலைகளை முடித்து வியாபார நடவடிக்கைகளைத் தொடங்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வர்த்தக சங்கத் தலைவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-4)

## 51 வீதிகள் திருத்தம்

யாழ்ப்பாணம், ஓக.31

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் 51 வீதிகள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளன. மேலும் ஆறு வீதிகள் திருத்தியமைக்கப்படவுள்ளன என்றும் சபையின் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார். சுமார் 18 மில்லியன் ரூபா செலவில் இந்த வீதிகள் புனரமைக்கப்பட்டன.

புனரமைப்பு செய்யப்படாத ஆறு வீதிகளையும் விரைவில் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதனைவிட கொக்குவில் கேணியடி வீதி, பொன்னையா வீதி, அரியாலை 8 ஆம் குறுக்கு வீதி என்பன நெல்சிப் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளன.

கோண்டாவில் மகாத்மாஜி வீதி, முத்தட்டுமடம் குறுக்குவீதி, பூங்கனிச் சோலை முன்வீதி, கோண்டாவில் பாடசாலை வீதி, அரியாலை கிழக்கு கடற்கரை வீதி கோண்டாவில் நாராயண வீதி, திருநெல்வேலி பனிக்கர் வீதி என்பவற்றை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார். (ம-17)

## நிகழ்வுகள் இன்று

**கலந்துரையாடல்**

சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயான அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் மாலை 4.30 மணிக்குச் சாவகச்சேரி நகராட்சி மன்ற கேட்போர் கூடத்தில் நகராட்சிமன்றதுணைத் தலைவர் கு.சதாசிவமூர்த்தி தலைமையில் நடைபெறும். (ம-14)

**ஆன்மிக நிகழ்வு**

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு முன்பாக உள்ள சத்திசாயிசேவா நிலையத்தில் போயாதின ஆன்மீக நிகழ்வுகள் காலை 4.45 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து ஆன்மிக நிகழ்வுகள் இடம்பெறும். (ம-14)

**கருத்துப் பகிர்வு**

யாழ்.சர்வதேச மார்க்சியகுழு நடத்தும் ''சீனாவின் பொருளாதார வளர்ச்சியின் பின்புலத்தில் இலங்கை சீன உறவுகள்'' எனும் தலைப்பிலான கருத்துப் பகிர்வு மாலை 4.30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரிக்கு அண்மையில் உள்ள டி.சி.எம். தனியார் கல்வி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

**புனரமைப்புக் கூட்டம்**

வரணி அரசினர் பொது வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபையின் புனரமைப்புக் கூட்டம் முற்பகல் 10 மணிக்கு வைத்தியசாலையில் இடம்பெறவுள்ளது. (ம-14)

**குருபூசை**

ஆத்மஜோதி நா.முத்தையாவின் 17 ஆவது குருபூசை விழாவும் திருவாசக முற்றோதலும் காலை 7 மணிமுதல் ஏழாலை ஆத்மஜோதி தியான மண்டபத்தில் நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வில் ''திருவாசகத் தேன் துளிகள்'' நூல் வெளியீடும் இடம்பெறும். (ம-14)

**சிரமதானம்**

ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் பழைய மாணவர் சங்கமும் இணைந்து நடத்தும் சிரமதானம் காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ம)

**திரைப்பட வெற்றி விழா**

குருநகர் நாட்டுக்கூத்து மன்றத்தின் ஏற்பாட்டில் 'ஆளுமை' திரைப்பட வெற்றி விழாவும் 'வீரியம்' புதிய திரைப்படத் தொடக்க விழாவும் மன்றத் தலைவர் இறகரி கிறிஸ்தோப்பர் தலைமையில் மாலை 5 மணிக்குக் கடற்கரை வீதியில் உள்ள அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் பிரதம விருந்தினராகவும் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். ஆசியுரையை குருநகர் யாகப்பர் ஆலய பங்குத் தந்தை அருட்திரு றோமணி நேசராஜா அடிகளார் வழங்குவார். (ம)

**பொதுக்கூட்டம்**

அதிவணக்கத்திற்குரிய கலாநிதி டி.ஜே அம்பாலவாணரின் ஞாபகார்த்தமாக ஆரம்பிக்கப்பட்ட சிறுவர் இல்லங்களின் நிதியத்தின் பொதுக்கூட்டம் பி.ப. 3மணிக்கு யாழ். நூலக சிற்றுண்டிச்சாலை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. ஏ. பிறேமானந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு சிறுவர் இல்லங்களின் பழைய மாணவர்கள் [illegible] செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (ம-422)

## சுன்னாகம் மின்சார நிலையத்தின் கழிவு ஒயிலை சேகரிக்கத் தாங்கி

யாழ்ப்பாணம், ஓக.31

சுன்னாகம் மின்சார நிலையத்தில் இருந்து வெளியேறும் கழிவு ஒயிலை சேகரிப்பதற்கு பெரியளவில் நிலத்தடித் தாங்கி ஒன்று அமைக்கப்படவுள்ளது என்று சுற்றுச் சூழல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த மின்சார நிலையத்தில் இருந்து வெளியேறும் கழிவு ஒயிலினால் அருகில் உள்ள குடிதண்ணீர் கிணறுகள் மாசடைந்துள்ளன.

இதனால் மின்சாரச சபைக் குடிதண்ணீர் கிணற்றில் இருந்து விநியோகிக்கப்பட்ட குடிதண்ணீர் விநியோகமும் நிறுத்தப்பட்டது.

இந்தக் கிணற்று நீர் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் அதில் 13 வீதம் எரிபொருள் கலந்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

> இந்த மின்சார நிலையத்தில் இருந்து வெளியேறும் கழிவு ஒயிலில் அருகில் உள்ள குடிதண்ணீர் கிணறுகள் மாசடைந்துள்ளன.

இதனையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக வலி.தெற்கு பிரதேச சபைக் கூட்டத்திலும் ஆராயப்பட்டுள்ளது. (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத ஆஸிப் படகு பயணங்களின் எதிரொலி சம்மேளனப் படகு நங்கூரமிட அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், ஒக.31

கடந்த சில தினங்களாக குடாநாட்டு கடற்பரப்பு ஊடாக படகுகள் மூலம் சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்கு பயணிப்போர் கைதான சம்பவங்களின் எதிரொலியாக, பலநாள் கலங்கள் (பல நோக்குப் படகுகள்) நங்கூரமிட அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது.

யாழ்.மாவட்ட கடற்றொழில் சமாசத்தின் சம்மேளனத்துக்கு சொந்தமான படகு ஒன்றும் இவ்வாறு வழமை போன்று காரைநகர் கடற்பரப்பில் நங்கூரமிடுவதற்கு தற்போது காங்கேசன்துறை கடற்படையினர் அனுமதி மறுத்துள்ளனர் என்று யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சமாசத்தின் சம்மேளனத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

யாழ்.மாவட்ட கடற்றொழில் சமாசத்தின் சம்மேளனத்துக்குச் சொந்தமான ஒரு கோடி ரூபா பெறுமதி வாய்ந்த 40 அடி நீளம்கொண்ட பலநாள் கலம் (பல நோக்கு படகு) கடற்றொழிலில் ஈடுபட்ட பின்னர் நீர்கொழும்பு, காரைநகர், திருகோணமலை ஆகிய துறைமுகங்களில் நங்கூரமிடுவது வழமை. இதனடிப்படையில் அந்தப் படகு காரைநகர் கடற்பரப்பில் நங்கூரமிடுவதற்கு நேற்று வந்தபோது, 'ஆஸிக்கு பயணிகளை சட்டவிரோதமாக இது போன்ற பலநாள் கலங்களிலேயே ஏற்றிச் செல்வதால் குறித்த படகு நங்கூரமிட அனுமதிக்க முடியாது' என்று காங்கேசன்துறை கடற்படை தளபதி தெரிவித்துள்ளார்.

பின்னர் குறித்த படகு, தற்போது ஊர்காவற்துறை கண்ணகி அம்மன் கோயிலடி கடற் பகுதியில் உள்ள சிறிய இறங்குதுறையில் நங்கூரமிட அனுமதிக்கப்பட்டது. (ங-13)

## ஐ.தே.க...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

முன்னெடுப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி சுமத்தியுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளிக்கும்போதே அமைச்சரவையின் பேச்சாளரும், ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இரண்டு வருடங்களுக்கு முன்னரே இந்தியப் பிரதமருடன் எமது ஜனாதிபதி புத்தபெருமானின் புனித தாதுவை இலங்கைக்குக் கொண்டுவருவது தொடர்பில் பேச்சு நடத்தினார். அதனடிப்படையில்தான் புனித சின்னம் கொண்டுவரப்பட்டுள்ளது.

தற்போது புனித தாது கம்பளையில் உள்ளது. அப்படியானால் அங்கு தேர்தல் நடைபெறுகின்றதா? ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளரும், அதன் தலைவருமே இவ்வாறானதொரு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர் என நான் அறிகின்றேன்.

டி.எஸ்.சேனநாயக்க போன்றோரால் கட்டியெழுப்பப்பட்ட கட்சியை இன்று இவர்கள் சீர்குலைத்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சி நான்காக உடைந்துள்ளது. குப்பைத்தொட்டியின் நிலைக்கு அதன் அரசியல் வந்துள்ளது. அதனால்தான் அவர்கள் அரசியல் சாக்கடை நடத்துகின்றனர்.

ஐ.தே.க. கூறுவதுபோல நாம் எதையும் செய்யவில்லை. ஆனால், புத்தபெருமானின் புனித தாதுவைக்கூட அரசியலாக்கி அதைப் பிரசாரத்திற்கு ஐ.தே.க. பயன்படுத்துவது கவலையளிக்கின்றது - என்றார்.

அதேவேளை, ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படும் குளறுபடிகள் தொடர்பில் அமைச்சரிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கு, கல்வியை சீர்குலைப்பதற்கு சில சக்திகள் நடவடிக்கை எடுத்துவருகின்றன என கல்வியமைச்சர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், இது விடயம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு கல்வியமைச்சு இந்த விடயத்தைக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளது - என்றார்.

## வடக்கு, கிழக்கில்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

உரையில் தெரிவித்தவை வருமாறு -

தமிழ் மக்களின் மனித உரிமை மீறல்கள் விடயத்திலும், தமிழ் மக்களுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதிலும் கனேடிய அரசாங்கம் மிக உறுதியாக இருக்கிறது.

கனேடியப் பிரதமர் ஸ்ரீபன் ஹார்ப்பர், ஏற்கனவே உறுதி கூறியபடி, இலங்கை அரசு மனித உரிமை விடயத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்தாவிடின், இலங்கையில் 2013 ஆம் ஆண்டில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய நாடுகளுக்கான மாநாட்டில் பங்குபற்றுவது பற்றிய நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் இல்லை. அம் மாநாட்டில் கலந்து கொள்வது சாத்தியப்படாது.

இப்பொழுது கனடா மட்டுமே உலக அரங்கில் ஊக்கமெடுத்து குரல் எழுப்புகிறது. இந்த அறிவுறுத்தலுக்கு இலங்கை செவிசாய்க்காவிடின் இன்னும் பல நாடுகள் கனடாவுடன் இணைந்தால், இலங்கையில் ஒரு சிக்கலான சூழ்நிலையே உருவாகும் - என்றார்.

அத்துடன், அண்மையில் தனது குழுவினருடன் இலங்கை சென்றிருந்தபோது தாங்கள் நேரில் கண்டறிந்த அனுபவங்களையும், பல தரப்பட்ட சமயத் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் ஆகியோரைச் சந்தித்து உரையாடி, அவர்களிடம் கேட்டறிந்த உண்மை நிலைவரங்களையும், தமது பயணம் தொடர்பான விரிவான அறிக்கையையும், தங்களது பிரத்தியேக பரிந்துரைகளையும் கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோண் பெயார்ட்டிடம் தாம் கையளித்தார் என்றும் அவர் கூறினார்.

கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஏற்கனவே இலங்கை விடயத்தில் அதீத அக்கறை கொண்டிருப்பதையும், பேச்சளவில் மட்டுமன்றி, நேரடியாக பல்வேறு நடவடிக்கைகளை செயற்படுத்தி இருப்பதையும் உதாரணங்களோடு அவர் தெளிவுபடுத்தினார்.

மேலும், கனடாவிலுள்ள தமிழ் மக்கள் அனைவரும் இலங்கையிலுள்ள பாதிக்கப்பட்ட தமிழ்மக்களின் அபிவிருத்திகளுக்கு உதவ வேண்டுமென்றும், இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்களுக்கெதிராக சர்வதேசத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென்றும் கிறீஸ் வேண்டுகோள் விடுத்தார்.

## மஹிந்த - பான்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஐ.நா. பொதுச்செயலாளரின் வேண்டுகோளுக்கு இணங்கவே இந்தச் சந்திப்பு நடைபெறுகிறது'' - என்று அரசின் மூத்த அமைச்சர் ஒருவர் நேற்றுமாலை 'உதய'னிடம் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபைபொதுச்செயலாளருடனான சந்திப்பின்போது, இலங்கையின் தற்போதைய நிலைமை மற்றும் அரசியல் தீர்வு முயற்சிகள் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முழுமையான விளக்கங்களை அளிப்பார் என்றும் அந்த அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

## ஆஸி.கனவுடன்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

டம் சிறுவன் ஒப்படைக்கப்பட்டான்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 67 பேரில் 10 பேரே இந்தப் பயணத்தை ஏற்பாடு செய்தவர்கள் என்று பொலிஸார் குற்றஞ்சாட்டியுள்ளனர். அதிலும் 5 பேர் சிங்களவர்கள் என்றும் அவர்கள் தெரிவித்தனர். அவர்களிடம் இருந்து 14 லட்சம் ரூபா பணமும் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த 68 பேரும் 'லங்கா மாதா' என்ற படகில் ஆஸ்திரேலியா நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர். (உ-8)

## இந்தியாவுடனான..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ல்க்னோ, திருவனந்தபுரம் ஆகிய இடங்களிலும் இலங்கை உப தூதுவர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இது இவ்வாறிருக்க, இலங்கை அரசு ஏன் திடீரென இந்தியாவுடன் இராஜதந்திர உறவுகளைப் பலப்படுத்துவதற்குத் தீர்மானித்துள்ளது என நேற்றைய அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டின்போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு,

''இலங்கையின் சுற்றுலாத்துறையின் பங்குதாரராக இந்தியா செயற்படுகின்றது. கணிசமானளவு முதலீடுகளைச் செய்கின்றது. அரசியல், பொருளாதார ரீதியிலும் இரு நாடுகளுக்குமிடையில் முக்கியத்துவம் உள்ளது. இவற்றைக் கருத்திற்கொண்டே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது'' - என்று அமைச்சரவையின் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல பதிலளித்தார்.

## மண்ணெண்ணெய்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

றஞ்சாட்டினர்.மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட அவர் மீது சுருக்கமுறையற்ற விசாரணை நடைபெற்றது. தொடர்ந்து அவர்மீதான வழக்கு சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

சட்டமா அதிபர் திணைக்களத்தினால் சந்தேகநபருக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு, 2006 ஓகஸ்ட் 7ஆம் திகதி யாழ். மேல் நீதிமன்றுக்கு வழக்குப் பாரப்படுத்தப்பட்டது. 6 வருடங்களாக அதுதொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வந்தன.

இந்த விசாரணையின் போது, உயிரிழந்த பெண் பொலிஸாருக்கு வழங்கிய இறுதி வாக்குமூலம் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

''சம்பவ தினத்தன்று அதிகாலை 5.30 மணியளவில் நித்திரையிலிருந்து விழித்துக் கொண்ட எனது கணவர் கைவிளக்கிலிருந்த மண்எண்ணெயை என்மீது ஊற்றினார். அது எனது ஆடையில் பட்டுவிட்டது. பின்னர் எனக்குத் தீமூட்டிவிட்டுக் கதவைச் சாத்திவிட்டு எனது கணவர் வெளியே சென்றுவிட்டார். அந்தநேரம் எனது பிள்ளைகள் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தனர்.'' இவ்வாறு அந்த வாக்கு மூலத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

''உயிரிழந்த பெண்ணின் கடைசி வாக்குமூலத்தின்படி அவரது கணவரான ஜெகன்மோகன் என்பவரே, தன்னுடைய மனைவியைக் கொலை செய்தார் என்ற முடிவுக்கு மன்று வருகிறது. ஆயினும் கொலைக்கான நோக்கம் என்னவென்பதை வழக்குத் தொடுநர் தரப்பில் நிரூபிக்கத் தவறியுள்ளனர். எனவே சந்தேகநபர் கொலை அல்லாத இறப்பை விளைவித்தார் என்றே கருதமுடிகிறது. அதன்படி இக்குற்றத்துக்காக 12 வருட கடூழியச் சிறைத்தண்டனையும், 10 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்படுகிறது. அபராதத்தைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் 6 மாதகாலம் மேலதிக சிறைத்தண்டனையும் அனுபவிக்க வேண்டும் என்றும் மன்று உத்தரவிடுகிறது.'' என நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்தார்.

எதிரி சார்பில் சட்டத்தரணி எஸ்.வரதராஜா, ஸ்ரீகாந்தா ஆகியோர் வாதாடியிருந்தனர். எனினும் எதிரி குற்றவாளியாக இனங்காணப்பட்டு 12 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த வழக்கில் அரச சார்பில் அரச சட்டத்தரணி செல்வி நளினி கந்தசாமி வாதாடியிருந்தார். (ங-4)

## காணாமற்போனோர்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வருகை தந்த கட்சி ஒன்றும், சில மனித உரிமை அமைப்புகளும், காணாமற்போனோரின் உறவுகளும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

காலை 9.30 மணிக்கு கண்டிவீதியில் உள்ள பௌத்த விகாரை, ஹொரவப்பொத்தானை வீதியில் உள்ள பள்ளிவாசல், குடியிருப்பு பிள்ளையார் போன்ற மத வழிபாட்டுத் தலங்களில் இருந்து புறப்பட்ட ஆர்ப்பாட்டக் காரர்கள் ஊர்வலமாக வவுனியா பஸ்நிலையத்தை வந்தடைந்தனர்.

'காணாமல்போனோரின் விவரங்களை அரசு உடன் வெளியிட வேண்டும்' என்ற கோஷத்தை ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் உரக்க எழுப்பினர். அத்தோடு,

'போரின் போது காணாமல் போனார் விவரங்களில் படையினரின் விவரங்களையும் வெளியிட வேண்டும்' என்ற கோரிக்கையும் போராட்டத்தின் போது முன்வைக்கப்பட்டது. இதன்போது கலந்துகொண்ட காணாமற்போனோரின் உறவுகள் தமது பிள்ளைகள் பற்றிய விவரத்தை வெளியிடக்கோரி கண்ணீர் மல்கினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளவென தென்னிலங்கையில் இருந்தும், காணாமற்போன படை வீரர்களின் உறவுகள் வந்திருந்தனர்.

வெகுஜனப் போராட்டத்தின் பின்னர் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் கூட்டமொன்றும் நடைபெற்றது. (ங-402,400)

## சோடாவில்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது-

பாதிக்கப்பட்ட நபரின் மனைவி, தனது ஊரான பளையிலுள்ள கோயில் திருவிழாவுக்கான ஆயத்தங்களை செய்வதற்கு முதல் நாளே அங்கு சென்றுவிட்டார்.

மறுநாள் மனைவி அணிவதற்காக வீட்டிலிருந்த நகைகளையும், அயலவரிடமிருந்து இரவல் வாங்கிய நகைகளையும், குறித்த நபர் எடுத்துக் கொண்டு பளைக்குச் செல்வதற்காக மீசாலைச் சந்தியில் பஸ்ஸுக்காக காத்து நின்றார்.

அப்போது ஓட்டோவில் வந்த இருவர், அவரை பளைப் பகுதியில் இறக்கிவிடுவதாகக் கூறி, அழைத்துச் சென்றுள்ளனர். செல்லும் வழியில் ஓர் இடத்தில் ஓட்டோவை நிறுத்திய அவர்கள், சோடா ஒன்றை அவருக்கு பருகக் கொடுத்தனர்.

அதைக் குடித்த பின்னர் குறித்த நபர் சுயநினைவிழந்தார். அதனைப் பயன்படுத்தி நகைகளை அபகரித்துவிட்டு, மயக்கமடைந்த நிலையில் இருந்த குறித்த நபரை பற்றைக்குள் வீசிவிட்டு ஓட்டோ நபர்கள் மாயமாகி விட்டனர். பின்னர் பற்றைக்குள் மயங்கிய நிலையில் இருந்த அவரை அவதானித்த பொதுமக்கள் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர். அதன் பின்னர் பளைப் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து மயங்கிக் கிடந்தவரை மீட்டு பளை வைத்தியசாலையில் சேர்த்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (16-9)

## பல்கலைக்கழக..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ரசர், அப்போது மேலதிகமாக மாணவர்களை உள்வாங்கி பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டமையைச் சுட்டிக்காட்டினார்.

'இசற்' புள்ளி சூத்திரம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதுடன் அது மாணவர்களுக்கு அறிவிக்கப்படவும் வேண்டும் என்றும் நீதியரசர்கள் தெரிவித்தனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சார்பில் மன்றில் முற்பட்டிருந்த சட்டத்தரணி, இந்த விடயம் குறித்து சட்டமா அதிபர் திணைக்களத்தினதும் வழக்காளிகளின் சட்டத்தரணிகளதும் ஆலோசனையுடன் இறுதி அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு வருவதாக மன்றில் தெரிவித்தார்.

இதனை அடுத்து, நீதியரசர்கள் ஷிரானி பண்டாரநாயக்க, என்.ஜி.அமரதுங்க மற்றும் கே.சிறிபவன் ஆகியோர் முன்னிலையில் செப்ரெம்பர் 3ஆம் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று உயர் நீதிமன்று உத்தரவிட்டது.

செப்ரெம்பர் 3ஆம் திகதிக்கு முன்னர் இந்த விவகாரம் தீர்க்கப்படவில்லையாயின் மேற்குறித்த மூன்று நிதியரசர்கள் அடங்கிய ஆயத்தின் முன்பாக செப்ரெம்பர் 10ஆம் திகதி வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்த விவகாரம் தொடர்பில் ஏற்கனவே நூற்றுக்கணக்கான மாணவர்கள் அடிப்படை உரிமை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்துள்ள நிலையில் மேலும் 6 மனுக்களை அவற்றுடன் சேர்த்துக் கொள்ள உயர் நீதிமன்றம் நேற்று அனுமதியளித்தது.

சட்டத்தரணி மோகன் பாலேந்திராவின் அனுசரணையுடன் சாலிய பீரிஸ், ஜனாதிபதி சட்டத்தரணி மனோகர டி சில்வா மற்றும் ஏம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் சட்டத்தரணி ஜி.ஜி.அருள்பிரகாசத்தின் அனுசரணையுடன் சஞ்சீவ ஜெயவர்த்தனவும் மனுதாரர்கள் சார்பில் மன்றில் முற்பட்டிருந்தனர்.

சட்டமா அதிபர் பாலித பெர்னான்டோ, மூத்த அரச சட்டத்தரணிகள் நெரீன் புள்ளே, சுரேன் ஞானதாஸ் ஆகியோர் சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் மன்றில் முற்பட்டிருந்தனர். பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் சார்பில் சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவின் அனுசரணையுடன் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா முற்பட்டிருந்தார்.

'இசற்' புள்ளிக் கணிப்பீட்டு முறையில் ஏற்பட்ட குழப்பங்கள் காரணமாக பழைய பாடத்திட்டத்தில் பரீட்சை எழுதி, பல்கலைக்கழகத்துக்குச் செல்ல முடியும் என நம்பியிருந்த பல மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் சார்பிலேயே இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (உ-01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## தூரப்பார்வையும் தாராள மனதும் அரசிடம் தோற்றம் பெறுமா?

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஜெனிவா மாநாட்டில், கடந்த நவம்பர் மாதத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கென, இலங்கை அரசு தயாரித்த செயல் திட்டம், இப்போது கொழும்பில் உள்ள வெளிநாட்டு ராஜதந்திரிகளின் கவனத்தை ஈர்த்துள்ளது. அதனாற்போலும், அந்தச் செயற்திட்டம் குறித்து அவர்கள்கருத்துக்கூற முன்வந்துள்ளனர். அந்த வகையில் மாற்றலாகிச் செல்லும் கனேடியத் தூதுவர் புரூஸ் லெவி வெளியிட்டுள்ள கருத்து கவனத்தை ஈர்ப்பதாக உள்ளது.

இலங்கையின் செயற்றிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் விடயங்களை - திட்டங்களை - உரிய வகையில், உறுதியான விதத்தில், விரைந்து செயற்படுத்துவதன் மூலம் மட்டுமே - அரசு இது விடயத்தில் தனக்குள்ள அர்ப்பணிப்பையும் கடமையையும் நிறைவேற்ற இயலும் -- என்று அவர் கருத்து வெளியிட்டுள்ளமை ஊன்றிக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

மூன்று வருடங்கள் தமது நாட்டின் தூதுவராகக் கொழும்பில் கடமை ஆற்றியதால், இலங்கை அரசு சொல்வது ஒன்று, செய்வது மற்றொன்று என்பதனைத் தெரிந்து வைத்துள்ளமையினாலேயே அவர் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தார் என்று கொள்வது தப்பில்லை. உண்மையும் அதுவே.

அரசு தனது செயற்றிட்ட அறிக்கையை - தனது சொந்த நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை - அதில் தெரிவிக்கப்பட்டுள்ள சிபார்சுகளை - முறைப்படி நடைமுறைப்படுத்துவது அவசியம். தான் எதிர்நோக்கும் தற்போதைய சர்வதேச அழுத்தத்தைத் தட்டிக் கழிக்கும் போக்கில் செயற்பட்டால்மட்டும் போதாது, அது உரிய பரிகாரமும் அல்ல என்பதனைக் கனேடியத் தூதுவர் சரியாகச் சுட்டிக்காட்டி உள்ளார்.

இலங்கை அரசாங்கம் ஏனோ தானோ என்ற போக்கைக் கைக்கொண்டு செயற்படுமானால், குறிப்பிட்ட செயற்றிட்ட அறிக்கையால் ஆக்கபூர்வமாக எதுவும் விளையமாட்டாது. அதனைத் தவிர்க்க வல்ல தூரநோக்கும் நாட்டு நலன் நாடிய உள்ளுணர்வும் அத்தியாவசியம் என்பதனை எவரும் புரிந்து கொள்வர். அதனையே கனேடியத் தூதுவர் இரத்தினச் சுருக்கமாகக் கூறியுள்ளார். இது தொடர்பில் தூரநோக்கும் பொறுப்புணர்வும் தேவை என்று இலங்கை அரசின் பிரதானிகள் உய்த்து உணர வேண்டும்.

கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில், கனேடியத் தூதுவர் பின்வரும் அம்சங்களை வெளிப்படுத்தி உள்ளார்:

* போரின் இறுதிக் கட்டத்தில், அனைத்துலக நாடுகளின் விமர்சனத்துக்கு ஆளாகும் வகையில் பெரிய அளவிலும், அதற்கு முன்னரும் பின்னரும் குறிப்பிட்டுக் கூறக்கூடிய அளவுக்கும் இந் நாட்டில் மனித உரிமைகள் குறித்த குற்றச்சாட்டுக்கள் எழுந்திருந்தன.

-பொதுவாக மனித உரிமை மீறல்களுடன் தொடர்புபடத் தக்க பல சீரழிவுகள் இருக்கவே செய்கின்றன. அத்தோடு மனித உரிமைகளைச் சட்டை செய்யாமல் குற்றங்கள் இழைக்கப்படுகின்றன.

* எனினும் மனித உரிமை மீறல் குற்றங்களை இழைப்போர் எவ்வித தண்டனையும் இன்றி விடுவிக்கப்படுவது சகஜமாகிவிட்டது, சர்வசாதாரணமாகி வருகின்றது - அதனால் அவை வளர்வதற்கு, பெருகுவதற்கு வழிசெய்யப்படுகிறது; வாய்ப்பு உருவாக்கிக் கொடுக்கப்படுகிறது என்று கூடக் கொள்ளலாம் அல்லவா?

* போர்க் குற்றங்களுடன் சம்பந்தப்பட்டோரை நீதியின் முன் நிறுத்துவதற்கு, இலங்கை அரசு மக்கள் பங்களிப்புடன் உள்ளூர் பொறிமுறை ஒன்றை உருவாக்கி அதனூடாக நடவடிக்கை மேற்கொள்வது சிறந்த மார்க்கம். அதனை அனைத்துலக நாடுகள் வரவேற்கும்.

இடம்மாறிச் செல்லும் கனேடியத் தூதுவர் புரூஸ் லெவி வெளியிட்ட கருத்துக்கள் பலவும் ஏற்புடையன என்பதனை சலனபுத்தியுள்ளவர்களைத் தவிர சுயபுத்தியுள்ளவர்கள் ஏற்றுக்கொள்வர், ஆதரிப்பர். ஆனால் இலங்கை அரசும் அதன் ஆதரவாளர்களும் அடிவருடிகளும் நீலக்கண்கொண்டே பார்ப்பர் என்பது இலகுவில் ஊகிக்கக் கூடிய ஒன்றாகும்.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், அமெரிக்கா கொண்டு வந்து நிறைவேற்றிய, இலங்கைக்கு எதிரான தீர்மானத்தின் பின்னர், இந்நாட்டு அரசு பெரும் கொதிப்புடன் உள்ளது. தனக்கு எவரும் புத்தி சொல்லத் தேவையில்லை என்ற போக்கிலும் செயற்பட்டு வருகிறது. மனித உரிமைகள் பேரவைக்குத் தான் அனுப்பி வைத்த செயல்திட்ட அறிக்கை (Action plan) குறித்து எவரும் ஆக்கபூர்வமற்ற கருத்துக்களை வெளியிடக் கூடாது என்பதே அதன் விருப்பமாகும்.

அதனை நன்றாக அறிந்து கொண்டவராக, உணர்ந்து கொண்டவராக, கனேடியத் தூதுவர் புரூஸ் லெவி மிகப் பொருத்தமான ஆலோசனை ஒன்றைத் தெரிவித்துள்ளார். நிலையான, உறுதியான இலங்கையைக் கட்டி எழுப்புவதற்கு, அதற்கு (அதன் அரசுக்கு) தூர நோக்குத் தேவை என்று மிகச் சரியாகவும் பொருத்தமாகவும் கூறியுள்ளார்.

தனது செயல் திட்ட அறிக்கையை செயற்படுத்துவது குறித்துக் கிஞ்சித்தும் சிந்திக்காது, மனங்கொள்ளாது, தன்னை எந்தக் கொம்பனும் எதுவும் செய்யமுடியாது என்ற திமிருடன் அரசு தடம் பதித்தாலும் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை.

மக்கள் ஆதரவு, பெரும்பான்மை இன மக்களின் பேராதரவு இருக்கும் போது, பிறசக்திகளால் தன்னை எதுவும் செய்ய இயலாது என்ற அதீத நம்பிக்கை கொண்டும் அரசு செயற்பட முனைகிறது.

அரச துறைகள் மிகமிகப் பலவற்றிலும் அரசியல் தலையீடுகள் விரவிப் பெருகியுள்ளதால், நாட்டின் குடிசார் நிர்வாக நடைமுறைகள் பெரிதும் மலினப்பட்டுப் போயுள்ளன. அதன் பெறுபேறாக அரச நிர்வாகச் செயற்பாடுகளுக்கு எதிராக மக்கள் வீதியில் இறங்கிப் போராடும் நிலை உண்டாகி உள்ளது.

அரசாங்கத்திடமும் அரச தலைவர்களிடமும் தொழில் துறை மற்றும் வளர்ச்சித் திட்டங்களில் வெளிப்படைத் தன்மை இல்லாததால் வெளிநாட்டு முதலீடுகளை அதிக அளவில் ஈர்க்கமுடியவில்லை. அதனால் நாட்டின் பொருளாதார நிலை, அது சார்ந்த வளர்ச்சிப்படிகள் அடைபட்டுள்ளன.

போர் முடிவுக்கு வந்த பின்னரும், இன, மத வேறுபாடு இன்றி பாரபட்சம் இன்றி, மக்கள் மனங்களுக்கு எளிதில் புலப்படக்கூடிய நிம்மதியான வாழ்வியல் வரப்பிரசாதங்கள் எவையும் அரசினால் வெளிக் கொணரப்படவில்லை. இந்த நிலைமாறும் வரை, மாற்றப்படும் வரை மக்களுக்கு எந்த வகையிலும், எந்த விதம் சார்ந்தும் மீட்சியோ அன்றி சமாதான சகவாழ்வோ கிட்டமாட்டாது என்பதே யதார்த்தம்.

இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும், சகல இன மக்களுக்கும் இந்த நாட்டை செழிப்பான, சகல செல்வச் சிறப்புமுள்ள இடமாக மாற்றுவதற்கு, ஆளும் தரப்பினரிடம் தூரப் பார்வையும் பெருந்தன்மையும் தாராள மனப்பாங்கும் அவசியமானவை என்று கனேடியத் தூதுவர் வலியுறுத்தியுள்ளார். அவருடைய ஆக்கபூர்வமான தூர நோக்கு இந்த நாட்டு அரசுக்கு உண்டாகும் என்று கொள்ள முடியவில்லையே!

# கல்வயல் பாடசாலை படைமுகாமாகிறது

## கல்வி அதிகாரிகள் அசமந்தத்தால்

சாவகச்சேரி கல்வயலில் கல்வி அதிகாரிகளின் அலட்சியத்தினால் கைவிடப்பட்ட பாடசாலை, படையினரின் பெரிய முகாமாக விரிவாக்கப்பட்டு வருகிறது.

5ஆம் தரம் வரையிலான மாணவர்கள் கற்று வந்த கல்வயல் சைவப்பிரகாச வித்தியாலயமே இவ்வாறு படைமுகாமாக மாற்றப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் இராணுவத்தினர் இங்கு முகாம் அமைத்திருந்தனர். இந்த முகாமைத் தற்போது அவர்கள் விரிவாக்கி வருகின்றனர்.

இந்தப் பாடசாலை, 1996ஆம் ஆண்டு இடம்பெற்ற போர் நடவடிக்கையின் போது கடுமையாகச் சேதமடைந்தது.

எனினும் இந்தப் பாடசாலைக் கட்டடங்களைத் திருத்தி, மீள இயக்க நடவடிக்கை எடுக்கப்பட வில்லை.

இதன் காரணமாக கைவிடப்பட்ட நிலையில் இருந்த இந்தப் பாடசாலை வளவில் படையினர் முகாம் அமைத்தனர்.

இந்த முகாமையே படையினர் தற்போது விரிவாக்கி வருகின்றனர்.

சுமார் 10 பரப்புக் காணியில் அமைந்திருந்த இந்தப் பாடசாலையில் அமைத்துள்ள படைமுகாமுக்கு, தகரங்களினால் சுற்றுப்புறவேலி அமைத்து, அதனுள் புதிய தகரக் கூடாரங்களை அமைக்கும் பணிகள் வேகமாக இடம்பெற்று வருகின்றன.

மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் விரிவாக்கப்பட்டு வரும் இந்த இராணுவ முகாம், நிரந்தர படைத் தளமாகி விடுமோ என்று அயலில் உள்ள மக்கள் பெரும் அச்சமடைந்துள்ளனர்.

போரால் இடம்பெயர்ந்த இந்தப் பகுதி மக்கள் மீளக்குடியமர்ந்த போதும், இந்தப் பாடசாலையை மீள இயக்க கல்வி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. சுமார் 250 வரையான மாணவர்கள் மட்டுவில் மகாவித்தியாலயத்திற்கே செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர்.

கல்வி அதிகாரிகள் இந்தப் பாடசாலையைப் புனரமைத்து இயக்குவதில் காட்டிய அலட்சியப் போக்கே, அது தற்போது படையினரின் நிரந்தர முகாமாக மாற்றப்பட்டு வருவதற்குக் காரணம் என்று அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டுகின்றனர். (ம)

## இயங்காத நிலையில் 7 பாடசாலைகள்

தென்மராட்சி பிரதேசத்தில் ஏழு பாடசாலைகள் இன்னமும் திறக்கப்படாமல் உள்ளன.

இவற்றில் கல்வயல் சைவப்பிரகாச வித்தியாலயத்துடன் ஒட்டுவெளி அ.மி.த.க. பாடசாலை, மாசேரி அ.மி.த.க. பாடசாலை ஆகியவையும் படையினரின் பாவனையில் உள்ளன.

ஏனைய நான்கு பாடசாலைகளும் போர் அனர்த்தங்களால் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

கைதடி இலங்கைத் திருச்சபை தமிழ் கலவன் பாடசாலை, கெருடாவில் சரஸ்வதி வித்தியாலயம், அ.மி.த.க. பாடசாலை ஆகியவையே இன்னமும் திறக்கப்படாத நிலையில் கல்வி வலயத்தின் பொறுப்பில் உள்ளன.

இந்த விடயம் தொடர்பாக கல்வித் திணைக்களத்திடம் கேட்டபோது:-

இந்தப் பாடசாலைகளை மீள இயக்குவதற்கான ஆயத்த நிலையில் கல்வி வலயம் தயாராக உள்ளது. இந்தப் பாடசாலைகளை இயக்குவதற்கு மாணவர் பற்றாக் குறையாக உள்ளனர். இவற்றை இயக்க பெற்றோர் முன் வருவார்களாயின் மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.- என்று தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## 'அக்ஹரகார' நன்மைகளைப் பெறுவதில் வடக்கு, கிழக்கு மக்களுக்கு ஆர்வமில்லை

### காப்புறுதிக் கூட்டுத்தாபன சிரேஷ்ட ஆலோசகர்

யாழ்ப்பாணம், ஒக.31

அரச சேவையில் உள்ளோர் முழுமையாக 'அக்ஹரகார' நன்மைகளை அனுபவிக்க வேண்டும். வடக்கு, கிழக்கு மக்கள் இதில் அதிக ஆர்வம் காட்டுவதில்லை.

சேவையில் உள்ளோர் மரணமடைந்தால் 14 நாள்களுக்குள் திணைக்களத் தலைவர் ஊடாக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்குத் தெரியப்படுத்த வேண்டும். 'அக்ஹரகார' நன்மைகள் தொடர்பான விளக்கத்தை அரச சேவையில் உள்ளோர் முழுமையாக அறிந்திருக்க வேண்டும்.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட ஆலோசகர் எஸ்.என்.கதிரவேலு இவ்வாறு தெரிவித்தார். அரச அலுவலர்களுக்கான 'அக்ஹரகார' நன்மை தொடர்பான கருத்தமர்வு வேலணை பிரதேச சபையில் செயலாளர் செ.ரமேஷ் தலைமையில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட சிரேஷ்ட காப்புறுதி ஆலோசகர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு அரச சேவை யாளரும் ஒவ்வொரு மாதமும் 75 ரூபாவை விரும்பியோ விரும்பாமலே அரசுக்கு கட்டாயம் செலுத்த வேண்டும்.

இந்த நிலையில் அரச சேவையாளன் இழப்பு அல்லது நோய் தொடர்பான பிரச்சினை ஏற்படும் போது அதற்கான இழப்பீட்டு நிதியைப்பெற தகுதி உடையவனாக மாறுகின்றான். அந்த வகையில் இதய நோய் தொடர்பான சத்திரசிகிச்சையின் போது அதி கூடுதலான நிதியாக 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரை காப்புறுதி நிதி பெற உரித்துடையவராவார்.

இந்த விடயங்கள் தெரிந்தவர்கள் மற்றைய அலுவலருக்கும் தெரியப்படுத்த வேண்டும்.

வடக்கு-கிழக்கு மக்கள் இந்த விடயத்தில் குறைந்த விகிதத்திலேயே கூட்டுத்தாபனத்துடன் தொடர்பு வைத்துள்ளனர் என்று அவர் மேலும் கூறினார். (ம-50)

## நினைவுப் பேருரையும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், ஒக.31

அகில இலங்கை இந்துமாமன்றத்தின் முன்னாள் தலைவர் ஏ.பாலசுப்பிரமணியத்தின் 20 ஆவது வருட நினைவாக நடத்தும் நினைவுப் பேருரையும் நூல் வெளியீடும் நாளை சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொழும்பிலுள்ள இந்துமாமன்ற தலைமையக பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவர் வி.கயிலாசபிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் 'எல்லோரும் இன்புற்றிருக்க' எனும் தலைப்பில் நினைவுப் பேருரையை கலாநிதி ஆறு.திருமுருகன் நிகழ்த்துவார். அதனைத் தொடர்ந்து 'சைவ நற்சிந்தனைகள்' எனும் நூல் வெளியீடு இடம்பெறும். (ம-14)

## பரீட்சை ஆணையாளரிடமும் புலனாய்வுப் பிரிவு விசாரணை

கொழும்பு,ஒக.31

பரீட்சை ஆணையாளர் என். ஜே. புஸ்பகுமாரவிடம் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன என்று பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

பரீட்சை வினாத்தாள் மற்றும் பரீட்சை தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளரிடம் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தி வாக்கு மூலம் ஒன்றையும் பெற்றுக் கொண்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் இடம் பெற்றதாகக் கூறப்படும் பிரதேசங்களுக்கு புலனாய்வுப் பிரிவின் விசேட குழுக்கள் நேரில் சென்று விசாரணைகளை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# ஒகஸ்டில் மட்டும் குடாநாட்டுக்கு ஒரு லட்சம் சுற்றுலாப் பயணிகள்

யாழ்ப்பாணம், ஒக.31

போர் முடிவடைந்ததன் பின்னர் யாழ்.குடாநாட்டுக்கு 12.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர்.

இந்த மாதத்தில் மாத்திரம் ஒரு லட்சம் பேர் வந்துள்ளனர் என்று புள்ளி விவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடபகுதி தமிழர்களின் பிரதான நகரமாக யாழ்ப்பாணம் விளங்குகின்றது. போர்க்காலம் மற்றும் அதற்கு முன்னைய காலங்களில் யாழ்.குடா நாட்டுக்கான போக்குவரத்துக்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. குறிப்பாக வடபகுதியை தென்பகுதியுடன் இணைக்கும் பிரதான தரைமார்க்கமான 'ஏ-9' வீதி மூடப்பட்டிருந்தது.

இந்தநிலையில் 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் யாழ்.குடா நாட்டுக்கு அதிக எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகள்வந்துசெல்வதாக இராணுவப் பதிவேடுகளிலிருந்த புள்ளிவிவரங்களில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து இந்த மாதம் வரையில் 12.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளனர். அதிலும் ஒகஸ்ட் மாதத்தில் மாத்திரம் ஒரு லட்சம் சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர்.

இந்த மாதத்தில் யாழ்.குடாநாட்டுக்குள் 10 ஆயிரம் வாகனங்கள் வரையில் பிரவேசித்துள்ளன என்றும் அந்தப் புள்ளி விவரக்குறிப்பேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை விடுமுறை, நல்லூர் கந்தசுவாமி ஆலயத் திருவிழா காரணமாகவே ஒகஸ்ட் மாதத்தில் அதிக எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகள் யாழ்.குடாநாட்டுக்குள் வந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா நகரில் டெங்கு பலருக்குச் சிகிச்சை

## நுளம்பு பெருகும் இடங்களைக் கண்டறிந்து ஒழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்து

நெளுக்குளம், ஓக.30

வவுனியா நகரில் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் பெருகும் இடங்கள் பல கண்டறியப்பட்டுள்ளன.

மேலும் வவுனியா பஸார் பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களில் தொழில் புரியும் பலர், டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுள்ளனர்னெவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகர மக்களும் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களும் இணைந்து டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை இனங்கண்டு, அவற்றை ஒழிப்பதற்கானஒத்துழைப்பை வழங்குமாறு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியா மாவட்டக் கிளையினரும் சுகாதார வைத்திய அதிகாரிகளும் துண்டுப் பிரசுரங்கள் மூலமாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

> நகரப் பகுதியில் வசிப்போர் காய்ச்சல் ஏற்படுமிடத்து உடனடியாக அரச மற்றும் தகுதி வாய்ந்த மருத்துவர்களை நாடவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் நுளம்பு பெருகக் கூடிய பொருள்கள், தண்ணீர் தேங்கி நிற்கக் கூடிய இடங்கள் என்பவற்றை இல்லாதொழிக்குமாறு கூறப்பட்டுள்ளது.

மேலும் வடிகால்கள், வீதியோரங்கள், வீட்டுச் சூழல் என்பன சுத்தமாக வைத்திருக்கப்படல் வேண்டும்.

வீடுகளிலுள்ள நீர்த் தாங்கிகள் நுளம்பு பெருகாத வகையில் பாதுகாப்பாக மூடி வைத்திருக்கப்படல் வேண்டும்.

வீடுகளின் மேற்கூரைகளில் வைக்கப்பட்டுள்ள ரயர்கள், நீர் தேங்கி நிற்கக் கூடிய பொருள்கள் என்பன உடனடியாக அகற்றப்பட வேண்டும்.

பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருள்கள் வெற்றுத் தகரப் பேணிகள், வெற்றுப் போத்தல்கள், இளநீர்க் கோம்பைகள் என்பன உரிய வகையில் சேகரிக்கப்பட்டு நகரசபையின் கழிவகற்றும் வாகனம் வரும்போது ஒப்படைக்கப்படல் வேண்டும்.

வேலைத் தலங்கள் மற்றும் தங்குமிடங்களில் நுளம்பு கடிக்காதவாறு முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேலும் நகரப் பகுதியில் வசிப்போர் காய்ச்சல் ஏற்படுமிடத்து உடனடியாக அரச மற்றும் தகுதி வாய்ந்த மருத்துவர்களை நாடவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(க-402)

## மின் கம்பத்தில் லைற்றர்



மாங்குளம்,ஓக.31

இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான மின்கம்பத்தில் புகைப்பிரியர்களுக்கென 'லைற்றர்' பொருத்தப்பட்டுள்ளமை மக்களிடையே விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

பெரியகுளம் பகுதியில் ஏ-9 வீதியிலுள்ள உணவகம் ஒன்றுக்கு முன்பாக அமைந்துள்ள மின்கம்பத்திலேயே இந்த லைற்றர் பொருத்தப்பட்டுள்ளது.

தற்போது பொதுஇடங்களில் புகைப்பிடிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் இந்தச் செயற்பாடு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஏ-9 வீதியூடாகச் செல்லும் வாகனங்கள் பல இந்த உணவகத்தில் தங்கி நின்றே செல்கின்றன. வாகனங்களில் வரும் புகைப்பிரியர்கள் கடையில் சிகரெட்டை வாங்கிய பின்னர் வெளியில் வந்து இந்த லைற்றர் மூலமாக எரியூட்டி பின்னர் சாவகாசமாக புகையை ஊதித் தள்ளுகின்றனர். இதனால் அங்கு வரும் ஏனைய மக்கள் சிகரெட் புகையைச் சுவாசிக்க வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

சம்பந்தப்பட்டவர்கள் இது தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இங்குள்ள பலரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(க-422)

## கோரிக்கை புறக்கணிப்பு

அக்கராயன், ஓக.31

அக்கராயன் மத்திய பகுதியில் நூல் நிலையம் ஒன்றை அமைக்கவேண்டுமென்ற நீண்ட நாள் கோரிக்கை புறக்கணிக்கப்பட்டு வருவதாக இங்குள்ள மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இடப்பெயர்வு காலத்தின் போது அக்கராயனில் கரைச்சிப் பிரதேச சபையின் நூல் நிலையம் இயங்கி வந்தது.

அக்கராயன் மகாவித்தியாலயச் சூழலில் நூல் நிலையம் அமையுமானால் மாணவர்களின் கல்விக்கு இது பேருதவியாக இருப்பதுடன், அக்கராயன் கிழக்கு கெங்காதரன் குடியிருப்பு, இம்மாஸ் நகர், ஆரோக்கியபுரம், அமைதிபுரம், அம்பலப் பெருமாள்குளம் போன்ற கிராம மக்கள் பத்திரிகைகளை வாசிப்பதற்கும், நூல்களைப் பெற்றுக் கொள்வதற்கும் வசதிகள் உருவாகும் எனவும் மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-18)

## வாழைப்பழம், மரக்கறி விலையுயர்வு

முல்லைத்தீவு, ஓக.31

முல்லைத்தீவில் வாழைப்பழம் மற்றும் மரக்கறி வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதோடு அவற்றின் விலைகளும் உயர்ந்து காணப்படுகின்றன.

தற்போது இங்கு நிலவும் கடும் வறட்சி காரணமாகவே இந்த நிலை காணப்படுகின்றது. இதே வேளை மரக்கறி வகைகளை ஆங்காங்கு தமது வீடுகளில் வைத்து விற்பனை செய்வதால் சந்தை வியாபாரிகள் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-500)

## வேலிகளை அமைக்க முடியாத நிலையில் முல்லை விவசாயிகள்

முல்லைத்தீவு, ஓக.31

முல்லைத்தீவில் தமது விவசாய நிலங்களுக்கான பாதுகாப்பு வேலிகளை அமைக்க முடியாத நிலையில் தாம் உள்ளதாக இங்குள்ள விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். இந்த வேலிகளை அமைப்பதற்கான இடிகட்டைகள், கம்பிக் கட்டைகள் என்பனவற்றை வெட்டுவதற்கு அனுமதி வழங்கப்படாமையே இதற்கான காரணமெனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த மாவட்டத்தில் கால்நடைகள் அதிகமாகவுள்ளதால் விவசாய நிலங்களுக்குப் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படுவது முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

தற்போது கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் கால்நடைகளால் பயிர்கள் பெரும் சேதத்தை எதிர்கொண்டு வருகின்றன. இதனால் விவசாயிகளும் நட்டத்தை எதிர்நோக்குகின்றனர்.

கடந்த சிறுபோகத்தின் போது கால்நடைகளால் அழிக்கப்பட்ட பல நெல் வயல்கள் அறுவடை செய்யப்படாமலேயே கைவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே தமது பயிர் நிலங்களைப் பாதுகாப்பதற்குரிய பாதுகாப்பு வேலிகளை அமைப்பதற்குரிய இடிகட்டைகள், கம்பிக் கட்டைகள் என்பவற்றை வெட்டியெடுப்பதற்கான அனுமதியை வழங்குமாறு விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(க-500)

## குளத்தை நாடிவரும் காட்டு மிருகங்கள்

முல்லைத்தீவு, ஓக.31

முத்துஐயன்கட்டுகுளப் பகுதியில் யானைகளின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்படுவதால் அந்தப் பகுதி மக்கள் அச்சத்துடன் பொழுதைக் கழித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுகுளங்கள், நீர் நிலைகள் என்பன வற்றியமையால் காட்டு மிருகங்கள் குடிதண்ணீர் தேடி முத்துஐயன் கட்டுக் குளத்தை நாடி வருகின்றன. இவற்றுள் யானைகளும் அடங்கும். இவை குளத்தை அண்டிய பகுதியிலுள்ள நிலங்களில் செய்கை பண்ணப்பட்டுள்ள வாழை போன்ற பயன்தரு மரங்களை அழிப்பதோடு வீடுகளையும் நாசம் செய்கின்றன.

இதனால் இங்குள்ள மக்கள் அச்சத்துடனேயே பொழுதைக் கழித்து வருகின்றனர்.

(க-500)

## முக்கிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாத முருகானந்தாக் கல்லூரி

முரசுமோட்டை, ஓக.31

கண்டாவளைப் பிரதேசம் முரசுமோட்டைப் பகுதியிலுள்ள முருகானந்தாக் கல்லூரியில் கடந்த ஆண்டு இறுதித் தவணையிலிருந்து இதுவரை இணைந்த கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்கான ஆசிரியர்கள் நியமிக்கப்படாததால் உயர்தர வகுப்பு மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலை குறித்துப் பல தடவைகள் எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்ட போதிலும் இன்று வரை ஆசிரியர்களை நியமிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாததால் அதிருப்தி அடைந்த பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை வேறு பாடசாலைகளில் இணைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிய வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளைப் பிரதேசத்திலுள்ள முருகானந்தாக் கல்லூரியில் தரம் 6 இல் இருந்து க.பொ.த. உயர்தரம் வரை வகுப்புகள் நடைபெறுகின்றன. இந்தப் பாடசாலையில் விஞ்ஞானம், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களைக் கற்பித்து வந்த ஆசிரியர்கள் கடந்த ஆண்டு இறுதித் தவணையிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களின் இடத்திற்கு இன்று வரை ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை.

இடம்பெயர்ந்தபோது பல வழிகளிலும் பாதிக்கப்பட்டு மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் சகல செல்வங்களும் அழிந்தாலும் கல்விச் செல்வத்தையாவது பாதுகாப்போம் என்ற எண்ணக்கருவுடன் பிள்ளைகளின் கல்விக்கு முக்கியம் கொடுத்து வருகிறார்கள்.

இந்த நிலையில் கடந்த ஒரு வருடமாக மேற்படி பாடசாலையில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படாதது குறித்து பெற்றோர் மற்றும் ஆசிரியர் சங்கத்தினர் கல்வித் திணைக்களத்துக்குப் பல தடவைகள் அறிவித்திருந்தனர். இதேபோன்று அதிபரும் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்த போதிலும் இன்று வரை ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. இதனால் விரக்தியடைந்த பெற்றோர் தங்கள் பிள்ளைகளை வேறு பாடசாலைகளில் இணைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் இந்தக் கல்லூரி பெரும் பாதிப்புகளை எதிர்நோக்க வேண்டிவருமெனவும் கல்லூரிச் சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.

(க-115)

## மங்கைநகர் கிராம மக்களுக்கு பவுஸர் மூலமாக குடிதண்ணீர்

துணுக்காய், ஓக.31

மல்லாவி வடக்கிலுள்ள மங்கை நகர் கிராமத்தில் நிலவும் குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யுமுகமாக பவுஸர் மூலமாகக் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது.

குடிதண்ணீரைப் பெறுவதில் பல்வேறு சிரமங்களையும் எதிர்கொள்ளும் மங்கைநகர் மக்கள் பவுஸர் மூலமாக வழங்கப்பட்டு வரும் குடிதண்ணீரைப் பெறுவதற்கு முண்டியடிப்பதைக் காணமுடிகின்றது.



இந்த நிலையில் துணுக்காய்ப் பிரதேச சபையினர் ஒரு பவுஸர் மூலமாகவே 20 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு இரவு பகல் பாராது குடிதண்ணீர் வழங்கி வருகின்றனர்.

இதனைக் கண்ட துணுக்காயில் வசிக்கும் கமலேஸ்வரன் குடும்பத்தினர் மேலும் ஒரு தண்ணீர் பவுஸரைக் கொள்வனவு செய்வதற்கென 3 லட்சத்து 10 ஆயிரம் ரூபாவை பிரதேச சபையிடம் கையளித்துள்ளனர்.

இதன் மூலமாக மேலுமொரு பவுஸரைக் கொள்வனவு செய்து மேலும் பல கிராம மக்களுக்குக் குடிதண்ணீரை வழங்க முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

(க-415)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லுண்டாய் வெளியில் குப்பை கொட்ட அனுமதி

## கண்காணிப்பாளரும் நியமனம்

யாழ்ப்பாணம், ஓக.31
கல்லுண்டாய் வெளியில் குப்பைகளைக் கொட்டுவதற்கு யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது.

எனினும் இந்தப் பகுதி மாநகர சபைக்குச் சொந்தமானது எனச் சட்டபூர்வமாக உறுதிபபடுத்தப்படவில்லை என யாழ். மாநகரசபை சுகாதாரக் குழுவின் தலைவர் எஸ்.விஜயகாந்த் தெரிவித்தார்.

புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இந்த விடயம் கூறப்பட்டது.

**இந்தப் பகுதி மாநகர சபைக்குச் சொந்தமானது எனச் சட்டபூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை.**

கல்லுண்டாய் பகுதியில் யாழ்.மாநகர சபை மட்டுமன்றி மூன்று பிரதேச சபைகள் குப்பைகளைக் கொட்டுகின்றன.

தனியார் நிறுவனங்களும் கழிவுகளைக் கொட்டுகின்றன. அதனால் குறிப்பிட்ட பகுதியில் ஒழுங்கற்ற முறையில் குப்பைகள் பரவலாகக் கொட்டப்படுகின்றன.

இதனால் கழிவுகளுடன் வாகனங்களைச் செலுத்திச் செல்ல முடியாத நிலை உள்ளது. இதனைக் கட்டுப்படுத்திக் கழிவுகளை உரிய முறையில் அகற்றுவதைக் கண்காணிக்க ஒருவர் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்.

மாநகர சபைக்கு உட்பட்ட நவீன சந்தை, நவீன சந்தையிலுள்ள மரக்கறிச் சந்தை, பாஷையூர், குருநகர், நாவாந்துறை, அரியாலை, பண்ணை, கல்வியங்காடு ஆகிய பகுதிச் சந்தைகளை மேற்பார்வை செய்ய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சுத்திகரிப்புப் பணிகளின் போது காணப்படும் குறைபாடுகள் குறித்து 0213207625, 0718627640 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் மாநகர சபையில் நடைபெற்ற இந்தச் செய்தியாளர் சந்திப்பில் கூறப்பட்டது. (ம-7)

# விரைவுப் பொதி சேவையில் அனுப்பிய பொருள் மாயம்

## இழப்பை மீளவழங்குமாறு உரிமையாளர் கோரிக்கை

*யாழ்ப்பாணம், ஓக.31*

*வெளிநாட்டில் இடம்பெற்ற நிகழ்வுக்காக யாழ்ப்பாணத்திலிருந்து (கூரியர்) விரைவுப் பொதிச் சேவை மூலம் அனுப்பப்பட்ட பொருள்கள் நிகழ்வு முடிந்து பதினைந்து தினங்களாகியும் உரியவர் கைக்கு எட்டாததால் தமக்கு ஏற்பட்ட இழப்பை மீள வழங்குமாறு பொதிச் சேவை நிறுவனத்தினிடம் பொதி கையளித்தோர் கோரியுள்ளனர்.*

*கடந்த 15 ஆம் திகதி லண்டனில் நடைபெறவிருந்த நிகழ்வுக்காக யாழ்ப்பாணம் துன்னாலை மேற்கில் வதியும் ஒருவர் யாழ்ப்பாணத்திலுள்ள பொதிகள் விரைவுச் சேவை நிலையத்தில் 14 கிலோ நிறையுடைய பொருள்களை அனுப்புவதற்காக ஜூலை 31 ஆம் திகதி 12 ஆயிரம் ரூபா செலுத்தி பொருள்களைக் கையளித்துள்ளார்.*

*பொருள்கள் கையளித்து ஒரு மாதமாகியும் இதுவரை குறித்த முகவரிக்குப் போய்ச் சேரவில்லை எனவும் நிகழ்வுக்கு தேவையென கருதி அனுப்பியும் இதுவரை அவை கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.*

*இந்த நிலையில் தாம் அனுப்பிய பொருள்களை மீள வழங்குமாறும் அனுப்புவதற்குச் செலுத்திய கட்டணத்தை வழங்குமாறும் நிலையத்தினருடன் பொதிக்குரியவர்கள் வாக்குவாதப்பட்டு வருகின்றனர். (ம-9)*

# கூட்டுறவு சங்கங்களின் ஆளணியை ஒழுங்கமைக்கப் புதிய நடைமுறை

## கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.31
கூட்டுறவுச் சங்கங்களின் தற்போதைய ஆளணியை மீளாய்வு செய்து அதனைத் தேவைக்கு ஏற்ப ஒழுங்கமைப்பதற்குப் புதிய நடைமுறை ஒன்று செயற்படுத்தப்படவுள்ளது என்று யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-


பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் இரண்டாம் படி சங்கங்கள் ஆகியவற்றின் ஆளணிப் பட்டியல் கடந்த பல ஆண்டுகளுக்கு முன்பாகவே தயாரிக்கப்பட்டது.

இந்த ஆளணியை மீளாய்வு செய்து தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்றவாறு புதிதாக ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதிக எண்ணிக்கையான ஆளணியைக் கொண்டு செயற்படும் சங்கங்கள் தற்போதைய சூழலில் நஷ்டத்தையே எதிர்கொள்ளும்.

சில சங்கங்களில் ஆளணியின் எல்லையை மீறிப் பணியாளர்களை இணைத்தமையால் போதிய வருமானம் இன்றி நஷ்டமடையும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடந்த கால ஆளணியை மீளாய்வு செய்து தற்போதைய சங்கங்களின் வருமான நுகர்ச்சி வியாபாரத்துக்கு ஏற்ப ஆளணிகள் ஒழுங்கமைக்கப்படும். இந்தப் புதிய ஆளணி மீளாய்வு இந்த ஆண்டுக்குள் நடைமுறைப்படுத்தப்படும் என்று மேலும் கூறினார். (எ-17)



*கொடிகாமம் வெள்ளாம்போக்கட்டியில் உள்ள வைரமுத்து துரைசிங்கம் என்பவரது வீட்டில் கடந்த புதன்கிழமை சமையலுக்காக தேங்காய் உடைத்தபோது தேங்காய்க்குள் இரண்டு பிரிவுகளாகக் காணப்பட்டன. இந்த அதிசயத்தை பெருமளவு மக்கள் பார்வையிட்டு வருகின்றனர். (3-9)*

# துர்க்கையம்மன் திருவிழாவில் இம்முறை திருட்டுகள் இல்லை

வலி.வடக்கு, ஓக.31
தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்திருவிழாக் காலங்களில் ஆலயச் சூழலில் திருட்டுச் சம்பவங்கள் எவையும் இடம்பெறவில்லை என்றும் அவ்வாறான முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் திருவிழாக் காலங்களில் கடமையில் ஈடுபட்டதுடன் சந்தேகத்துக்கு இடமானவர்களைக் கண்காணித்தும் வந்துள்ளனர்.

பொலிஸாரின் கண்காணிப்பு நடவடிக்கைகளால் திருட்டுகள் தவிர்க்கப்பட்டுள்ளன.

காங்கேசன்துறைப் பொலிஸ் அத்தியட்சகர் காமினி நவரத்னவின் பணிப்புரைக்கு அமைய தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கஸ்தூரி ஆராய்ச்சி தலைமையிலான பொலிஸார் கடமையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

# மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் செப்ரெம்பர் முற்பகுதியில் நடக்கும்

சகல திணைக்களத் தலைவர்களும் பங்குபற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் செப்ரெம்பர் மாத முற்பகுதியில் நடத்த அரச அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

சகல திணைக்களத் தலைவர்களும் அபிவிருத்தித் திட்டம் தொடர்பான முன்னேற்ற அறிக்கைகளின் விவரங்களை எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன் வன், மென் பிரதிகளாக வழங்க வேண்டும்.

முன்னேற்ற அறிக்கையின் மாதிரிப் படிவத்துக்கு அமைய இவை தயாரிக்கப்பட வேண்டும் என்று அரச அதிபர் சு.அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் அனுமதி பெறவேண்டிய திட்டங்கள், 31.08.2012 வரையான அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற அறிக்கை அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதில் ஏற்படும் தடைகள் அதற்காக முன்வைக்கப்படும் ஆலோசனைகள், திட்டங்கள் தொடர்பான வரைபடங்கள் உரிய தலைப்புக்களுடன் முன்வைக்கப்பட வேண்டும் என அரச அதிபர் கோரியுள்ளார்.

இதேவேளை, நீண்ட கால இடைவெளிகளின் பின்னர் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெறவுள்ளதால் இங்கு புறநெகும மற்றும் என்றிப், பி.எஸ்.டி.ஜி, டிசிபி, சிபிஜி மற்றும் முன்னிலை அமைச்சுக்களின் இடர்பாடுகள், அபிவிருத்தி குறித்து ஆலோசிக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம-41)

# புங்குடுதீவு ஆஸ்பத்திரிக்கும் நிரந்தர வைத்தியர் தேவை

யாழ்ப்பாணம், ஓக.31
புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையிலும் நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் புங்குடுதீவு மக்கள் கோருகின்றார்கள்.

புங்குடுதீவில் தற்போது கணிசமான மக்கள் குடியமர்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் எமது பகுதியில் உள்ள நோயாளர்கள் வைத்திய நடவடிக்கைகளுக்காக வேலணை, ஊர்காவற்றுறை வைத்தியசாலைகளுக்குச் செல்ல வேண்டியுள்ளது.

நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்தப் பகுதியில் உள்ள நோயாளர்களின் கஷடங்களைத் தவிர்க்க , வேண்டும் எனவும் தெரிவிக்கின்றார்கள்.

தற்சமயம் புங்குடுதீவில் ஒரு வைத்தியர் தற்காலிக கடமையில் உள்ளார். கடந்த ஆறு மாதங்களாக அந்த வைத்திய அதிகாரி கடமையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நெடுந்தீவு வைத்தியசாலையிலும் நிரந்தர வைத்தியர் ஒருவர் இன்மையால் அந்தப் பகுதி மக்களும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

நெடுந்தீவுக்கு தற்காலிக வைத்தியர் ஒருவர் கடமையில் உள்ளபோதும் நிரந்தர வைத்தியரின் சேவை அவசியம் என்று பல தரப்பினரும் கருத்துக்கள் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# நீண்டகாலமாகச் சிறையில் வாடுவோருக்குப் புனர்வாழ்வு

## மனித உரிமைகள் நிறுவனம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக.31
நீண்டகாலமாக யாழ். சிறைச்சாலையில் கைதிகளாக இருப்போருக்கு மனித உரிமைகள் நிறுவனத்தின் ஊடாகப் புனர்வாழ்வுக்கு உதவி செய்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

மனித உரிமைகள் நிறுவனத்தில் கைதிகளுக்கான நிகழ்வு ஒன்று கடந்த சனிக்கிழமை யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் சேனக பண்டார தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறைச்சாலையில் கைதிகளாக உள்ளோருக்குப் பிணை கிடைக்கப்பெறும் சந்தர்ப்பங்களில், பிணை எடுப்பதற்கு ஆள்கள் இல்லாத சந்தர்ப்பம், சட்டத்தரணிகள் கிடைக்காத, நீண்டகாலமாக திகதிகளைப் புதுப்பித்து சிறைக்குள்ளேயே முடங்கி கிடக்கும் கைதிகளுக்கு புனர்வாழ்வு அளிப்பதே நோக்கமாகக் கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலைப்பாட்டுடன் 35 கைதிகள் உள்ளனர். இவர்களின் புனர்வாழ்வுக்காக மனித உரிமைகள் நிறுவனத்துடன் இணைந்து சட்டத்தரணிகளான ஜெயரூபன், அற்புதராஜ், சண்முகநாதன் ஆகியோர் செயற்படவுள்ளனர். இந்தக் கைதிகளின் பெயர் மற்றும் விவரங்களை அவர்கள் பெற்றுள்ளனர் எனவும் விரைவில் புனர்வாழ்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் கூறப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ். சிறைச்சாலை பிரதான பாதுகாவலர் எஸ்.இந்திரன், சிறைச்சாலை நலன்புரி செயலாளர் பி.துசிதரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ம-13)

# கைதடி மருந்தகத்துக்கு ரூ. 10 மில்லியன் செலவில் கட்டடம்

கைதடி மத்திய மருந்தகத்துக்கு புதிய கட்டடம் 10 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், மாகாண சுகாதார அமைச்சின் பணிப்பாளர் வைத்தியர் லூட்ஸ், சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் இ.கேதீஸ்வரன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

கைதடி மத்திய மருந்தக வளாகத்தினுள் இந்தக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பினேன் பிரணாப்பை; அதனால் கைவிட்டேன் உண்ணாவிரதத்தை

## கருணாநிதி தரும் விளக்கம்



சென்னை, ஒக.31

இலங்கையில் போர் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது என்று மத்திய அரசின் அன்றைய வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறிய தகவலை நம்பித்தான் உண்ணாவிரதத்தைக் கைவிட்டேன் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்தார்.

இதுதொடர்பாக நேற்று முன்தினம் புதன்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:-

அ.தி.மு.க. செயற்குழுவில் நிறைவேற் றப்பட்ட தீர்மானங்களில் மக்களுக்காக என்ன செய்யப்போகிறோம் என்று சொல்வதற்கு மாறாக, தி.மு.கவையும் என்னையும் திட்டுவது தான் நோக்கம் என்ற அடிப்படையில் வார்த்தைகளைக் கொட்டியிருக்கின்றனர்.

இலங்கைத் தமிழர்களுக்காக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் முற்றிலும் என் மீதான தாக்குதல்கள்தான்.

இலங்கையில் இனக் கலவரம் உச்சக் கட்டத்தில் இருந்தபோது, மத்திய அரசை வலியுறுத்தவில்லை என்றும், அப்பாவி இலங் கைத் தமிழர்கள் அழிவுக்கு நான் தான் காரணம் என்றும் கூறப்பட்டுள்ளது.


இலங்கைத் தமிழர்களைக் கொல்ல வேண்டும் என்று இலங்கை இராணுவம் எண்ணவில்லை. போர் நடக்கும்போது அப்பாவி மக்கள் கொல்லப்படுவர் என்று இறுதி போர் நடைபெற்ற 2009 ஆம் ஆண்டு ஜெயலலிதா அறிக்கை வெளியிட்டார்.

இவ்வாறெல்லாம் ஜெயலலிதா சொன்னதால்தான் இலங்கைத் தமிழர்களை இலங்கை இராணுவத்தினர் கொன்று குவித்தனர். எனவே, இலங்கைத் தமிழர்கள் அழிவுக்கு யார் காரணம் ஜெயலலிதாவா, நானா?

இறுதிப்போரின்போது நான் ஒன்றும் செய்யவில்லை என்று ஜெயலலிதா கூறியுள்ளார். இலங்கைத் தமிழர்களுக்காக மனித சங்கிலி நடத்தினோம். அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் பிரதமரை நேரில் சந்தித்து வலியுறுத் தினோம். சென்னையில் பேரணி நடத்தினோம். இதற்கெல்லாம் மேலாக 27.4.2009 அன்று உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினேன். இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை போர் நிறுத்தம் செய்யப்பட்டுவிட்டது என்று பொய்யான தகவலைக் கூறி நான் கைவிட்டதாக ஜெயலலிதா கூறியுள்ளார்.

ஆனால், இலங்கையில் போர் நடவடிக்கைகள் முற்றுப்பெற்றுவிட்டன என்று அப்போது வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த பிரணாப் முகர்ஜி அறிக்கை வெளியிட்டதன் பேரிலேயே உண்ணா விரதத்தைக் கைவிட்டேன். மத்திய முக்கிய அமைச்சர் ஒருவரே இவ்வாறு அறிவித்த பிறகும் எப்படி நம்பாமல் இருக்க முடியும்- என்று அதில் கேள்வி எழுப்பியுள்ளார். (வ)

# ஈரான் மதத் தலைவருடன் மன்மோகன் சிங் சந்திப்பு



பிரதமர் மன்மோகன் சிங் ஈரான் மதத் தலைவர் அலி கொமேனியைச் சந்தித்து இரு தரப்பு விவகாரங்கள் குறித்து உரையாடியுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

அணிசேரா மாநாட்டில் பங்குகொள்ள ஈரானுக்கு பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மன்மோகன் சிங் ஈரான் ஜனாதிபதி முகமது அகமதி நிஜாத்தைச் சந்தித்துக் கலந்துரையாடினார். பின் ஈரான் ஜனாதிபதியுடன் சேர்ந்து அலி கொமேனியைச் சென்று சந்தித்துள்ளார்.

சுமார் 40 நிமிடம் நீடித்த இந்த உரையாடலின் போது விவாதிக்கப்பட்ட விடயங்கள் குறித்து அதிகாரபூர்வமாக எதுவும் தெரிவிக்கப்படாத நிலையில் எண்ணெய் - எரிவாயு விநியோகம், சிரியா உள்ளிட்ட சர்வதேச மற்றும் இரு தரப்பு விவகா ரங்கள் ஆகியவை கலந்து ரையாடலில் இடம் பெற்றி ருக்கலாம் என்று இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் கோதுமை, தேயிலை ஆகியவற்றை ஈரானுக்கு ஏற்றுமதி செய்வது குறித்தும் பேசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானிடமிருந்து இந்தியா பெற்றோல் இறக்குமதி செய்வதற்கு அமெரிக்கா கடும் எதிர்ப்புத் தெரிவித்துவரும் நிலையில் பிரதமர் மன்மோகன் சிங் ஈரானின் முக்கிய தலைவர்களைச் சந்தித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (வ)

# எஸ்.எம்.எஸ்களுக்கான தடை இன்றுடன் முடிவு

எஸ்.எம்.எஸ் மற்றும் எம்.எம்.எஸ்களுக்கு மத்திய அரசால் விதிக்கப்பட்டிருந்த தடைஇன்றுடன் முடிவடைகிறது.

அஸாம் கலவரம் மற்றும் அதைத்தொடர்ந்து புனே மற்றும் பெங்களூரில் வடகிழக்குப் பகுதி மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு குறித்து பல்வேறு வதந்திகள் கைபேசிகள் மூலம் பரவியதை அடுத்து இந்த தடை நடவடிக்கையை நடைமுறைப்படுத்துமாறு தொலைத் தொடர்பு துறைக்கு மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டது.

இதன்படி கடந்த 17 ஆம் திகதி எஸ்.எம்.எஸ். மற்றும் எம்.எம்.எஸ்-களுக்கு தடை விதிக்கப்பட்டது. இதையடுத்து, 5 எஸ்.எம். எஸ் களுக்கு மேல் அனுப்ப முடியாத நிலை இருந்தது. இந்த நிலையில் ஐந்து எஸ்.எம்.எஸ்களுக்குப் பதிலாக 20 எஸ்.எம்.எஸ்.கள் வரை அனுப்பலாம் என்று கடந்த 23 ஆம் திகதி மத்திய அரசு அறிவித்தது.



சென்னையில் பழம் பெரும் இசையமைப்பாளர்கள் விஸ்வநாதன்- ராமமூர்த்தி ஆகியோருக்கு நடந்த பாராட்டுவிழாவில் முதல்வர் ஜெயலலிதா கலந்து கொண்டு பரிசு வழங்கினார். இரு மருங்கிலும் ரஜினி, கமல்.

# பத்ம விருதுக்கான பரிந்துரையை நிராகரித்து விட்டது மத்திய அரசு

## ஜெ குற்றச்சாட்டு

தமிழ் திரையுலகில் மெல்லிசை மன்னர்கள் என்று அழைக்கப்படும் எம்.எஸ். விஸ்வநாதன் மற்றும் டி.கே. ராமமூர்த்தி ஆகிய இருவருக்கும் பத்ம விருதுகள் வழங்க வேண்டும் என்று, தான் அளித்த பரிந்துரையை மத்திய அரசு நிராகரித்துவிட்டதாக தமிழக முதல்வர் ஜெயலலிதா குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை நடைபெற்ற ஜெயா தொலைக்காட்சியின் 14 ஆம் ஆண்டு ஆரம்ப விழா மற்றும் எம்.எஸ். விஸ்வநாதன் - டி.கே. ராமமூர்த்தி ஆகியோருக்கான பாராட்டு விழாவில் உரையாற்றுகையிலேயே முதல்வர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

அங்கு அவர் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த ஆண்டுக்கான பத்ம விருதுக்கு அவர்களது பெயர்களை மத்திய அரசுக்கு பரிந்துரைத்தேன்.

ஆனால், மாநில அரசுக்கு எதிரான கருத்தை உடைய மத்திய அரசு அதற்கு செவிசாய்க்கவில்லை.- என்றார்.

நான் சொன்னால் இந்த விருதை அளிக்கும் காலம் கனிந்து வருகிறது. அப்போது அவர்களுக்கு பத்ம விருதுகள் கிடைக்கச் செய்வேன் - என்றார். (வ)

# குணமடைந்தார் மதுரை ஆதீனம்

நலக்குறைவு காரணமாக சென்னையில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த மூத்த ஆதீனம் தற்போது நலமுடன் இருக்கிறார். கடந்த சில தினங்களுக்கு முன்பு நலக் குறைவு காரணமாக சென்னையில் உள்ள நண்பர் வீட்டுக்குச் சென்றார்.

அங்கிருந்து சென்னை அப்பலோ மருத்து வமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் குணமடைந்து மருத்துவமனையிலிருந்து வெளி வந்தார். தான் நலமுடன் இருப்பதாகவும் அவர் கூறினார். (வ)

# 11 கருணை மனுக்கள் பிரணாப்பின் பரிசீலனையில்



இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் பரிசீலனைக்காக 11 கருணை மனுக்கள் நிலுவையில் உள்ளன. கருணை மனுக்கள் தொடர்பாக தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் சுபாஷ் அகர்வால் என்பவர் கோரிருந்ததற்கு மத்திய அரசு அளித்துள்ள பதிலில், ஜனாதிபதி மாளிகைக்கு அனுப்பப்பட்ட 26 கருணை மனுக்களை மீண்டும் பரிசீ லிப்பதற்காக 2009-2012 காலகட்டத்தில் உள்துறை அமைச்சகம் திரும்பப் பெற்றுக் கொண்டது. இந்த ஆவணங்கள் மீண்டும் சமர்ப்பிக்கப்பட்ட பின், அப்போது ஜனாதிபதியாக இருந்த பிரதிபா பாட்டீல் 18 மனுக்கள் மீது முடிவெடுத்தார். எஞ்சியுள்ள எட்டு மனுக்களும் தற்போதைய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி முன் பரிசீலனையில் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தாக்குதல் குற்றவாளி அப்சல் குரு உட்பட மூன்று பேரின் கருணை மனுக்களும் அவரது பரிசீலனையில் உள்ளன. பஞ்சாப் முதல்வர் பியாந்த் சிங்கைக் கொலை செய்த பல்வந்த் சிங் ரஜோனாவின் கருணை மனு மட்டும் உள்துறை அமைச்சகத்திடம் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 2 ஹெலிகள் குஜராத் நடு வானில் நேருக்கு நேர் மோதிச் சிதறின



விமானப்படைக்குச் சொந்தமான இரண்டு எம்ஐ–17 ரக ஹெலி ஜாம்நகர் தளத்தில் இருந்து நேற்று பயிற்சிக்காகப் புறப்பட்ட போது விபத்தில் சிக்கின.

ஜாம்நகர், ஒக.31

குஜராத்தில் இந்திய விமானப் படைக்குச் சொந்தமான இரண்டு ஹெலிகொப்டர்கள் நடுவானில் மோதிச் சிதறி உடைந்து விழுந்ததில் 6 விமானப் படையினர் உயிரிழந்தனர்.

விமானப்படைக்குச் சொந்தமான இரண்டு எம்ஐ-17 ரக ஹெலிகொப்டர்கள் குஜராத் மாநிலம் ஜாம்நகர் தளத்தில் இருந்து நேற்று பயிற்சிக்காகப் புறப்பட்டன.

பிற்பகல் 12.25 மணியளவில் ஜாம்நகரில் இருந்து 20 கிலோமீற்றர் தொலைவில் உள்ள சர்மத் கிராமத்தின் மீது பறந்து கொண்டிருந்தபோது திடீரென இரு ஹெலி கொப்டர்களும் மோதிக் கொண்டன.

இதில் முன்னால் சென்ற ஹெலிகொப்டரின் வால் பகுதி உடைந்து விழுந்தது. தொடர்ந்து அந்த ஹெலிகொப்டரும் பலமுறை குட்டிக்கரணம் அடித்தபடி தரையில் விழுந்து நொறுங்கியது.

அதேபோல பின்னால் சென்ற ஹெலிகொப்டரின் இறக்கை உடைந்து சிதறியதோடு, அந்த ஹெலிகொப்டரும் மிக வேகத்தில் தரையில் விழுந்து சிதறியது.

இதில் ஹெலி கொப்டர்களில் இருந்த 6 விமானப்படையினரரும் உயிரிழந்தனர். மேலும் தரையில் இருந்த 3 பேர் படுகாயம் அடைந்தனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரை வெல்ல அவகாசம் தேவை

## சிரிய ஜனாதிபதி செவ்வி


பிராந்திய மற்றும் பூகோள ரீதியான போரை சிரியா தற்போது எதிர்கொள்வதாகவும் இந்தப் போரை சிரியா வெல்வதற்கு கால அவகாசம் தேவைப்படும் எனவும் சிரிய ஜனாதிபதி பஷார் அல் அஸாத் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

சிரியாவின் வடபிராந்தியத்திலுள்ள டவ்டானஸ் விமான நிலையத்துக்கு அருகில், அரச படையிருக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் மீண்டும் மோதல்கள் ஆரம்பித்துள்ள நிலையில் சிரிய தொலைக்காட்சியொன்றுக்கு அளித்த செவ்வியில் ஜனாதிபதி அஸாத் இவ்வாறு குறிப்பிட்டார்.

செவ்வியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் முன்னேறுகிறோம். கள நிலவரம் முன்னேற்றமடைந்துள்ளது. ஆனால் இன்னும் நாம் வெற்றி பெறவில்லை. இதற்கு மேலும் காலம் தேவைப்படும்.

போரால் இடம்பெயரும் மக்களுக்காக சிரிய எல்லைக்குள் மோதல் தவிர்ப்பு வலயமொன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற துருக்கியின் கோரிக்கையையும் அவர் நிராகரித்தார்.



போரால் இடம்பெயரும் மக்களுக்காக சிரிய எல்லைக்குள் மோதல் தவிர்ப்பு வலயமொன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற துருக்கியின் கோரிக்கையையும் அஸாத் நிராகரித்தார். மோதல் தவிர்ப்பு வலயத்தை ஏற்படுத்தும் திட்டம் இல்லை.

மோதல்தவிர்ப்புவலயத்தை ஏற்படுத்தும் திட்டம் இல்லை. அத்துடன் இது சிரியாவின் எதிரிகளின் யதார்த்தபூர்வமற்ற யோசனையாகும்.

இத்தகைய மோதல் தவிர்ப்பு வலயமொன்றை ஏற்படுத்துவதற்கு தனது சகாக்களுடன் இணைந்து பிரான்ஸ் முயற்சித்து வருவதாக பிரெஞ்சு ஜனாதிபதி பிரான்ஸுவா ஹொலன்டே கடந்த திங்கட்கிழமை கூறியமை குறிப்பிடத்தக்கது.

எனினும், இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது மிகச் சிக்கலானது என்று பிரெஞ்சு வெளிவிவகார அமைச்சர் லோரட்ன் பபியுஸ் நேற்று முன்தினம் புதன்கிழமை ஒப்புக் கொண்டுள்ளார். இதற்கு பகுதியளவிலான விமானப் பறப்பு தடை வலயங்களையும் ஏற்படுத்த வேண்டியிருக்கும்-என்றார்.

# அமெ. ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தில் ஒபாமாவுக்கு எதிரான ஆவணப்படம்

## வரவேற்பு அமோகம்




வோஷிங்டன், ஓக.31

அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம் சூடுபிடித்து வரும் நிலையில், பராக் ஒபாமாவுக்கு எதிரான ஆவணப்படம் ஒன்று வெளியாகி உள்ளது.

இந்த ஆவணப் படத்தை அமெரிக்க வாழ் இந்தியர் தயாரித்துள்ளார். 2016 ஆம் ஆண்டில் ஒபாமாவின் அமெரிக்கா என்று பெயரிடப்பட்டுள்ள இந்த ஆவணப் படத்தைக் காண இரண்டு கட்சியினரும் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

இந்த ஆவணப்படம் அமெரிக்காவில் 1800 திரையரங்குகளில் திரையிடப்பட்டுள்ளது. கடந்த வாரம் இந்த ஆவணப் படம் மிகச் சிறந்த 10 திரைப்படங்களுள் 7 ஆவது இடத்தைப் பிடித்தது. இதன் மூலம் வசூலான தொகை 93 கோடி டொலராகும். (வ)

# 2ஆம் உலகப் போருக்காகத் தயாரித்த வெடிகுண்டு வெடித்ததால் பரபரப்பு



இரண்டாம் உலகப் போருக்காகத் தயாரிக்கப்பட்ட 250 கிலோ எடை கொண்ட வெடிகுண்டு ஜேர்மனியில் வெடிக்கச் செய்யப்பட்டதால் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

இரண்டாம் உலகப் போருக்குக் காரணமான ஜேர்மனியில் அந்தப் போரின் போது பயன்படுத்த வைத்திருந்த குண்டுகள் பல இடங்களில் புதையுண்டு கிடக்கின்றன. இவற்றை செயலிழக்கச் செய்யும் முயற்சிகள் நடக்கின்றன.

இதற்கிடையே ஸ்க்வாபிங் மாவட்டத்தில் 250 கிலோ எடை கொண்ட குண்டு கண்டுபிடிக்கப்பட்டது. இதை செயலிழக்க செய்யும் முயற்சி தோல்வியடைந்தது.

இதையடுத்து இந்த குண்டு முனிச் நகரத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு கடந்த செவ்வாய்க்கிழமை வெடிக்கச் செய்யப்பட்டது.

இந்த சக்தி வாய்ந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்வதற்கு முன்னதாக அந்த பகுதியில் இருந்த 3 ஆயிரம் மக்கள் வெளியேற்றப்பட்டனர். குண்டு வெடித்ததால் எழுந்த நெருப்பு கடந்த மூன்று தினங்களாக எரிந்து கொண்டிருக்கிறது.

# ஆம்ஸ்டர்டாம் ஷிபோல் விமான நிலையத்தில் குண்டுகள் மீட்பு

நெதர்லாந்தில் உள்ள ஆம்ஸ்டர்டாம் ஷிபோல் விமான நிலையத்தில் இரண்டாம் உலகப் போரின் போது பயன்படுத்தப்பட்ட குண்டுகள் மீட்கப்பட்டதையடுத்து, விமான நிலையத்தின் ஒரு பகுதி மூடப்பட்டது.

இதுகுறித்து ஷிபோல் விமான நிலையச் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், கடந்த 1945 ஆம் ஆண்டில் நிகழ்ந்த இரண்டாம் உலகப் போரின் போது பயன்படுத்தப்பட்ட குண்டுகள் கைப்பற்றப்பட்டன.

இது அங்கு பெரும்பரபரப்பை ஏற்படுத்தியதையடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விமான நிலையத்தின் சி டெர்மினல் அவசரமாக மூடப்பட்டது.

இதனால் பல்வேறு விமானங்களின் சேவைகளிலும் தாமதம் ஏற்பட்டது என்றார்.

(வ)

# கடற் பகுதியை கண்காணிக்க ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்தும் சீனா

கடல் எல்லை தொடர்பாக பல நாடுகளுடன் மோதலில் ஈடுபட்டுள்ள சீனா, அவற்றைக் கண்காணிக்க ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

தென் சீனக் கடல் மற்றும் வட சீனக் கடல் பகுதியை கட்டுப்படுத்துவதில் ஜப்பானில் ஆரம்பித்து வியட்நாம் வரை பல நாடுகளுடன் மோதலில் உள்ளது சீனா.

அதே போன்று இந்தப் பகுதியில் எண்ணெய் ஆய்வுப் பணிகளில் ஈடுபட இந்தியாவுக்கு ஏனைய நாடுகள் அனுமதி தருவதையும் சீனா எதிர்த்து வருகிறது.

இந்தநிலையில் தனது கடல் எல்லைக் கண்காணிப்பைத் தீவிரப்படுத்த ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா பயன்படுத்துவது போன்று ஆளில்லா விமானங்களைக் கொண்டு கண்காணிக்க முடிவு செய்துள்ளது.

(வ)



அமெரிக்கா சென்றிருந்த ஜனதாக் கட்சித்தலைவர் சுப்ரமணிய சுவாமி வெர்ஜினியாவில் நடந்த விருந்து நிகழ்ச்சியில் ஜனாதிபதி ஒபாமாவைச் சந்தித்த வேளை..

# பாகிஸ்தானில் கிறிஸ்தவர்களுக்கு பாதுகாப்பு ஏதுமில்லை என விசனம்

## அதனால் தனி மாநிலம் கேட்கின்றனர்

புனித நூலான குர்ரானை அவமதித்ததாகக் கூறி அந்த நாட்டு கிறிஸ்தவ சிறார்கள் இரண்டு பேருக்கு தண்டனை அளிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் கிறிஸ்தவர்களுக்குப் போதிய பாதுகாப்பு இல்லாததால், தனி மாகாணம் உருவாக்கித் தரும்படி அந்தநாட்டு கிறிஸ்தவ அமைப்பினர் அரசிடம் கோரியுள்ளனர்.

மனநிலை சரியில்லாத அந்தச் சிறுவர்கள் மீது மதத் துவேஷ குற்றச்சாட்டு சுமத்தி தண்டனை அளிக்கப்பட்டுள்ளதற்கு, பாகிஸ்தான் கிறிஸ்தவர்கள் கடும் கண்டனம்தெரிவித்தனர். இது குறித்து பாகிஸ்தான் கிறிஸ்தவ நல கூட்டமைப்பின் தலைவர் யூனுஸ் மாசிக் பட்டி கூறுகையில்,

தனி மாகாணம் உருவாக்கித் தர அரசு நட வடிக்கை எடுக்க வேண்டும் என்று கிறிஸ்தவர்கள் கேட்டுள்ளனர்

பாகிஸ்தானில் 20 லட்சம் கிறிஸ்தவர்கள் வசிக்கின்றனர். மதத் துவேஷம் என்ற பெயரில் கிறிஸ்தவர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்படுகிறது. இந்த விடயத்தில் எங்களுக்குச் சம உரிமை அளிக்கப்படவில்லை.

போதிய பாதுகாப்பில்லாத நிலையில் உள்ள எங்களுக்கு, தனி மாகாணம் உருவாக்கித் தர அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இதன்மூலம் எங்களது உரிமைகள் பாதுகாக்கப்படும், பாகிஸ்தானில் உள்ள அனைத்து கிறிஸ்துவ அமைப்புகளும் இந்த கோரிக்கைக்காக ஓரணியில் திரள வேண்டும். இதற்கு அரசு [illegible] தர வேண்டும் - என்றார்.

# சீனாவில் நிலக்கரி சுரங்க விபத்து 19 பேர் சாவு

சீனாவின் தென்மேற்கு பகுதியிலுள்ள நிலக்கரி சுரங்கமொன்றில் இடம்பெற்ற வாயு வெடிச் சம்பவத்தில் 19 பேர் உயிரிழந்தனர்.

28 சுரங்கத் தொழிலாளர்கள் நிலத்துக்கு அடியில் சிக்கியுள்ளதாக சீன அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஸிஷ்சுவான் மாகாணத்திலுள்ள குறித்த சுரங்கத் தில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 150 சுரங்க தொழிலாளர்கள் பணிகளில் ஈடுபட்டிருந்த வேளை இந்த வெடிச் சம்பவம் இடம்பெற்றதாக அந்நாட்டுத் தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

# ஊழல் புரிந்த சீன அதிகாரி அமெரிக்காவுக்குத் தப்பினார்



சீனாவில் ஊழல் புகாரில் சிக்கிய அதிகாரி ஒருவர், அமெரிக்காவுக்குத் தப்பி ஓடியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

சீனாவில் தற்போது சீனா கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி செய்து வருகிறது. அங்குள்ள லியோனிங் மாகாணம் பெங்க்செங் நகரத்தில் அந்தக்கட்சியின் செயலாளராக வேலை பார்த்து வந்தவர் வேங் குவாங்கியாங். அவர்மீது லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு கூறப்பட்டு விசாரணை நடந்து வந்ததால், கட்சியிலிருந்து நீக்கப்பட்டார்.


இந்தநிலையில் அவர் 31.5 மில்லியன் அமெரிக்க டொலருடன் தனது மனைவியையும் அழைத்துக் கொண்டு அமெரிக்கா தப்பிச் சென்று விட்டார் என்று கூறப்படுகிறது. வெளிப்படையாக விமானம் மூலம் அமெரிக்காவுக்கு தப்பிச் சென்ற அவரை நிர்வாகம் பிடிக்கத் தவறியது குறித்து கண்டனம் எழுந்துள்ளது.

அவர் மீது பல மில்லியன் டொலர் ஊழல் குற்றச்சாட்டு உள்ளதாக அரசு அதிகாரிகள் தெரியப்படுத்தவில்லை என்றும் கூறப்படுகிறது.

அவருடன் வேலை பார்த்தவர்கள் இதுகுறித்த செய்திகளை மறைத்து விட்டனர் என்றும் இதுபோன்ற செயல்களை ஊக்கப்படுத்தக் கூடாது என்றும் அந்தநாட்டு ஊடகங்களில் பரபரப்பாக குற்றம் சாட்டப்பட்டு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் குடியரசுக் கட்சி வேட்பாளர் ரோம்னி



அமெரிக்காவில் நவம்பர் 6 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் மிட் ரோம்னி (வயது 65) போட்டியிடுவார் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

டம்பாவில் நடைபெற்று வரும் அந்தக் கட்சியின் தேசிய மாநாட்டில் ரோம்னிக்கு ஆயிரத்து 144 பேராளர்களின் ஆதரவு கிடைத்தது. இதன்மூலம் ஜனாதிபதி வேட்பாளராக அவர் தேர்வு பெற்றார்.

துணை ஜனாதிபதிப் பதவிக்கு குடியரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பால் ரையான் பெயரை மாநாடு அங்கீகரித்தது. இதைத் தொடர்ந்து வாக்காளர்களை நோக்கிப் பேசிய ரோம்னியின் மனைவி, "நீங்கள் ரோம்னியை நம்பலாம். அமெரிக்காவை உயர்த்த ரோம்னி தேவைப்படுகிறார்' என்று உரக்கக் கூறினார். (வ)

# உலக நாடுகளுடன் ஈரான் ஒன்றிணைவது அவசியம்

**பான் கீ மூன் கருத்து**



சுதந்திரத்தை உறுதி செய்வதற்கு உலக நாடுகளுடன் ஈரான் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் வலியுறுத்தியுள்ளார்.

ஈரானின் மனித உரிமைகளின் பதிவுகள் குறித்தும் அவர் ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளார்.

ஈரான் நாடாளுமன்ற சபாநாயகருடன் தெஹ்ரானில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

மேற்குலக நாடுகளின் கடும் எதிர்புக்கு மத்தியில் ஈரான் தலைநகர் தெஹ்ரானில் நடைபெறும் அணிசேரா நாடுகளின் மாநாட்டில் பான் கீ மூன் கலந்துகொண்டுள்ளார்.

அரச கொள்ளை எதிர்ப்பாளர்களை அடக்கும் ஈரானின் ஆளும் கட்டமைப்பு குறித்து விமர்சனம் வெளியிடுவதற்கு இந்த மாநாட்டைப் பயன்படுத்துமாறு ஈரானின் எதிர்க்கட்சிகள் பான் கீ மூனை வலியுறுத்தியுள்ளன.

ஈரானின் முக்கிய எதிர்க்கட்சி தலைவர்கள் இருவர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே ஈரானின் அணுத்திட்ட சர்ச்சை குறித்தும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் பான் கீ மூன் முக்கிய கவனம் செலுத்தலாம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும் தமது கொள்கைகள் குறித்து சாதகமான கருத்தை பரப்புவதற்கு இந்த மாநாட்டை ஈரான் பயன்படுத்தலாம் என மேற்குலக நாடுகள் எச்சரித்துள்ளன. (வ)

## மிச்செல் ஒபாமாவை அடிமையாக சித்திரித்து பத்திரிகையில் படம்




வொஷிங்டன், ஒக 31

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் மனைவி மிச்செல் கறுப்பர் இன அடிமைப் பெண் போல சித்திரித்து அரை நிர்வாணக் கோலத்தில் வரைந்த படத்தை வெளியிட்டு ஸ்பெயின் நாட்டு பத்திரிகை ஒன்று சர்ச்சையைக் ஏற்படுத்தியுள்ளது.

ஒரு கறுப்பர் இனத்துப் பெண் மேலாடை இல்லாமல் இருப்பதுபோல அந்தப்படம் உள்ளது. ஆனால் முகம் மட்டும் மிஷல் ஒபாமாவுடையது. முகத்தை மட்டும் மிச்செல் முகமாக மாற்றியுள்ளனர்.

இந்தப் படத்தை ஸ்பெயின் நாட்டின் 'பியூரா டி செரி' என்ற பத்திரிகை அட்டைப் படமாக வெளியிட்டுள்ளது. இது பெரும் சர்ச்சையை எழுப்பியுள்ளது. இது இனவாத, ஆபாச வக்கிரம் பிடித்த செயல் என்று கண்டனங்கள் வெளியாகியுள்ளன.

ஏற்கனவே பாடகி ரிஹானாவை இப்படித்தான் ஒரு டச்சு நாட்டு பத்திரிகை மோசமான முறையில் கேலிச்சித்திரம் வரைந்து சர்ச்சையை எழுப்பியது. இந்த நிலையில் மிஷல் ஒபாமாவை அசிங்கமாகச் சித்திரித்துப் படம் போட்டிருப்பதற்கு பெரியளவிலான எதிர்ப்பு ஏற்படும் என்று தெரிகிறது.


கரின் பெர்செரன் டேணியல்ஸ் என்ற ஓவியரின் படத்தை எடுத்து அதில் மிஷல் ஒபாமாவின் முகத்தை சிறந்த இம்போஸ் மூலம் பொருத்தி வெளியிட்டுள்ளனர்.

# ஜப்பான் - வட கொரியா இடையே நான்காண்டுகளின் பின்னர் பேச்சு

டோக்கியோ, ஒக 31

ஜப்பான் மற்றும் வட கொரியா ஆகிய நாடுகளுக்கு இடையில் நான்கு வருடங்களின் பின்னர் முதல் முறையாக பேச்சு இடம் பெறவுள்ளது.

பீஜிங்கில் இந்தப் பேச்சு நடைபெறவுள்ளதாக இரு தரப்பு அரச அதிகாரிகளை மேற்கோள்காட்டி பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது.



இரண்டாம் உலக மகா யுத்தத்தை அடுத்து வட கொரியாவில் சிக்கியுள்ள தமது நாட்டு பிரஜைகளை மீண்டும் நாட்டிற்கு கொண்டு வருவது குறித்து இந்த பேச்சில் கவனம் செலுத்தப்படவுள்ளதாக ஜப்பான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன் 1970 மற்றும் 80களில் தமது நாட்டு பிரஜைகளை வட கொரியா கடத்திய விவகாரம் குறித்து இந்த சந்திப்பில் ஜப்பான் கேள்வி எழுப்பலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களில் ஐந்து பேரை வடகொரியா ஜப்பானுக்கு அனுப்பியுள்ளதுடன் ஏனையவர்கள் உயிரிழந்துள்ளதாகவும் கூறியுள்ளது.

எனினும், உயிரிழந்தவர்கள் குறித்த விவரங்கள் எதனையும் வட கொரியா வழங்கவில்லை என்று ஜப்பான் குறிப்பிட்டுள்ளது. (வ)




**இரட்டை நந்தி ஓடுகள் (Kasthuri Tiles)**

எமது நிறுவன தயாரிப்பான ஒற்றை நந்தி படத்துடன் விற்பனை செய்யப்பட்ட ஓடுகள் தற்போது இரட்டை நந்தி பொறிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

(சி/9362) (5-6-7) லக்ஸ்மி ரேடர்ஸ் சாவகச்சேரி.

**வேலையாள் தேவை**

பேக்கரி வேலைக்கு அனுபவமுள்ள ஆண், பெண் தேவை.

விவரங்களுக்கு: 077 253 6162

(22371)(5-6-7)

**கார் விற்பனைக்கு**

எனது பாவனையிலுள்ள Nissan Sunny வகைக் கார் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்.

(22367)(5-6-7) தொடர்பு: 077 735 3581

**வாடகைக்கு**

கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தி, ஏ9 வீதியில் வங்கிகளுக்கு அருகில் மேல் வீட்டுடன் கூடிய கடை ஒன்று வாடகைக்கு உள்ளது.

தொடர்பு: 021 300 6760, 077 218 6829

(22287)(5-6-7)

**SUBRA (14)**

*சித்தன்கேணி - வட்டுக்கோட்டை*



பெற்றோர்கள்! உங்கள் பிள்ளை 2012 இல் 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றியவரா?

அவர்கள் தரம் வாய்ந்த கல்வியை ஆங்கில அறிவுடன் முழுமையாக தொடர்ந்திட அரிய வாய்ப்பு

2012 தரம் 5 புலமைப் பரிசில் பரீணாமத்தை தோற்றிய மாணவர்களுக்கு

சர்வதேச தரத்திலான சிறந்த ஆங்கில பயிற்சி நெறியும், அடிப்படை கணிலிப் பயிற்சியும் ஆரம்பமாகிவிட்டது.

Expressive Speech
International English Easy Learning System

3மாதங்கள்

A Confidence in Communication Listening, Speaking, Reading, Writing & Understanding

IEELS

ஆங்கில இலக்கண பயிற்சி(Grammar), பேச்சு பயிற்சி(Spoken English), செவிமடுத்தல் பயிற்சி(Listening), அனுபவம் மிக்க விரிவுரையாளர்கள்.

அரியதோர் சந்தர்ப்பம் தவறவிடாதீர்கள்

முதல் 8 மணித்தியால வகுப்பு முற்றிலும் இலவசம்
ஒரு பிரிவில் 20 மாணவர்கள் மட்டுமே
தொடர்பு: 071 847 4320

**காணி விற்பனைக்கு**

ஒட்டுவெளி, மிருசுவில் A9 வீதியிலிருந்து ¼ Km தூரத்தில் 25 பரப்புக் காணி (பிராமணன் வளவு) விற்பனைக் குண்டு.

தொடர்பு: 077 948 1100, 077 408 7674

(21510) (45.6.7)

**தென்னிந்திய ஐஸ்வர்யா**

மகளிர் மருத்துவமனை & கருத்தரித்தல் மையம்

கலந்து சிறப்பிக்கும்

**குழந்தையில்லா தம்பதியருக்கான ஆலோசனை முகாம்**

**The Most Successful IVF Team From India**

இனி உங்களுக்கும் குழந்தை



DR.K.VELUSWAMY MBBS.,MD (AIIMS).,FCCP.,M.HSc CHIEF DOCTOR
DR.S.CHANDRALEKHA MBBS.,DGO.,MRCOG(LONDON).,ART(SINGAPORE)., CHIEF DOCTOR
CHENNAI : Adayar 0091 98420 71999 / COIMBATORE : Gandhipuram 0091 98421 59009
PALANI : Dindigul road 0091 98422 05194 / MADURAI : SBI Colony 0091 88833 02777

இடம் : கொழும்புத் தமிழ்ச் சங்கம்
# 7, 57th Lane, Wellawetta, Colombo-06.
திகதி : 09.09.2012 நேரம் : 9.00am - 3.00pm

Organized by Sponsered By:
Mighty Health Club of Colombo A Friend in Need MEDICAL MISSION INDIA
HOME NURSING CENTRE WELLAWATTA

இலவச முன் பதிவுகளுக்கு: 0777 56 93 82

• 5000க்கு அதிகமான குழந்தைகள் IUI முறையில் பிறந்து சாதனை.
• 3000க்கு அதிகமான குழந்தைகள் IVF-ICSI முறையில் பிறந்து சாதனை.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**சிவசிதம்பரம் திருநாவுக்கரசு**

தோற்றம் 14★09★1936

மறைவு 01★08★2012

கடந்த 01.08.2012 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சிவசிதம்பரம் திருநாவுக்கரசு (சைவப் புலவர்- ஓய்வுபெற்ற பட்டயக் கணக்காளர்) அவர்களின் மறைவுச் செய்திகேட்டு உடன் வந்து எம்முடன் துயர் பகிர்ந்த உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் இன்று (31.08.2012) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் (பூம்பத்தை வீதி, வடலியடைப்பு) நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பூம்பத்தை வீதி,
வடலியடைப்பு, (22373) (45.6.7) மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயத்தை விரட்டுங்கள்

(01)

"அச்சம் தவிர்"

இது பாரதியாருடைய ஆத்திசூடியில் முதல் வாக்கியம். பழைய ஆத்திசூடியில் "அறம் செய விரும்பு" என்று சொன்னார்கள். "தர்மத்தைச் செய்வதற்கு விருப்பம் கொள்"



என்பது பழைய ஆத்திசூடி. ஆனால் பாரதியார் எழுதிய புதிய ஆத்திசூடியில் 'அச்சம் தவிர்' என்று கூறியுள்ளார். அந்தக் காலத்தில் தர்மத்தைச் செய்வது பிரதானமாகக் கருதப்பட்டது. இந்தக் காலத்தில் அதைவிட முக்கியமானதாக பயத்தை விட்டொழிப்பதை பாரதியார் குறிப்பிடுகிறார். இன்றைய சூழ்நிலையில் மானிட சாதிக்கு பெரிய விரோதியாக இருந்து, அவர்களுடைய முன்னேற்றத்துக்குத் தடையாக இருப்பது அச்சம் என்று பாரதியார் கருதிய காரணத்தினால்தான் அவருடைய ஆத்திசூடியில் முதல் வாசகமாக "அச்சம் தவிர்" என்று கூறியிருக்கிறார்.

அச்சத்தைத் "தவிர்க்க" வேண்டுமென்கிறார் பாரதியார். "தவிர்க்க" என்கிற சொல் ஆழமான பொருள் கொண்டது. அச்சம் எப்பொழுதும் நம்மை பயமுறுத்திக் கொண்டே இருக்கும். நம்முடைய அருகிலிருந்து நம்மைப் பயமுறுத்தும். நம்முடைய வாழ்க்கையின் பிரிக்க முடியாத ஒரு பகுதி யாக அச்சம் நம்மைத் தேடி வந்து ஒட்டிக் கொள்ளும். இந்த அச்சத்திடம் நாம் எச்சரிக்கையாக இல்லாமல் போனால் அது நம்முடைய வாழ்க்கையின் ஓர் அங்கமாகி சர்வசதாகாலமும் நமக்குத் தொந்தரவு கொடுத்துக் கொண்டேயிருக்கும்.

அதற்காகத்தான் பாரதியார் "அச்சம் தவிர்" என்று சொன்னார். அதாவது அச்சம் என்பது உன்னை எப்பொழுதும் சூழ்ந்தபடிதான் இருக்கும். நீதான் அதனைத் தவிர்க்க வேண்டும் என்று பாரதியார் எச்சரிக்கிறார். பாரதியாரின் கவிதைகளைப் படிக்கின்ற போது இந்த அச்சம் பற்றி அவர் பல இடங்களில் குறிப்பிட்டிருப்பதைப் பார்க்கலாம்.

"பெண்கள் விடுதலை" பற்றி எழுதுகின்ற போது கூட, "நாணமும் அச்சமும் நாய்களுக்கு வேண்டுமாம்" என்று குறிப்பிடுகிறார். அதாவது பெண்களுக்கு நாணம், அச்சம் இரண்டும் தேவையில்லாதவை என்கிறார் பாரதியார். பண்டைக் காலத்தில் பெண்களுக்கு இருக்க வேண்டிய பண்புகளாக நான்கைக் குறிப்பிட்டார்கள். நாணம், அச்சம், மடம், பயிர்ப்பு ஆகிய நான்குமே அந்தக் குணங்களாகும். நாணம் என்பது ஆண்களைக் காணுகின்றபோது பெண்களுக்கு ஏற்பட வேண்டிய ஒரு கூச்சசுபாவம். மடம் என்பது ஆடவர் மத்தியில் இருக்கும் போது தங்களுக்குத் தெரிந்த விடயத்தையும் தெரியாதது போல் காட்டிக் கொண்டு அடக்கமாக இருப்பதாகும். அச்சம் என்பது ஆண்கள் மத்தியில் உரக்கப் பேசுவதற்கோ உரிமையோடு பேசுவதற்கோ துணிவு கொள்ளாத தன்மையாகும். பயிர்ப்பு என்பது தனக்கு மாலையிட்டவனை அன்றி வேறு ஆடவரின் ஸ்பரிசம் படுகின்றபோது ஏற்படுகின்ற கூச்சம். இந்த நான்கும் பெண்களுக்கு இருக்க வேண்டிய குணங்கள் என்கிற ஒரு கருத்து நிலவியிருந்தது.

ஆனால், பாரதியாருக்கு இதில் சில விஷயங்கள் உடன்பாடில்லை. நாணமும் அச்சமும் பெண்களின் முன்னேற்றத்துக்குப் பெரிய விரோதிகள் என்று பாரதியார் கருதினார். எனவே தான் அவர் காண விரும்பிய புதுமைப் பெண்ணிடம் நாணம், அச்சம் ஆகியவை இருக்கக் கூடாது என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னார். நிமிர்ந்த நடையும், நேர் கொண்ட பார்வையும், நிலத்தில் யாருக்கும் அஞ்சாத மனத்திண்மையும் பெண்களுக்கு வேண்டுமென்று பாரதியார் குறிப்பிட்டார்.

பெண்களுக்கு இந்த நால்வகைக் குணங்களும் இருக்க வேண்டுமென்பது இடைக் காலத்தில் வந்த கருத்தாகும். பண்டைக் காலத்தில் இந்தியாவிலும், குறிப்பாக தமிழகத்திலும் இந்தக் கருத்திற்கு ஆதரவு இருந்ததாகத் தெரியவில்லை. உபநிடதக் காலங்களில் பல உபநிடதங்களைப் பெண்கள் எழுதியிருக்கிறார்கள். சங்க காலத்தில் பெண் புலவர்கள் தங்களுடைய கவிதைகளை தமிழ்ச் சான்றோர் நிரம்பிய மன்றங்களில் அரங்கேற்றியிருக்கிறார்கள். மடம் என்கிற உணர்ச்சியின் காரணமாக ஆண்களின் முன்னிலையில் பெண்கள் எதையும் சொல்லக்கூடாது என்கிற கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தால் பெண் உபநிஷதங்களை எழுதி இருக்க முடியாது. பெண் புலவர்கள் தங்களுடைய பாடல்களை அரங்கேற்றியிருக்க முடியாது.

இடையில் புகுந்து விட்ட இந்தப் பழக்கத்தை ஒழித்துக் கட்ட வேண்டும் என எண்ணிய பாரதி, "நாணமும் அச்சமும் நாய்களுக்கு வேண்டுமாம்" எனக் குறிப்பிடுகிறார்.

(தொடரும்)

# மொழியையும் கலைகளையும் வளர்த்தெடுக்க புதியவர்களுக்கு களம் அமைத்துக் கொடுப்போம்

## வவுனியா "நால்வர் விழாவில்" தமிழருவி சிவகுமாரன்

"தொடர்ந்து இடம்பெறும் மேடை நிகழ்ச்சிகளில் புதிய புதிய கலைஞர்களுக்கும், இலக்கிய வாதிகளுக்கும் களம் அமைத்துத் தருவதன் மூலமே மொழியையும் கலைகளையும் வளர்க்கலாம். ஒரே மேடையில் பழைய முகங்களையும் ஒரேவிதமான நிகழ்ச்சிகளையும் திரும்பத் திரும்பக் காண்பதால் சபையினர் சலிப்படைவதுடன் நிகழ்ச்சிகளுக்கு வருவதும் குறைவடைந்து போகிறது. கலை,மொழி வளர்ச்சியும் தேக்கமடைகிறது. இதனாலேயே வவுனியா தமிழ்ச் சங்கம் புதிய கலைஞர்களை, இலக்கியவாதிகளை,இலைமறைகாய்களாக இருக்கும் ஆற்றல் உள்ளவர்களைத் தேடியறிந்து. அவர்களுக்குக் களம் அமைத்துக் கொடுப்பதில் முனைந்து நிற்கிறது." என்று வவுனியா தமிழ்ச்சங்கம் நடத்திய நால்வர் விழாவில் அதன் தலைவர் தமிழருவி த.சிவகுமாரன் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-,

"கலைஞர்கள், அறிஞர்கள் ஊக்கம் பெற களங்கள் தேவை. அதைத் தமிழுக்கு தொண்டாற்றும் சங்கங்கள், மன்றங்கள் போன்ற அமைப்புக்கள் பரவல் படுத்த வேண்டும். எமது தமிழ்ச்சங்கத்தில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் பங்குகொள்ளும் பெரியோர்களும் இளைஞர்களும் நூலகங்களிலும் வேறு இடங்களிலும் உரிய நூல்களைத் தேடிப்படித்தே மேடையேறுகின்றனர். அவ்வாறான தேடலையும் முன் ஆயத்தத்தையும் ஊக்குவிக்கின்றோம். நிகழ்ச்சி தரமானதாக இருக்கும் போது தான் பார்வையாளர்கள் கவரப்படுவார்கள். அதற்கு ஏற்ப மேடை நிகழ்வுகளில்,குறிப்பாக அறிவு நிகழ்வுகளில் பங்குகொள்வோர் தம்மை மிகுந்த முயற்சியுடன் தயார் செய்ய வேண்டும்.

பாடல்களை நன்கு மனனம் செய்துள்ள ஒரு பேச்சாளர் மேடையில் பேசுவதற்கும், அவ்வாறில்லாமல் குறிப்புத்துண்டுகளின் துணையுடன் பேசுவதற்கும் நிறைந்த வேறுபாடுகள் உள்ளன. நல்ல மனனம் செய்த நிலையில் பேசுபவர்க்கு தன் நம்பிக்கையுடன் மெய்ப்பாடும் இயல்பாக கைவர, சபை நன்கு ரசிக்கும். அவ்வாறில்லாதவர்கள் சபையைக் கவர்வது கடினம். தம்மை நம்பி நேரத்தை மிச்சப்படுத்தி வரும் பார்வையாளர்களுக்கு, சுவைஞர்களுக்கு தரமான விடயங்களை அவர்கள் திருப்தியுறும் வகையில் தரவேண்டியது, கலைஞர்கள், இலக்கிய வாதிகள், பேச்சாளர்களின் கடமையாகும். இதனை, விழா அமைப்பாளர்களும் நன்கு கவனத்தில் கொண்டு நிகழ்ச்சிகளை அமைக்க வேண்டும். கூடிய வரையில் வவுனியா தமிழ்ச் சங்கம் இதனைச் செய்துவருகிறது" என்றார். (ஒ)

# கல்வியில் தடங்கல் ஏற்படுவதை சமூகம் அனுமதிக்கக் கூடாது

## ஜேர்மன் பிரதிநிதி டமேஸ் தெரிவிப்பு

அச்சுவேலி, ஓக. 31

"வறுமையின் பெயரால் கல்வியில் தடங்கல் ஏற்படுவதை சமூகம் அனுமதிக்கக் கூடாது. எமது பாரம்பரியமும் பெருமையும் கல்வியில் தான் நிலை நிறுத்தப்பட்டு வந்துள்ளது. அந்த நிலையில் தளம்பல் ஏற்பட்டால் யாழ்ப்பாணம் தனது தனித்துவத்தை இழக்க வேண்டி ஏற்படும்" என்று ஒருங்கிணைந்த அச்சுவேலி குழுமத்தின் ஜேர்மன் பிரதிநிதி எஸ்.டமேஸ் தெரிவித்தார்.

ஒருங்கிணைந்த அச்சுவேலிக் குழுமத்தினால் அச்சுவேலிப் பகுதியில் உள்ள ஆரம்ப பாடசாலைகளில் கல்வி கற்கும் உறவுகளை இழந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே டமேஸ் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

கல்வியில் ஆர்வம் உள்ளவர்கள் வறுமையைக் காரணம் காட்டி பாடசாலையில் இருந்து இடைவிலகுவதை சமூகம் கண்டும் காணாமல் இருக்கக் கூடாது. இந்த விடயத்தில் புலம் பெயர் தமிழர் தேசங்களில் வாழும் அச்சுவேலி உறவுகள் காத்திரமான பங்களிப்பை நல்குவதற்குத் தயாராக உள்ளன.

கல்வியில் பெருமைபெற்ற யாழ்ப்பாணம் இன்று அந்த அடையாளத்தை இழக்கும் நிலை யிலுள்ளது. கல்வியில் தளம்பல் நிலை ஏற்படுவதை நாம் ஒன்றுபட்டு தவிர்த்துக் கொள்ள வேண்டும். யாழ்ப்பாணத்தில் கல்விப் பாரம்பரியம் தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டும்.

வறுமையைக் காரணம் காட்டி பாடசாலையில் இருந்து இடைவிலகுவோர் தொகை அதிகரித்து வருகின்றது.

வறுமையைக் காரணம் காட்டி பாடசாலையில் இருந்து இடைவிலகுவோர் தொகை அதிகரித்து வருகின்றது. இதனைச் சமூகம் ஏற்றுக் கொள்ளக் கூடாது. குறித்த மாணவர்களுக்குப் பொருத்தமான உதவிகளைச் செய்து அவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்குக் கை கொடுத்து உதவ வேண்டும்.

இந்த முயற்சியில் புலம் பெயர் தமிழர் தேசங்களில் வாழும் அச்சுவேலி உறவுகள் கவனம் செலுத்தி வருகின்றனர். தொடர்ந்து பொருத்தமான உதவிகளை வழங்குவதற்கும் ஏற்பாடுகளை செய்யவுள்ளன - என்றார். (எ-11)

### திருக்குறள் தமிழ் இலக்கியத் திறன் பரீட்சையில் வெற்றிபெற்றோர்

கிளிநொச்சி, ஓக.31

கிளிநொச்சி மாவட்டத் தமிழ் சங்கத்தால் நடத்தப்பட்ட திருக்குறள் தமிழ் இலக்கியத் திறன் பரீட்சையில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:-

ஊக்கப் பரிசு பெறுவோர்

வேதாரணியம் நிதர்சினி- திருவையாறு உ.நி.ப, சிவாதரன் சர்பினி-திருவையாறு உ.நி.ப, வரதராசன் நிதர்சனா-வன்னேரிக்குளம் உ.நி.ப, கண்ணதாசன் கீர்த்தனா-புனித பற்றிமா றோ.க.த.க.பாடசாலை, பாலச்சந்திரன் துசயந்தினி-புனித பற்றிமா றோ.க.த.க.பாடசாலை, கிருபானந்தன் கிருசாந்தி-உருத்திரபுரம் உ.நி.ப, குணதீசுகரன் சரணிகா-உருத்திரபுரம் உ.நி.ப, இராசகுலம் இலக்சியா-கிளி/இந்துக்கல்லூரி, தர்மராசா சிந்துயா-கிளி/இந்துக் கல்லூரி, சச்சிதானந்தன் கயேந்தினி-பரந்தன் இந்து உ.நி.ப, கந்தசாமி பௌசிகன்-முருகானந்தாக் கல்லூரி, புவனேந்திரம் டினுஷா-புனித பெண்கள் திரேசா கல்லூரி, கஜேந்திரன் கயூரா-புனித பெண்கள் திரேசா கல்லூரி.

பிரிவு "இ"

1ஆம் இடம்-பாலகுமாரன் அட்சிகா-புனித திரேசா பெண்கள் கல்லூரி, கேதீசுவரன் திவாரகா- பளை மத்திய கல்லூரி, 2ஆம் இடம்- ஜெயக்குமார் கயானி- வட்டக்கச்சி உ.நி.ப, 3ஆம் இடம்-தங்கராசா ஜீவலோயினி-கிளி. இந்துக் கல்லூரி, நித்தியானந்தன் பிரசாந்-உருத்திரபுரம் உ.நி.ப.

(தொடரும்) (எ)



தென்மராட்சி கல்வி வலயத்தின் பௌர்ணமி விழாவில் தென்மராட்சி பிரதேசத்தில் கலை இலக்கியம் மற்றும் இயல் இசை நாடக வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட இருவர் மாகாண கல்வி அமைச்சால் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

பிரதேசத்தில் இயல் இசை நாடக வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிய இசை அறிஞர் அ.கி.ஏரம்பமூர்த்திக்கு முத்தமிழ் பாரதி என்னும் பட்டத்தை வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலனும், பிரதேசத்தில் கலை இலக்கியத்தைப் பிரதிபலிக்கும் சிற்பக் கலைகளை கைவண்ணத்தில் உருவாக்கி வரும் கலாபூஷணம் கி.கலாமோகனுக்கு சிற்பக்கலாவித்தகர் பட்டத்தை மாகாணக் கல்வி அமைச்சின் பதில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரும் வழங்கி கௌரவித்தனர். (எ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வீதி, முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' -மாலு சந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## எங்கு போய் முடியும்?

சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் லியாங் குவாங்லி தலைமையில் சீன இராணுவத்தின் மிக உயர் மட்டக் குழு ஒன்று இலங்கை வந்துள்ளது. 25 பேர் இந்தக் குழுவில் அடங்கியுள்ளனர். இவர்களில் பலர் சீனக் குடியரசு இராணுவத்தின் மிக மூத்த அதிகாரிகள். சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் வளர்ந்து வரும் நெருக்கத்தை இந்தக் குழுவினரின் பயணம் எடுத்துக்காட்டுகிறது.

இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய, கடந்த ஜூன் மாதம் சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். அப்போது இலங்கைப் படைகளுடனான தனது உறவுகளை மேலும் பலப்படுத்திக் கொள்வதாக சீனா உறுதியளித்திருந்தது. அதன் பின்னர் சீனப் பாதுகாப்பு அமைச்சரின் இந்தப் பயணம் இடம்பெறுகிறது.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்திற்கும் இடையில் நடைபெற்ற இறுதிப் போரின் போதும் சீனா கொழும்புக்கு நிபந்தனையற்ற பல உதவிகளைச் செய்தது. ஆயுதங்களை, குண்டுகளை கடனடிப்படையில் தாராளமாக வழங்கியது. இலங்கை அரசு போரை வெல்வதற்கு சீனாவின் இந்த ஆயுத உதவி மிக முக்கியமானது.

போர் முடிந்த பின்னரும் இராணுவத்துக்கான தனது உதவியைச் சீனா நிறுத்தவில்லை. இப்போதும் 100 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இராணுவ உதவிகளைச் சீனா இலங்கைக்கு வழங்கியுள்ளது. வடக்கில் இராணுவ முகாம்களை மேம்படுத்தவும் போரில் அங்கங்களை இழந்த இராணுவத்தினருக்கும் என இந்த உதவிகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

சீனா வழங்கும் உதவிகளையும் கடன்களையும் இலங்கை அரசு மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறது. அபிவிருத்தித் திட்டங்களுக்கு என்ற போர்வையிலும் சீனா பல கோடி டொலர் பணத்தைக் கடனாக இலங்கை அரசுக்கு வழங்கியுள்ளது. மேலும் வழங்குவதற்கும் தயாராகவும் உள்ளது.

''இந்தக் கடன்களை எப்படித் திருப்பிச் செலுத்துவது என்ற திட்டங்களும் சிந்தனைகளும் இன்றியே இலங்கை அரசு கடன்களை வாங்கி வருகின்றது. ஒரு நேரத்தில் சீனாவின் இறுகிய பிடிக்குள் சிக்கிக் கொள்வதற்கு இதுவே தலையாய காரணமாக மாறிவிடுமோ என்ற அச்சம் என்னைக் கவலைப்பட வைக்கிறது'' என்று தெரிவிக்கிறார் இலங்கையின் மூத்த இராஜதந்திரி ஒருவர்.

இது பற்றியெல்லாம் இலங்கை அரசு கவலைப்படுவதாக இல்லை. அது இன்னும் இன்னும் சீனாவுடன் நெருங்கிச் செயற்படுவதையே விரும்புகிறது. இலங்கை அரசின் இந்த விருப்பு மேற்குலகத்திடமும் இந்தியாவிடமும் சந்தேகங்களை ஏற்படுத்துகின்றபோதும் அந்தப் பாதையில் கொழும்பு மீண்டும் மீண்டும் முன்னேறியே வருகிறது.

போரில் இலங்கை அரசுக்கு முழுமையான ஆதரவை வழங்கிய சீனாவுடன் மேலும் மேலும் நெருக்கமாகும் கொழும்பின் நடவடிக்கையைத் தமிழர்களும் சந்தேகத்துடனேயே நோக்குகிறார்கள். போருக்குப் பின்னர் சர்வதேசத்தில் தமிழருக்குச் சார்பாகக் காணப்படக்கூடிய ஒரு சூழலைத் தகர்ப்பதற்கான சக்தியாக சீனாவை அரசு பயன்படுத்துகிறது என்ற சந்தேகம் தமிழர்களிடம் வலுக்கிறது. ஆனால், இதுபற்றியெல்லாம் தான் கவலைப்படப் போவதில்லை என்ற பாணியிலேயே கொழும்பு அரசு நடந்து கொள்கிறது. இறுதியில் இது எங்கு போய் முடியும் என்பதுதான் இப்போது எழுந்துள்ள கேள்வி?

# பாடங்களைக் கற்கத் தவறும் இலங்கையின் மஹிந்த அரசு



தமிழில்: வியெஸ்ரி

மூலம்: மவ்பிம

எந்தவொரு நாட்டின் அரசும், சர்வதேச ரீதியில் தனது நட்பு நாடுகளுடன் மிக நெருக்கமான உறவுகளைப் பேணிச் செயற்படுவது வழமையானது. அது போலவே அண்மைக் காலமாக இலங்கை அரசும் புதிய சர்வதேச நட்பு நாடுகளுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்தி வருகின்றது.

இலங்கை நெருக்கமான உறவைப் பேண விரும்பிய அரசியல் தலைவர்களில் ஒருவர் லிபியத் தலைவராயிருந்த கேணல் கடாபி. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒரு தடவைக்கு இரு தடவைகள் லிபியாவுக்குச் சென்று கேணல் கடாபியைச் சந்தித்திருந்தார். இலங்கைக்கு வருமாறு கேணல் கடாபிக்கு அழைப்பும் விடுத்திருந்தார். மஹிந்தவின் அழைப்பை கேணல் கடாபி மகிழ்ச்சியோடு ஏற்று நீண்ட நாள்கள் கடக்கவில்லை, கடாபியின் தலைமைத்துவத்துக்கு எதிராக லிபியாவில் மக்கள் கிளர்ச்சி தலைதூக்கியது. நாளுக்கு நாள் தீவிரமடைந்த கிளர்ச்சி கடைசியில் நடு வீதியில் வைத்துக் கடாபி நாயைப் போன்று அடித்துக்கொல்லப்பட்டதுடன்முடிந்தது.

அதற்குப் பின்னர் மியன் மாரின் அரசுத் தலைவர் தான்ஸ்வே இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டார். அதேபோன்று ஜனாதிபதி மஹிந்தவும் மியன்மாருக்கு உத்தியோகபூர்வமாகச் சென்று வந்தார். தான்ஸ்வேயின் கழுத்தில் தலைகாட்டிய நிர்வாகத்துக்கு எதிரான சர்வதேச அதிருப்தி என்ற கழலை மெல்ல மெல்ல வளர்ச்சி கண்டு கடைசியில் அவர் பதவியினின்றும் தூக்கி எறியப்பட நேர்ந்தது. அதன் தொடர்ச்சியாக தேர்தல் நடத்தப்பட்டு புதிய ஆட்சித் தலைமை நிறுவப்பட்டது. அதன் பயனாக பல ஆண்டு காலமாக வீட்டுக்காவலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த எதிராளி அரசியல் வாதி ஆங்சான் சூகி விடுவிக்கப்பட்டதுடன் தேர்தலில் போட்டியிட்டு வென்று நாடாளுமன்றத்துக்கு காலடியெடுத்து வைத்தார்.

இலங்கையுடன் இப்போது நட்புக் கரம் கோர்த்துக் கொண்டுள்ள புதிய அரசியல் பிரமுகர் சுவாஸிலாந்தின் முடிக்குரிய மன்னர். அண்மையில் இலங்கைக்கு வந்த சுவாஸிலாந்து மன்னர், ஆபிரிக்க வட்டகையில் ஆட்சி அதிகாரம் வகிக்கும் மன்னர் பரம்பரையின் கடைசி வாரிசு. இன்று உலகில் உள்ள பெரிய பணக்காரர்களில் முதலிடம் வகிக்கும் இவரது தனிப்பட்ட சொத்துக்களின் பெறுமதி 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என 'போப்ஸ்' என்ற சர்வதேச நிறுவனம் ஒன்று மதிப்பிட்டுள்ளது.

சுவாஸிலாந்து மன்னர் வசம் அவரது போக்குவரத்துக்கென தனிப்பட்ட சொந்த ஜெட் விமானமே உள்ளது என்றால் பணவசதி எவ்வாறு இருக்கும் என்பதை நாம் கணிப்பிட இயலும். அவருக்கு 13மனைவிமார் உள்ளனர். ஆச்சரியம் என்னவென்றால் அவரது தந்தையாருக்கு மனைவிமார் 70 பேர் இருந்தனர் என்பது தான்.

மன்னரின் 13மனைவிமாருக்கும் தனித்தனியான மாடமாளிகைகளும், போக்குவரத்துக்கான விமானங்களும் உள்ளன. அவர்கள் [illegible] பாதுகாப்புப் படையினரின் தீவிர பாதுகாப்பின் மத்தியிலேயே தமது பயணங்களை மேற்கொள்வர். அண்மைக் காலமாக நாட்டின் பொருளாதார நிலையில் கடும் பாதிப்பு ஏற்பட்ட போதிலும், கடந்த ஆண்டில் அரச குடும்பத்தினர் இரண்டரை லட்சம் பவுண் செலவு செய்து பிறந்த தினக் கொண்டாட்டங்களைக் கொண்டாடி மகிழ்ந்தனர். இதுமட்டு அன்றி குறிப்பிட்ட பிறந்த தினக் கொண்டாட்ட விருந்துபசாரத்துக்கென நாட்டின் பொதுமக்கள் ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒரு மாடு வீதம் அன்பளிப்பாக வழங்க வேண்டுமெனவும் அரசால் ஆணையிடப்பட்டிருந்தது.

இத்தகைய பின்னணி கொண்ட சுவாஸிலாந்தின் மன்னரே அண்மையில் இலங்கைக்கு வந்தார். அவரும் கடந்த கால கட்டத்தில் சர்வதேச அழுத்தங்களுக்குத் தலைதாழ்த்தும் வகையில், தமது தந்தையாரால் கலைக்கப்பட்ட அந்நாட்டின் நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டி இயங்க வைத்து புதிய அரசமைப்பொன்றையும் நிறைவேற்ற வைத்து செயற்படுத்தியிருக்கிறார். நாட்டில் கருத்து வெளியிடும் சுதந்திரத்தையும் உறுதிப்படுத்தியுள்ளார். ஆயினும்

அவர் தமது ஏகாதிபத்திய போக்கை-நிர்வாகத்தைநிறுத்திக்கொள்ளவில்லை. அந்த வகையில் நாளையோ மறு நாளோ, மியன் மாரின் தலைவருக்கு ஏற்பட்ட கதிபோன்று, சுவாஸிலாந்து மன்னருக்கும் கூட ஆட்சி அதிகாரத்தை பறிகொடுத்து வெளியேற நேரக் கூடுமா என்பது குறித்து இப்போது எவராலும் உறுதிப்படுத்தமுடியாதுள்ளது.

எது எவ்வாறான போதிலும், இலங்கை அரசு தனது இந்தப் புதிய சர்வதேச நண்பர்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பாடமொன்றுண்டு. இவர்களில் பெரும்பாலோர் அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளின் விரோதிகள். நாட்டுப்பற்று, இனப்பற்று என்பவற்றில் இறுக்கமான பற்றுக்கொண்டவர்கள். அதே வேளை ரஷ்ய, சீன தரப்புக்களின் நண்பர்கள். ஆனால் அங்கு தான் அவர்களின் தவறு ஏற்பட்டுள்ளது. லிபியத்தலைவராயிருந்த கடாபி, ஜனாதிபதி மஹிந்தவைச் சந்தித்த போது அமெரிக்காவுக்கு எதிரான சர்வதேச நாடுகளின் அணியொன்றை உருவாக்குவது குறித்து கலந்தாலோசித்தார். மியன் மாரின் ஆட்சித் தலைவர் தான்ஸ்வே கூட அமெரிக்காவின் தாளத்துக்கு அமெரிக்காவின் விருப்பத்துக்கு ஏற்ற விதத்தில் உலகின் சின்னஞ்சிறு நாடுகள் ஆடவேண்டியதில்லை என அமெரிக்காவைத்திட்டித்தீர்த்தார். சுவாஸிலாந்தின் மன்னர் அவ்விதம் அமெரிக்காவை விமர்சித்ததாக தெரிவிக்கப்படவில்லை. ஆனாலும் லிபியாவின் கடாபி மற்றும் மியன்மாரின் ஆட்சியாளர் தான்ஸ்வே ஆகிய இருவரில் ஒருவரைப் பரலோகத்துக்கும் மற்றவரை வீட்டுக்கும் அனுப்பிவைத்தது அமெரிக்காவே என்பது பரகசியமானதொன்றே.

அது மட்டுமன்றி இவர்கள் அனைவருக்கும் நாட்டுப்பற்று, இனப்பற்றை விற்றுத் தத்தமது மடிகளை நிரப்பிக் கொண்டவர்கள். லிபியாவின் கடாபியும், மியன்மாரின் தான்ஸ்வேயும் இலங்கை மீது நெருக்கம் பேணியமை, தத்தமது நாடுகளில் அபகரித்த பெருநிதியை இலங்கையில் முதலீடு செய்யும் நோக்குடனாகும் என்றொரு கதையும் உண்டு. சுவாஸிலாந்தின் மன்னரது அண்மைய இலங்கைப்பயணமும் அத்தகைய முதலீட்டு நோக்கம் கொண்டதொன்றுதானா என்பது குறித்து எதுவும் தகவல் கிடைக்கவில்லை.

எது எவ்வாறான போதிலும், குறிப்பிட்ட இந்தத்தலைவர்களது இலங்கைக்கான பயணம் மிக மிகக்குறுகியது. ஆதலால் இலங்கை அரசு இவர்களிடமிருந்து பாடம் கற்றிருக்குமா என்பது குறித்து உறுதியாக எதுவும் கூற இயலாதுள்ளது. அதாவது லிபியா மற்றும் மியன்மார் தலைமைத்துவங்கள் மாற்றமுற்றதன் பின்னர் இலங்கை அரசு அந்த நாடுகள் பக்கம் திரும்பிப்பார்த்ததில்லை. இலங்கை அரசு இத்தரப்புக்களிடமிருந்து பாடம் கற்றுக்கொண்டதன் பேரிலேயே மியன்மாரின் சூகி வீட்டுக் காவலிலிருந்து விடுவிக்கப்பட்டமை போன்றதே சிறையிலிருந்த சரத் பொன்சேகாவை மஹிந்த விடுவித்தமை எனச் சிலர் கூறுகின்றனர்.

அதேபோன்று இத்தரப்புக்களிடமிருந்து பாடம் கற்றுக்கொண்டதன் காரணமாகவே தற்போது இலங்கை அரசு, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா சமர்ப்பித்த பிரேரணையை ஏற்று ஐ.நா. மனித உரிமைகள் பேரவைத் தலைவி நவிப்பிள்ளை மற்றும் அவரது பிரதிநிதிகளை இலங்கைக்கு வந்து நிலைமைகளை நேரில் கண்டறிய அனுமதியளித்துள்ளது என்றுகூட அவர்கள் விமர்சிக்கின்றனர்.

உண்மையில் அரசு அவ்விதம் சரியாகப் பாடம் கற்றிருக்குமானால் மிக அண்மையில் சுவாஸிலாந்தின் மன்னர் இலங்கைக்கு வந்து செல்ல வாய்ப்பு ஏற்பட்டிருக்காது. இங்கு வந்த சுவாஸிலாந்து அரசரிடமிருந்து பாடம் கற்று இந்த நாட்டை நிர்வகிக்க இலங்கை அரசு முயலுமானால் இலங்கையை கடவுள்தான் காப்பாற்ற வேண்டியிருக்கும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறிவிட்டால் மாற்றமில்லை

■ மா.ஆறுமுகன்

அதிர்ஷ்ட லாபச் சீட்டுக்கள், தேக்கு வளர்த்தல், தவணை முறையில் நிலம் வாங்கும் திட்டம், கோடீஸ்வரராக்கும் இரிடியம், ஒன்-லைன் லொட்டரி, எங்கேயோ இருக்கும் ஒருவரின் மில்லியன் கணக்கான சொத்தைப் பெறுவதற்கு உதவுதல் என காலந்தோறும் மோசடிகள் அரங்கேறுகின்றன. காலத்துக்கேற்பவும் மோசடிகள் புதிய அவதாரம் எடுக்கின்றன.

திடீரென ஒருநாள் அந்த மோசடி வெளிச்சத்துக்கு வருகிறது. பரபரப்பாகப் பேசப்படுகிறது. எப்படியெல்லாம் ஏமாற்றினார்கள் என்பது குறித்து சம்பந்தப்பட்டோருக்கு அதிர்ச்சியும், மற்றவர்களுக்கு சுவாரஸ்யமும் கலந்த புதுப்புதுத் தகவல்கள் வெளிவருகின்றன.

சிறிது காலத்துக்கு அமைதி நிலவுகிறது - அடுத்த மோசடி வெளிச்சத்துக்கு வரும்வரை! ஆனால் ஏமாறுவோரிடமிருந்து மற்றவர்கள் பாடம் கற்பதாகக் தெரியவில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் "அடுத்துவரும் மோசடி நிறுவனத்திடம் ஏமாறுவதற்குத் தயாராகி விடுகின்றனர். அதனால், ஏமாற்றுவோருக்குக் குறைவில்லை, கூடவே ஏமாறும் மக்களின் எண்ணிக்கைக்கும் பஞ்சமிருப்பதில்லை. நாளை புதிதாய் ஒன்று புறப்பட்டு வரலாம்.

எதைச் செய்தாவது வாழ்வில் விரைவாக அதிகப் பணம் சம்பாதிக்க வேண்டும் எனப் பேராசை கொண்டவர்களே பெரும்பாலும் இத்தகைய மோசடி நிறுவனப் பேர்வழிகளின் வலைகளில் எளிதாகச் சிக்கிக் கொள்கின்றனர். இதில் பாமரர்-படித்தவர், பெண்கள்-ஆண்கள், கீழ்நிலை ஊழியர்-உயர் அதிகாரிகள் என்ற பேதமெல்லாம் இருப்பதில்லை. ஏமாறுவது என முடிவெடுத்த பிறகு சமத்துவமாய் ஏமாற வேண்டியது தானே!

"அதை வளர்க்கலாம்", "இதை வளர்க்கலாம்'' என கவர்ச்சிகரமாக நிறுவனங்கள் செய்யும் அறிவிப்புகளிலும், விளம்பரங்களிலும் பலர் விட்டில் பூச்சிகளாய் விழுந்துவிடுகின்றனர்.

சிறிய முதலீடு, அதிக வட்டி, ஒருமுறை நிறுவனத்தில் சேர்ந்துவிட்டால் "ஆயுள்வரை" (பெரும்பாலும் அது அந்த நிறுவனத்தின் ஆயுளாகத்தான் இருக்கும்!) பெருகிக்கொண்டே இருக்கும் லாபம், வியப்பூட்டும் பரிசுகள், சில வேளைகளில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணம் என பட்டியலில் அடங்காத வசீகர வாக்கியங்கள் மக்களை வளைத்துப்போட்டுவிடுகின்றன.

மோசடி செய்ய வேண்டும் என்ற குறிக்கோளுடன் தொடங்கப்படும் இதுபோன்ற நிறுவனங்கள், முதலில் சேருவோருக்கு அதிக லாபத்தைத் தந்து அவர்களின் மூலம் செலவில்லா விளம்பரத்தையும் தேடிக்கொள்கின்றன. பல ஆயிரங்கள் கிடைத்து தாங்கள் பயனடைந்ததாகப் பிறர் கூறக் கேட்ட பிறகும், சராசரி மனிதரின் உள்ளம் சும்மாயிருக்குமா?

மக்களின் பலவீனங்களை நன்றாகவே அறிந்துவைத்துள்ள மோசடி நிறுவனங்கள் தொலைக்காட்சி உள்ளிட்ட ஊடகங்களின் வழியே தங்கள் நிறுவனங்களின் விளம்பரங்களை அடிக்கடி ஒளிபரப்பி, மக்களை வசப்படுத்தி, தங்கள் நிறுவனத்தின் திறப்பு விழாக்களை மிகவும் பிரம்மாண்டமாக நடத்திவிடுகின்றன.

விழாவுக்குப் பிரபலமான சிறப்பு விருந்தினர்களாகத் திரைப்பட நட்சத்திரங்களோ, அரசியல்வாதிகளோ, மாவட்ட ஆட்சியரோ, காவல்துறை உயர் அதிகாரிகளோதான் அழைக்கப்படுகின்றனர். அந்தப் பிரமுகர்களுடன் நிறுவனத்தின் பிரமுகரும் புகைப்படம் எடுத்துக் கொள்வதும், அதைப் பெரிய அளவிலான புகைப்படமாக்கி நிறுவனத்தின் அலுவலகத்தில் காட்சிக்கு வைத்திருப்பதும் வாடிக்கைதான்.

பிரமுகர்களின் பங்கேற்பு, தொடர் விளம்பரம் ஆகியவற்றால் மக்கள் நெஞ்சில் அந்த நிறுவனங்களின் மீது அதிக எதிர்பார்ப்பும், தங்கள் முதலீட்டுக்கு நல்ல பயனுண்டு என்ற நம்பிக்கையும் ஏற்பட்டுவிடுகின்றன. ஆனால் சில மாதங்களில் நிலைமையோ தலைகீழாக மாறிவிடுகிறது.

> சிறிய முதலீடு, அதிக வட்டி, ஒருமுறை நிறுவனத்தில் சேர்ந்துவிட்டால் "ஆயுள்வரை" (பெரும்பாலும் அது அந்த நிறுவனத்தின் ஆயுளாகத்தான் இருக்கும்!) பெருகிக்கொண்டே இருக்கும் லாபம், வியப்பூட்டும் பரிசுகள், சில வேளைகளில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணம் என பட்டியலில் அடங்காத வசீகர வாக்கியங்கள் மக்களை வளைத்துப்போட்டுவிடுகின்றன.

தயிரை விற்று முட்டை வாங்கி அதைக் கொண்டு கோழி, ஆடு, மாடு என வளர்த்துப் பண்ணையும் வைத்து, கேள்வி கேட்கும் தன் மனைவியை இப்படித்தான் எட்டி உதைக்க வேண்டும் எனக் கனவு கண்டவன், தன் காலருகே உண்மையில் இருந்த தயிர்ப் பானையை உதைத்து, கைப் பொருளையும் இழந்த கதைதான் பெரும்பாலோரின் நிலைமை.

ஒரு ரூபாய் என்றாலும் நியாயமான வழியில், உண்மையுடனும், கடுமையாக உழைத்துக் கிடைக்கும் செல்வமே நிலைக்கும். அப்படிப்பட்ட பொருளே தேவை என்ற எண்ணம் ஆழப் பதிந்து, மக்கள் நெஞ்சில் மாற்றம் வந்துவிட்டால் அதன் பின்னர் ஏமாற்றுவோருக்கு வேலையிருக்காது. மாறாக, அவர்கள் தான் ஏமாந்துபோவார்கள்.

# வாட்டும் வறட்சி

"வற்றின நதியெல்லாம் வற்றாத நதியைப் பார்த்து ஆறுதல் அடையும். ஆனால் வற்றாத நதியே வற்றிப் போனால் எங்கே போய் முறையிட முடியும்." இன்று வன்னியில் இதுதான் நிலைமை

இன்று வன்னியில் ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக குளங்கள், கிணறுகள் வற்றிப்போய் குடிதண்ணீருக்கே தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வரலாறு காணாத வறட்சியால் வன்னிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த மக்கள் பெரும் துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

எந்தவித அடிப்படை வசதிகளும் அற்று மீளக்குடியமர்ந்து கஷ்டப்பட்டு வாழ்ந்துவரும் மக்கள் வறட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தமது ஜீவனோபாய தொழிலான நெற்பயிர்ச் செய்கையினை மேற்கொண்டும் அறுவடை செய்ய முடியாமல் உள்ளனர். வறட்சியால் நெற் பயிர்கள் அழிந்து வருவதால் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் பெரும் நட்டம் அடைந்துள்ளனர். பூநகரி வாழ் மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதற்கு பணத்தை செலவு செய்கின்றனர். பூநகரி பிரதேசத்தில் வறட்சியினால் கிணறுகள் வற்றியிருப்பதுடன் பல கிணறுகள் உப்பு நீராகியிருப்பதனால் அங்கு நிலைமை மோசமாகியிருக்கிறது. அந்தப் பகுதி மக்கள் 4 கிலோ மீற்றர் தூரம் வரை சென்று தண்ணீரை எடுத்து வர வேண்டியுள்ளது.

பிரதேச சபைகள் பொது மக்களுக்கு பவுசர் மூலம் நீர் விநியோகம் செய்கின்ற போதும் அது முற்று முழுதாக மக்களின் தேவைக்கு போதுமானதாக இல்லை. இதனால் மக்கள் நீண்ட தூரங்களுக்குச் சென்று நீரைப் பெற்றுவருகின்றனர். இப்படியாக வறட்சியான காலநிலை மேலும் தொடர்ந்தால் பெரும் இடர்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் கிட்டத்தட்ட 30 ஆயிரம் குடும்பங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இதைவிட அதிகரித்துக் காணப்படும் என்று மக்களால் எதிர்வு கூறப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவுகின்ற வறட்சி காரணமாக 10 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளில் நெற்செய்கைப் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்த மாவட்டத்தின் பெரிய நீர்ப்பாசனக் குளங்களில் உள்ள நீரைக் கொண்டு சுமார் 13 ஆயிரம் ஏக்கர் காணிகளில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. எனினும் தற்போதைய வறட்சி நிலைமை இந்த நெற்செய்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. மழை காலத்தில் நிறைகின்ற குளங்களின் நீரே, கோடை காலத்தில் தண்ணீர் கிணறுகளில் ஊறுகின்றது. இதனால், குடிதண்ணீர் கிணறுகளில் நீரைப் பெறும் நோக்கத்துடன் நீர்ப்பாசனக் குளங்களில் கோடை காலத்தில் குறிப்பிட்ட அளவு நீர் மட்டத்தைப் பேண வேண்டிய தேவை இருக்கின் றது. ஆனால் தற்போதைய வறட்சி நிலைமையால் குளத்தில் குறிப்பிட்ட அளவு நீர் மட்டத்தைப் பேணுவதும், செய்கை பண்ணப்பட்டுள்ள நெற் காணிகளுக்கு நீர் வழங்குவதும் கடினமான காரியமாகியிருக்கின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் வறட்சி நிவாரண நடவடிக்கைகளுக்கென 39 லட்சம் ரூபா நிதி அரசினால் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் அந்த நிதியைப் பயன்படுத்தி வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு குடிதண்ணீர் விநியோகிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் முழுநிதியும் குடிதண்ணீருக்காகப் பயன்படுத்தப்படுகின்றனவா என்பது தெரியாமல் மக்கள் உள்ளனர்.

வறட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு பவுசர் மூலம் குடிதண்ணீரை விநியோகித்து வருகின்றது. இருப்பினும் போதிய அளவு குடிதண்ணீரைப் பெற முடியாதிருப்பதாக மக்கள் கூறுகின்றனர். மல்லாவி போன்ற கிராம-நகர்ப் பகுதிகளிலும் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் பணம் செல வழித்து தூர இடங்களில் இருந்து தண்ணீரைப் பெற்று வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தின் பெரிய குளமான கட்டுக்கரைக்குளம் நீரின்றி வறண்டிருக்கின்றது. இதனால் அதன் கீழுள்ள பெரும் எண்ணிக்கையான குளங்களும் வற்றிக்கிடக்கின்றன. 1,400 ஏக்கர் பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்டிருக்கின்றது. நன்னீர் மீன்பிடி தொழில் பாதிக்கப்பட்டிருப்பதனால் பல குடும்பங்கள் வறுமை நிலை மைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன.

துணுக்காய் பிரதேசத்தில் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு குடிதண்ணீர் வழங்குவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருக்கின்றனர். காலபோக நெற்செய்கைக்கென வங்கிகளில் பெற்ற கடன்களை இன்னும் செலுத்த முடியாமல் மக்கள் கஷ்டப்படுகின்றனர். காலபோகத்தில் அறுவடை செய்த நெல்லை இலாபத்துக்கு விற்கவும் முடியவில்லை. தப்பிப் பிழைத்த நெல்லையாவது அறுவடை செய்து விற்பனை செய்து வங்கிக் கடனை அடைக்கலாம் என்று நினைத்த அந்த மக்களின் நம்பிக்கை வீண்போனது. நெல்லுக்கான நிர்ணய விலை இல்லாது இருப்பதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

வன்னியில் ஏற்பட்ட கடும் வறட்சிக்கு காரணங்களில் ஒன்று காடுகள் அழிக்கப்பட்டமையுமாகும். விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் வன்னிக் காட்டு மரங்களும் பாதுகாக்கப்பட்டன.

ஆனால் இன்று அந்தக் காட்டில் பலரும் அனுமதி யின்றி மரங்களை வெட்டிக் கொண்டு செல்கின்றனர். மேலும் வீதி அகலிப்புக்கான வேலைகளுக்கு கிரவல் மண்ணினை எடுப்பதற்காக காடுகளை அழித்து வருகின்றனர். இதன் காரணமாகவும் வன்னியில் மழையின்றி குளங்கள், கிணறுகள் வற்றிக்காணப்படுகின்றன.

வன்னியில் மீள்குடியமர்ந்த மக்களின் அடிப்படைத் தேவைகளில் அக்கறைகொள்ளாத அரசு அந்த மக்களின் வளங்களைச் சூறையாடிவருவதில் முன்னின்று செயல்படுகிறது. வறட்சியினால், ஏற்பட்டு மீளக்குடியமர்ந்த மக்கள் பெரும் இடர்களை சந்தித்து வருகின்றனர். இயற்கையால் சூழப்பட்ட இலங்கையில் காலநிலையின் பாதிப்பு என்றைக்குமே இருக்காது என்று சொல்லப்பட்டதால்தான் குட்டிநாடான இலங்கை மீது சர்வதேசம் கண் வைத்துள்ளது.

ஆனால் இன்று நிலைமை தலைகீழாக மாறியுள் ளது. இலங்கையில் காலநிலை யில் மாற்றம் ஏற்படுகிறது. அத னால் இயற்கையில் பாதிப்பு ஏற் படுகிறது.

சிங்கள அரசு விடுதலைப் புலிகளை அழித்த மகிழ்ச்சியில் மூழ்கி தமிழர்களுடைய வளங்களையும் எண்ணுக்கணக்கில்லாமல் சூறையாடி வருகிறது. இந்த சூறையாடல்தான் காலநிலையில் மாற்றம் ஏற்பட்டு எதிர்காலத்தில் இலங்கை பூராகவும் ஒரு அழிவினை உண்டு பண்ணப் போகிறது என்பது வெளிப்படை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தித்து செயற்படு

வளமான மரங்கள் நிறைந்த ஒரு காடு. அங்கே ஒரு நரி இருந்தது.

அந்தக் காட்டுக்குப் பக்கத்திலே ஒரு ஊர்.

அங்கே ஒரு பெரிய வீடு.

அந்த வீட்டிலே ஒரு பூனையை வளர்த்தார்கள்.

அந்தப் பூனை அடிக்கடி இந்தக் காட்டுக்கு வருவதுண்டு. அங்கே இருந்த நரியிடம் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருக்கும். பொழுது சாய்ந்ததும் வீட்டுக்குப் போய் விடும்.

அந்த நரியும் பூனையும் நண்பர்கள்.

ஒரு நாள் நரி அந்த பூனையிடம் சொன்னதாம்,

'நண்பா! நானும் இன்று உன்கூட வருகிறேன்... உன்கூட வந்து உங்க வீட்டிலே ஒரு நாள் தங்கியிருந்து விட்டு வரலாம் என்று பார்க்கிறேன்!' என்றது.

'ஐயோ... அப்படியெல்லாம் செய்யாதே என்றது பூனை.

'ஏன்?' என்று கேட்டது நரி.

'நீ எங்க வீட்டுக்கு வந்தால், அங்க இருக்கிற எங்க வீட்டுக்காரர்கள். உன்னை அடிச்சு விரட்டிடுவார்கள் ... அதனாலே வேண்டாம்!' என்றது.

இதைக் கேட்டதும் நரி சொல்லிச்சு...

'இதோ பார்... மனிதர்களுக்கு இரண்டு கால்! நமக்கு அப்படி இல்லை... நமக்கு நாலுகால்! நாலு கால் உள்ள நாம் இரண்டு கால் உள்ள மனிதர்களுக்குப் பயப்படலாமா? அதுவுமில்லாமல்...

அவர்கள் இந்நேரம் தூங்கியிருப்பார்கள்... நாம போறது அவர்களுக்குத் தெரியாது. அதனாலேயே தைரியமா என்னைக் கூட்டிக்கிட்டுப்போ! பயப்படாதே!'- என்றது.

பூனை எவ்வளவோ சொல்லிப்பார்த்தது. நரி கேட்கலே! 'சரி வேறே வழியில்லை...' என்று அதை அழைத்துக் கொண்டு வீட்டுக்குப் போனது. மெதுவ ா மாடிப்படி ஏறி மொட்டை மாடிக்குப் போனது.

அங்கே போய்ச் சேர்ந்ததும் பூனைக்கு மிக மகிழ்ச்சி... 'யாருக்கும் தெரியாமே வந்து சேர்ந்துட்டோம்! ' என்றது.

அதனாலே உற்சாகமாக 'மியாவ்... மியாவ்' என கத்த ஆரம்பித்தது.

நரி பார்த்தது. நாம மட்டும் ஏன்சும்மா இருக்கணும் என்று அதவும் கத்த ஆரம்பிச்சது!

நரி ஊளையிடுறதைக் கேட்டதும் மக்கள் விழித்தனர். எல்லோரும் தடிக்கம்போட ஓடி வந்தனர். அந்த நரியை மிக தாக்கினார்கள்.

அடிவாங்கிய நரி மெதுவா தப்பி பிழைத்துக் காட்டுக்கு ஓடிப்போய் சேர்ந்தது. உடம்பு முழுவதும் காயம்!

காட்டிலே இருந்த ஏனைய நரிகள்லாம்ஓடி வந்து சுத்தி நின்று கேள்வி கேட்க ஆரம்பிச்சது.

'கூடா நட்பு கூடவா சொன்னோம்?' - என்றது.

உடனே இது, 'ஏன் கூடினா என்ன?'- என்றது.

'கூடங்கள் மாடங்கள் ஏறவா சொன்னோம்?'- என்று மற்ற நரியெல்லாம் கேட்டுதாம்!

'ஏன் ஏறினா என்ன?' - என்று தாம் இது.

உடனே மற்ற நரிகள், இதோ பார்... கூடாத கூட்டு கூடக்கூடாது...

கூடினது போதாதென்று கூடங்கள் மாடங்கள் வேறே ஏறியிருக்கிறாய். அதோடவிடாமல், பாட்டு பாடியிருக்கிறே! நாங்கள் நாதங்கள் கீதங்கள் பாடவா சொன்னோம்? ' என்று கேட்டன.

உடனே அடிபட்ட நரி ரோஷமாக பாடினால் என்ன ? என்றதாம்! நீ பாடினதுனாலேதான் மேளதாளங்களை உன்மேலேயே வாசிச்சன!' என்று தான் எல்லா நரிகளும் சேர்ந்து! இருக்க வேண்டிய இடத்திலே இருக்கணும். அது தான் நமக்கு மரியாதை.

அதைப் புரிஞ்சுக்கிறதுக்கத்தான் இந்தக்கதை.

இதை அழகா ஒரு நாட்டுப்புறப்பாடலில் சொல்லப்பட்டுள்ளது... நம் முன்னோர்கள். அந்தப்பாட்டு என்ன தெரியுமா?

'கூடாத வங்களிடம்
கூடவா சொன்னோம்?
கூடினால் என்ன?
கூடங்கள் மாடங்கள் ஏறவா சொன்னோம்?
ஏறினால் என்ன?
நாதங்கள் கீதங்கள்
பாடவா சொன்னோம்?
பாடினால் என்ன?
பாடினதினாலே
தாளங்கள் மேளங்கள்
தக்கத்திம்மென விழுந்தனவே.

அதனாலே இந்த உலகத்திலே நாம எதைச் செய்தாலும் யோசிச்சு செய்ய வேணும் ... அது முக்கியம்.

ஒருத்தருக்கு நீச்சல் குளத்திலே குதிச்சு விளையாடணும் என்று ஆசை. உடனே ஒரு நீச்சல் குளத்தைத் தேடிப்போனார்.

திரும்பி வரும்போது உடம்பு பூராகவும் கட்டுப்போட்டுக் வந்தார். என்ன இது என்று கேட்டார் வீட்டுக்கார அம்மா.



''முன்யோசனை இல்லாமல் அந்த குளத்திலே போய் 'நீச்சல்' அடிச்சேன்!'' என்றார்.

''என்ன நடந்தது?'' -என்றார்.

''நீச்சல் அடிச்சதுக்கு அப்புறம் தான் தெரிஞ்சுது அந்தக் குளத்திலே தண்ணீர் இல்லை என்று சொன்னார்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# 500 வருட பழமை வாய்ந்த வளலாய் பிள்ளையார்



வலிகாமம் கிழக்கில் உள்ள புராதனமான ஆல யங்களில் ஒன்றாக விளங்கும் வளலாய் பிள்ளையார் கோயில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பனவற்றில் சிறந்து விளங்குவதோடு அற்புதங்கள் நிறைந்த தலமாகவும் விளங்குகின்றது. கால வரலாற்றில் 500 ஆண்டு களுக்கு முற்பட்டது. அருவுருவமான வித்தியாசமான கல்லும் வேதாகம முறைப்படி செய்யப்பட்ட விநாயகர் விக்கிரகமும் மூலமூர்த்தமாக பிரதிஷ்டை செய்யப்பட்டு உள்ளமை சிறப்பம்சமாகும்.

யாழ்ப்பாண அரசின் பிரதானியாக வளலாய் பகுதியில் இருந்து அரச நிர்வாகம் மேற்கொண்ட தமிழ் நாடு நாகர் கோயிலைச் சேர்ந்த நிலப்பிரபு வீரமாணிக்கத்துக்கு விநாயகர் கனவில் கூறிய அருள் வாக்கின் பிரகாரம் தன்னுடன் எடுத்துவந்து வளலாயில் பிரதிஷ்டை செய்யப்பட்டதோடு குறித்த காலப்பகுதியில் கட்டுமானத்துக்கு பயன்படுத்தப்பட்ட சுண்ணாம்புக் கல்லும் கொண்டு நிரந்தர கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு வழிபடப்பட்டது.

போர்த்துக்கேயர் காலத்தில் ஆட்சியாளரால் ஏனைய ஆலயங்கள் போல இடித்தழிக்கப்பட்ட போதிலும் ஆங்கிலேயரது ஆட்சியில் புராதனமான அருவுருவம் உரிய முறையில் பழைய ஆலயம் இருந்த இடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு ஆலயம் கட்டப்பட்டது. வணிகப் பிரமுகர்களான நகரத்தாரும் தமிழ்நாடு வேதாரணயத்தில் இருந்து வந்து வளலாயில் குடியேறி இருந்த வேதாரணியம் மடகுருமாரும் இணைந்து கோயிலைப் பராமரித்து பூசை வழிபாடு செய்தனர். வளலாய் மக்கள் தங்களின் இஷ்ட தெய்வமாக ஏற்று பிள்ளையாரை வழிபட்டு ஆலயத்துக்குத் தேவையான அனைத்தையும் வழங்கி உதவினர்.

முதலாம் உலக மகாயுத்தம், இரண்டாம் உலக மகாயுத்தம் என்பன காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதை அடுத்து வளலாயில் இருந்த நகரத்தாரும் வேதாரணியம் மடக் குருமாரும் இடம் பெயர்ந்து யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை சிவன்கோயில் சுற்றாடலில் குடியேறி வாழ்ந்தனர். இந்த நிலையில் ஊர் மக்கள் திருமுறைகளை ஓதிவழிபட்டனர். 1945 ஆண்டு ஆசிரியர் வீரகத்தி கணபதிப் பிள்ளையைத் தலைவராகக் கொண்ட அறங்காவல் சபை உருவாக்கப்பட்டு ஆலய பரிபாலனத்தை மேற்கொண்டதோடு ஆலயத்தை புனமைத்து திருப்பணிகளையும் மேற்கொண்டனர். வேதாகம முறைப்படி கிரியைகள், நித்திய, நைமித்திய பூசைகளை மேற்கொள்வதற்கு பூசகர்களையும், நியமித்தனர். புதிதாக அமைக்கப்பட்ட ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் 1950 ஆம் ஆண்டு நடைபெற்றது. அதைத் தொடர்ந்து 1975, 1989 ஆம் ஆண்டுகளில் குடமுழுக்கு சிறப்பாக நடைபெற்றன.

> போர்த்துக்கேயர் காலத்தில் ஆட்சியாளரால் ஏனைய ஆலயங்கள் போல இடித்தழிக்கப்பட்ட போதிலும் ஆங்கிலேயரது ஆட்சியில் புராதனமான அருவுருவம் உரிய முறையில் பழைய ஆலயம் இருந்த இடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு ஆலயம் கட்டப்பட்டது.

ஆலயத்தின் திருப்பணிகளை திட்டமிட்டமுறையில் மேற்கொள்வதற்கு அறங்காவல் சபையின் தலைவரின் சகோதரி பள்ளி ஆச்சி என அழைக்கப்பட்ட செல்வி வீ.சரஸ்வதி தனது முழு வருமானத்தையும் வழங்கி உதவினார். அத்துடன் கே.பார்வதி தனது மரணசாதனத்தின் படி தனது சொத்துக்கள் அனைத்தையும் ஆலயத்துக்கு வழங்கி ஆலயத் திருப்பணி மற்றும் பூசை வழிபாடுகள் சிறப்பான முறையில் நடைபெறுவதற்கு வகை செய்தார். ஆலய அறங்காவல் சபை திருவெம்பாவை உற்சவ உபயகாரர்களின் குடும்ப உறுப்பினர்கள் மத்தியில் இருந்து தெரிவு செய்யப்படுகின்றனர். அறங்காவல் சபை ஆலயமுன்றிலில் கூடும் பொதுச்சபையில் இருந்து தெரிவு செய்யப்படுகின்றது. தற்போதைய அறங்காவல் சபையின் தலைவராக சண்முகநாதன் ஞானரூபனும், செயலாளராக வடிவேலு யோக நாதனும் பணியாற்றி வருகின்றனர்.

## ஞானி

பலாலி இராணுவத் தளத்துக்கு கிழக்குப் பக்கத்தில் மிக அண்மையில் இருக்கும் (இராணுவ பாதுகாப்பு வேலியில் இருந்து 300 மீற்றர்) ஆலயம் அண்மைக்கால இராணுவ நடவடிக்கையால் பெருமளவு சேதத்துக்கு உள்ளாகி உள்ளது. ஆலயமதில்கள், மண்டபங்கள், பிரகாரங்கள் பெருமளவில் சேதமடைந்த நிலையில் உள்ளன. 1990 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தொடக்கம் 1998 நடுப்பகுதி வரை ஆலயத்துக்கு செல்வதற்கு பாதுகாப்புத் தரப்பினரால் அனுமதிக்கப்படவில்லை. அந்தவகையில் பூசை வழிபாடு இன்றி ஆலயம் இருந்தது. 1998 ஆம் ஆண்டு நடுப் பகுதியில் இருந்து 2003 ஆண்டு நடுப்பகுதி வரை வெள்ளிக்கிழமை மட்டும் குறிப்பிட்ட சிலரும் பூசகரும் சென்று வாரத்தில் ஒரு நாள் பூசை வழிபாடு செய்வதற்கு பாதுகாப்புத் தரப்பினர் விசேட அனுமதி வழங்கியிருந்தனர். 2003 ஆம் ஆண்டு அதுவும் நிறுத்தப்பட்டு பூசைவழிபாடு இன்றி புதர்மண்டிக் கிடந்த ஆலயம் கடந்த வருடம் நவம்பர் 29 ஆம் திகதி முதல் நாளாந்த பூசை வழிபாட்டிற்கு அனுமதி வழங்கப்பட்டதைஅடுத்து நித்திய, நைமித்திய பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

போர்செயற்பாடுகளால்பல்வேறு சேதங்களுக்கு உள்ளாகிய ஆலயத்தின் பூசகருக்கான தங்குமிடம் ''குருக்கள் மனை'' விமான குண்டுத் தாக்குதலுக்கு உள்ளாகி முற்றாகச் சேதமடைந்துள்ளது. 2011.11.29 முதல் பூசை வழிபாடு நடைபெற்ற போதிலும் இந்த வருட முற்பகுதியில் பூசையில் கலைவந்து ஆடிய பெண்மணியின் வாக்கின் ஊடாக ''புனிதமில்லாத நிலையில் இருக்கின்றேன்'' எனத் தெரிவித்து பிள்ளையார் இட்ட கட்டளைக்கு அமைய கடந்த மே மாதம் பாலஸ்தானம் செய்யப்பட்டு புனருத்தாரணத் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. ''இராணுவ நடவடிக்கையால் சேதமடைந்த ஆலயத்தின் திருப்பணியை உரிய முறையில் மேற்கொள்வதற்கு பெருமளவு நிதி தேவைப்படுவதால் ஆலயத்திருப் பணிக்கு உதவ விரும்புவோர் அச்சுவேலி இலங்கை வங்கி கணக்கு இலக்கம் 73254360 இற்கு செலுத்தி உதவலாம் என அறங்காவல் சபையின் தலைவர் ச.ஞானரூபன் தெரிவித்தார்.

வைகாசி பௌர்ணமியை தீர்த்தத் திருவிழாவாகக் கொண்டு 10 தினங்கள் வருடாந்த பெருந் திருவிழா நடைபெற்று வருகின்றது. அத்துடன் திருவெம்பாவை; சதுர்த்தி, ஆவணிச்சதுர்த்தி, பிள்ளையார் கதை, வருடப்பிறப்பு, தைப்பொங்கல், மாதப்பிறப்பு, நவராத்திரி உள்ளிட்ட விசேட கால உற்சவங்களும் நடைபெற்று வருகின்றன. பரிவாரத் தெய்வங்களாக முருகன், வைரவர், சந்தான கோபாலர், அம்மன் ஆகிய தெய்வங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

கடந்த வருடம் நவம்பர் மாதம் ஆலயத்தை 8 வருடங்களின் பின்னர் சுத்தப்படுத்திய வேளையில் ஐம்பொன்னால் செய்யப்பட்ட ஒரு அடி உயரமான அம்மன் விக்கிரகம் ஒன்று ஆலயத்தில் கண்டெடுக்கப்பட்டு ஆலய உட்பிரகாரத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### சர்வதேசத்தை ஏமாற்ற ஆணவத்தோடு

# அரசு அரங்கேற்றிய நாடகம் தலைகீழாக மாறும் நிலையில்

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

கடந்த தேர்தலைப் போன்று இந்தத் தேர்தலில் மோசடிகளுக்கு இடமிருக்காது. இப்போது புதிய தேர்தல் ஆணையாளர் இறுக்கமான உத்தரவுகளைப் பிறப்பிக்கின்றார்.

அம்பாறை,ஒக.31

சர்வதேசத்துக்குக் காட்ட வேண்டும் என்ற நோக்கத்திலே ஆணவத்தோடும், இறுமாப்போடும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கு அரசு தீர்மானித்தது. ஆனால் அரசு ஆரம்பித்த நாடகம் இன்று தலைகீழாக மாறுகின்றதொரு நிலை உருவாகியுள்ளது.கடந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடாத காரணத்தினால் தான் தமிழ் பிரதேசங்களில் தேர்தல் மோசடிகளைச் செய்து, அமைச்சர் அதாவுல்லாவினால் களமிறக்கப்பட்ட மூன்று வேட்பாளர்களும் வெற்றிபெற முடிந்தது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அம்பாறையில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அம்பாறைத் தொகுதியில் சிங்கள மக்களின் 10 ஆயிரம் வாக்குகள் மரச் சின்னத்துக்குக் கிடைக்கும் நிலைமை உள்ளதாக உளவுப் பிரிவு அரசுக்கு அறிக்கையொன்றினைச் சமர்ப்பித்திருக்கின்றது.

கடந்த தேர்தலைப் போன்று இந்தத் தேர்தலில் மோசடிகளுக்கு இடமிருக்காது. இப்போது புதிய தேர்தல் ஆணையாளர் இறுக்கமான உத்தரவுகளைப் பிறப்பிக்கின்றார். அக்கரைப்பற்றில் கடந்த இப்தார் நிகழ்வுகளின் போது தொந்தரவுகளைத் தந்த சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது என்று பொலிஸ் மா அதிபரால் கட்டளையிடப்பட்டுள்ளது. அதனால், அம்பாறை கரையோரப் பிரதேசத்துக்கு என்று தனியானதொரு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளார்.

அதேவேளை எனது அமைச்சு பதவியைப் பணயம் வைத்து களமிறங்கியுள்ளதொரு தேர்தலாகத்தான் இது இருக்கின்றது. நாங்கள் இத்தேர்தல் தொடர்பாக எடுத்துள்ள முடிவினால் அரசு தடுமாறிப் போயுள்ளது. அதன் வெளிப்பாடாகத்தான் எமது கட்சியின் வெற்றியைத் தடுப்பதற்கான முயற்சிகள் பல்வேறு கோணங்களில் முடுக்கி விடப்பட்டுள்ளன.- என்றார். (ச)

## வைத்தியசாலை குளியலறையில் இஸ்லாமியச் சின்ன தரையோடுகள்

### முஸ்லிம்கள் கவலை

மட்டக்களப்பு,ஒக.31

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் குளியலறைகள் பலவற்றில் இஸ்லாமியச் சின்னங்கள் பொறிக்கப்பட்ட தரையோடுகள் பொருத்தப்பட்டமை குறித்து அப்பிரதேச முஸ்லிம்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அல்லா பிஸ்மி என அரபு எழுத்துக்களில் எழுதப்பட்ட சமய சின்னங்களைக் கொண்ட தரையோடுகள் காணப்பட்டதாக மட்டக்களப்பிலுள்ள இஸ்லாமிய நலன்புரி சங்கத்தின் தலைவர் மொஹமட் கலீல் தெரிவித்தார்.

இந்தவிடயம் குறித்து வைத்தியசாலை அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளதோடு, அவற்றை அகற்றிவிட்டு புதிதாகப் பொருத்த 100 தரை ஓடுகளை வைத்தியசாலைக்கு அன்பளிப்புச் செய்யத் தீர்மானித்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

சீன ஒப்பந்தகாரர் ஒருவர் இந்தத் தரையோடுகளை நாட்டுக்கு இறக்குமதி செய்துள்ளார். இதை எவரும் வேண்டுமென்று செய்யவில்லை என அவர் கூறினார்.

இது தொடர்பாக வைத்தியசாலையின் பணிப்பாளர் கே. முருகானந்தன் தெரிவித்ததாவது:-

7 வருடங்களுக்கு மேல் இத்தரையோடுகள் இங்கு காணப்படுகின்றன. முஸ்லிம் மதகுரு ஒருவர் இந்த விடயத்தை எமது கவனத்துக்குக் கொண்டுவந்தார். அவற்றை அகற்றுவதற்கு நாம் தயாரென தெரிவித்துள் ளோம். ஆனால் அவற்றை ஒரே இரவில் செய்ய முடியாது - என்றார். (ச)

## தேர்தல் சட்டமீறல் இதுவரை 44 பேர் கைது

கொழும்பு,ஒக.31

தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்பட்ட 44 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரத்ன தெரிவித்தார். கைது செய்யப்பட்ட நபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார். (ச)

## வேறு கட்சிகளுக்கு வாக்களிப்பது மூழ்கும் கப்பலில் ஏறுவதற்கு சமன்

### மு.கா. தலைவரை நம்பாதீர் என்கிறார் பிரதி அமைச்சர்

மட்டக்களப்பு,ஒக.31

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வாக்களிக்காது வேறு கட்சிகளுக்கு முஸ்லிம்கள் வாக்களிப்பதானது மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பலில் ஏறுவதற்குச் சமனானது என்று பிரதி அமைச்சர் ஏ. ஆர். எம். அப்துல் காதர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐ.ம.சு.மு. சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து ஓட்டமாவடி, ஏறாவூர், காத்தான்குடி ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் பயங்கரவாதம் அடியோடு ஒழிக்கப்பட்டுள்ளது. மக்கள் அனைவரும் நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். நாடு அபிவிருத்திப் பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. நாட்டில் அனைத்துப் பிரதேசங்களிலும் அபிவிருத்திப் பணிகள் நடைபெற்ற வண்ணம் இருக்கின்றன.

இந்தநிலையில், நாட்டில் ஆட்சி மாற்றம் என்பதை நினைத்துப் பார்க்கக்கூட முடியாது. நாட்டில் முஸ்லிம்கள் எவ்விதப் பிரச்சினையுமின்றி வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். முஸ்லிம்களின் தேவைகளை இந்த அரசு படிப்படியாக நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது. இந்த நாட்டில் முஸ்லிம்களுக்கு எது தேவையோ அதனைச் செய்து தர ஜனாதிபதி எச்சந்தர்ப்பத்திலும் தயாராக இருக்கின்றார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஒரு கௌவரமான அரசியல்வாதி என்றால், தான் அரசில் தற்போது வகிக்கும் பதவிகளிலிருந்து இராஜிநாமா செய்துவிட்டு தனியாகப் போட்டியிட்டு இருக்கவேண்டும். அரசில் பதவி வகித்துக் கொண்டு தனியாகப் போட்டியிடுவது தவறு - என்றார். (ச)



கிண்ணியா பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மீன் வளர்ப்புத் திட்டத்தை அமைச்சர் ரிசாத் பதியுதீன் பார்வையிட்டார்.

## கொள்ளையர் நால்வர் கொடகமவில் கைது

நுகேகொட,ஒக.31

குற்றச் செயல்கள் பலவற்றுடன் தொடர்புடைய நான்கு சந்தேகநபர்கள் மேல் மாகாண குற்றத் தடுப்புப் பிரிவின் நுகேகொட பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொடகம - நுகர்வோர் எரிபொருள் நிலையத்துக்கு அண்மையில் நேற்றுமுன்தினம் மாலை இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்கென அத்துருகிரிய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அத்துருகிரிய பகுதியில் இடம்பெற்ற பல கொள்ளைச் சம்பவங்களுடன் இவர்களுக்குத் தொடர்பு இருப்பதாக பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ச)

## அம்பகமுவ பிரதேச செயலாளராக ஹேரத்

நுவரெலியா,ஒக.31

நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவ பிரதேச செயலகத்தின் புதிய செயலாளராக ஹேரத், தனது கடமைகளை நேற்றுமுன்தினம் புதன்கிழமை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றுள்ளார்.

அம்பகமுவ பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய புஷ்பகுமார இடமாற்றம் பெற்றதைத் தொடர்ந்தே, அந்த இடத்துக்கு அம்பகமுவ பிரதேச செயலகத்தின் உதவிச் செயலாளராகக் கடமையாற்றிவந்த ஹேரத் நியமிக்கப்பட்டுள்ளார். (ச)

# கிழக்கு மாகாண சபைத் தேர்தல் தமிழருக்கு வரலாற்றுத் திருப்பம்

## கூட்டமைப்பின் வேட்பாளர் தெரிவிப்பு

எருவில்,ஒக.31

கிழக்கு மாகாணசபைத் தேர்தலானது தமிழ் பேசுகின்ற சமூகத்துக்கு ஒரு வரலாற்றுத் திருப்பமாக அமையப் போகின்றது என்பதை நாங்கள் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும். கடந்த கால சம்பவங்கள் எமக்கு பல மனிதர்களையும் துல்லியமாக இனங்காட்டி இருக்கின்றது. அந்த வகையில் நாம் இனியும் ஏமாற முடியாது என்று கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் கிருஷ்ணபிள்ளை சேயோன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு [illegible] வெல்லாவெளி பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

நாங்கள் உரிமைக்காக இதுவரை செய்த தியாகங்கள் இன்று சர்வதேசம் வரை எமது நிலைப்பாட்டை தமிழர்களின் உரிமைக்காக வாய் திறக்க வைத்திருக்கின்றது.

இதனடிப்படையில் தமிழ் பேசுகின்ற மக்களுக்கான தீர்வை ஜனநாயகரீதியாக பேச்சு மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஊடாகவே பேசவேண்டும் [illegible] சர்வதேசத்தின் முடிவாகவும் இருக்கின்றது.

நாங்கள் எவர் போடும் தாளத்திற்கும் ஆடமுடியாது. எங்களுக்கு என்று ஒரு நிலையானதும், நிரந்தரமானதுமான இருப்பு வேண்டும்.

இந்தநிலையில், மக்களையும், அவர்களது உணர்வுகளையும் ஏமாற்றியவர்கள் எம்மத்தியில் அதே நோக்கோடு இன்னும் செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். அபிவிருத்தி என்ற மோகத்தில் மக்களை திசை திருப்பலாம் என எண்ணுகின்றார்கள். ஆனால், இன்று மக்கள் அதனைச் சரியாகப் புரிந்திருக்கின்றார்கள்.

நாங்கள் எவர் போடும் தாளத்திற்கும் ஆடமுடியாது. எங்களுக்கு என்று ஒரு நிலையானதும், நிரந்தரமானதுமான இருப்பு வேண்டும்.

நடைபெறுகின்ற கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரிப்பதன் மூலம் இலங்கை அரசுக்கும், சர்வதேசத்திற்கும் இதுவே தமிழர்களுடைய நிலைப்பாடு என நாம் தெளிவாகக் கூறவேண்டும். இதற்காக தமிழர்களின் சின்னமான வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து அமோக வெற்றி பெறச் செய்யவேண்டும் - என்றார். (ச-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மறக்க முடியாத நிகழ்ச்சிகள் ஏற்படும். குறைந்த ஆதாயத்தை எதிர்பார்த்துச் செய்த வேலை ஒன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கும். நண்பர்கள் சிலருடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்ந்து பாசம் கூடும். கலகலப்பாகப் பேசி, மற்றவர்களை மகிழ்விப்பீர்கள். அலைச்சல் குறைந்து ஓய்வு எடுக்கும் நாள்.

**இடபம்:** எதிலும், பொறுப்பாக, கண்ணும், கருத்துமாகச் செயற்படுவீர்கள். நீண்ட நாள்களாக உங்களின் வீட்டுக்கு வராத உறவினர் ஒருவர் உங்களைத் தேடி வருவார். கஷ்டப்பட்டு முடிக்க வேண்டிய வேலை ஒன்றை சுலபமாக முடித்து ஆதாயம் பெறுவீர்கள். சக ஊழியர்கள் வழியில் அனுகூலமான உதவிகள் கிடைக்கும்.

**மிதுனம்:** வியக்க வைக்கும் சம்பவங்கள் நடக்கும். இரண்டு நாள்களாக முடியாமல் இருந்த காரியம் ஒன்று, இன்று வெற்றிகரமாக முடியும். பெரிய மனிதர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள். நீங்கள் செல்லும் இடத்தில் உங்களுக்குப் பிடிக்காத ஒருவரைச் சந்திக்க நேரிடும்.

**கடகம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்க வேண்டியது அவசியம். நண்பர்கள் சிலர் கேட்ட உதவிகளைச் செய்யமால் அவர்களின் அதிருப்திக்கு ஆள்படுவீர்கள். திட்டமிட்டபடி சில வேலைகளைச் செய்ய முடியாமல், தடை, தாமதங்களைச் சந்திப்பீர்கள். சிறிய பிரச்சினை ஒன்றுக்கு, ஒருவரிடம் பெரியளவில் கோபித்துக் கொள்வீர்கள்.

**சிங்கம்:** உறவினர்கள் மத்தியில் ஏற்பட்ட பிரச்சினை ஒன்றைத் தீர்த்து வைப்பீர்கள். ஆடை, அலங்காரப் பொருள்கள் சேர்க்கை ஏற்படும். உடன் பிறந்தவர்கள் மீதான பாசம் அதிகரிக்கும். கடந்தகால அனுபவம் ஒன்றை அசைபோட்டுப் பார்ப்பீர்கள்.

**கன்னி:** மனதில் தோன்றியதை வெளிப்படையாகப்பேசி, சொந்த பந்தங்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். இரண்டு மூன்று நாள்களாக நீடித்த குழப்பம் ஒன்றுக்கு இன்று தீர்வு காண்பீர்கள். அலுவலகப் பணியாளர்கள் சில விடயங்களை மறந்து அதனால் அலைச்சல் அதிகரிக்கும்.

## நாளை

ஆவணி - 16 சனிக்கிழமை 01.09.2012
திதி: பிரதமை பி.இ. 08.06 வரை
நட்சத்திரம்: சதயம் கா. 06.54 வரை
சுபநேரம்: 03.05- 04.35 வரை
ராகு காலம்: 09.35- 10.35 வரை

**துலாம்:** வழக்கத்துக்கு மாறாக கூடுதல் நேரம் பணிபுரியலாம். மறதியால் அவதிகளுக்கு ஆளாகலாம். ஒருவர் மூலம் சில வேலைகளை முடிக்க முற்பட்டு, அது முடியாமல் மற்றொருவர் மூலம் முடிப்பீர்கள். உறவினர் ஒருவரைப் பற்றிய இரகசியம் ஒன்றை, மற்றொரு உறவினர்களிடம் தெரிவிப்பீர்கள்.

**விருச்சிகம்:** வீண் பேச்சுக்களைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். உறவினர் ஒருவருக்குத் தெரிந்த ஒருவர் உங்களுக்கும் அறிமுகமாவார். சில விடயங்களில் விட்டுக் கொடுக்காமல் பிடிவாதமாக நடந்து கொள்வீர்கள். தாயார் உடல் நலன் தொடர்பான விடயங்களில் அக்கறை அவசியம். அடுத்தவர்களுக்காக சில வேலைகளைச் செய்வீர்கள்.

**தனுசு:** எந்த விடயத்திலும் சாமர்த்தியமாக நடந்து கொள்வீர்கள். தம்பதியர் இடையே அன்னோன்யம் அதிகரிக்கும். நண்பர்கள் சிலரைப் பாராட்டிப் பேசியே காரியம் சாதிப்பீர்கள். சிலரிடம் அவசர உதவிகள் கிடைக்கும். நீண்ட தூர பயணங்கள் செல்ல திட்டம் போடுவீர்கள்.

**மகரம்:** உங்களுக்காக மட்டுமின்றி, மற்றவர்களுக்காக எடுத்த காரியங்களிலும் குழப்பங்கள், பிரச்சினைகளைச் சந்திப்பீர்கள். தொழில் ரீதியான முயற்சிகளுக்கு தகுந்த உதவிகள் கிடைக்கும். பிடித்தமான கோயில் ஒன்றுக்கு சென்று வழிபாடுகளை மேற்கொள்வீர்கள்.

**கும்பம்:** நினைத்தற்கு மாறாக சில விடயங்கள் நடக்கும். சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிப்பர். தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகம் அடைவீர்கள். கூட்டுத் தொழில் விவகாரங்களில் எச்சரிக்கை அவசியம். திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடி நடக்கும். புதிய அனுபவங்களைப் பெறுவீர்கள்.

**மீனம்:** தொழில் ரீதியாக அல்லது முக்கியமான வேலையாக சிலர் உங்களைத் தேடி வருவார்கள். சிறு விஷயங்களுக்காக கணவன், மனைவி இடையே வாக்குவாதங்கள் ஏற்படும். மற்றவர்கள் செய்த தவறாமல் நீங்கள் வீண் பழிகளைச் சந்திப்பீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | | 1 | | 9 | 3 | |
| | 3 | | | 2 | 4 | 5 | 6 | |
| | | | | 7 | | 4 | | |
| 2 | | | | 5 | 7 | | 1 | |
| 7 | 5 | 6 | | | | 8 | 9 | 3 |
| | 8 | | 3 | 6 | | | | 5 |
| | | 2 | | 8 | | | | |
| | 4 | 5 | 2 | 3 | | | | |
| | 7 | 8 | | 9 | | | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 8 | 7 | 6 | 2 | 9 | 1 | 3 | 4 |
| 1 | 4 | 9 | 7 | 5 | 3 | 8 | 6 | 2 |
| 2 | 6 | 3 | 8 | 4 | 1 | 9 | 5 | 7 |
| 8 | 7 | 6 | 3 | 1 | 2 | 5 | 4 | 9 |
| 3 | 5 | 4 | 9 | 8 | 7 | 6 | 2 | 1 |
| 9 | 2 | 1 | 4 | 6 | 5 | 3 | 7 | 8 |
| 7 | 3 | 5 | 1 | 9 | 4 | 2 | 8 | 6 |
| 4 | 9 | 8 | 2 | 3 | 6 | 7 | 1 | 5 |
| 6 | 1 | 5 | 5 | 7 | 8 | 4 | 9 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## ஏழாலை தெற்கு களபாவோடை வசந்த நாக பூசணி அம்பாள் தேவஸ்தானம் வருடாந்த லட்சார்ச்சனை விஞ்ஞாபனம்

காலம் : 01.09.2012 சனிக்கிழமை
காலை 8.30 - 12.00 மணிவரை
02.09.2012 ஞாயிற்றுக்கிழமை
காலை 8.30 - 12.00 மணி வரை
03.09.2012 திங்கட்கிழமை 1008
சங்காபிஷேகம்
காலை 7.00 - 10.30 மணி வரை

**தினமும் அன்னதானம் இடம்பெறும்**

லட்சார்ச்சனை நடைபெற ஆசி வழங்குபவர்
தா. மகாதேவகுருக்கள்
பிரதம குருக்கள் : தியாக கெங்காதார குருக்கள்
தேவஸ்தானம்
(22380)(6.7.8)


## மொழித்தடையை நீக்க சிறுவர் நூலகங்கள் அவசியம்

யாழ்ப்பாணம், ஒக.31

யாழ். மாவட்டத்தில் சிறுவர் நூலகங்களை அபிவிருத்தி செய்து, தமிழ் மொழி மூலமான நூல்களை காட்சிப்படுத்துவதன் மூலம் எமது சமுதாயத்தில் பல வீனமடைந்து வரும் மொழித்தடையை நீக்க முடியும்- எனத் தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக நூலகர் காந்தலட்சுமி அருளானந்தம்.

ஏசியாபவுண்டேசன் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட மக்களுக்கு நூல்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்று யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தில் அதிகளவான நூலகங்கள் பலவீனமடைந்து அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளன. சிறுவர்கள் மத்தியில் வாசிப்பை மேம்படுத்துவதன் மூலம் மொழித் தடைகளைப் போக்குவதுடன், சிறுவர்களின் வாசிப்புப் பழக்கத்தையும் மேம்படுத்த முடியும். இதற்கமைவாக சிறுவர் நூலகங்களை மேம்படுத்தி உதவ சமூக நிறுவனங்கள் முன் வரவேண்டும்- எனவும் தெரிவித்தார். (3-14)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் அழைப்பும்

மலர்வு 01 ★ 01 ★ 1957



உதிர்வு 13 ★ 08 ★ 2011

கடந்த 13.08.2011 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் நவரட்ணம் புண்ணியமூர்த்தி**
**(இலங்கை மின்சாரசபை மின்பாதையாளர் தரம் - I)**

அன்புள்ள அப்பாவே!
கண் இமைபோன்ற காவலரே
எங்கள் இதயங்கள் அழும் ஓசை
உறங்கிய உங்களுக்கு கேட்டிடாதோ
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் நித்தமும்
உங்கள் நினைவுகள் நிழலென எங்களுடன் தொடரும்

எமது குடும்பத் தலைவரின் ஓராண்டு நினைவுதின ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (31.08.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவர்களின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 31, புங்கன்குளம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**
(22125) (45.6.7)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 31.07.1987
இறப்பு 15.09.2008
திதி: பௌர்ணமி 31.08.2012

**அமரர் கமலநாதன் மயூரன்**
[B.B.M. பெங்களூர்]

பாவியரின் கொடுமையினால் -அன்புப்
பாலகனே நீமறைந்தாய்
நின் ஆவியது பிரிந்ததனால் -நாம்
ஆற்றொணாத் துயரடைந்தோம்
நீ பிரிந்த நிலையதனால்-இங்கே
நிம்மதியை நாமிழந்தோம்
வான்மழை போல் கண்ணீரை - இன்று
வையகத்தே நாம் சொரிந்தோம்

குடும்பத்தினர்
கலட்டி அம்மன் வீதி,
தும்பளை, பருத்தித்துறை.
(22358)(5-6-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐந்து நாள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு நேற்றுமுன்தினம் காலை இலங்கை வந்தடைந்த சீன தேசிய பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் லியாங் குவாங்லியை பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி எயார் சீப் மார்ஷல் ரொஷான் குணதிலக்க, இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஜகத் ஜயசூரிய, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சோமதிலக்க திஸாநாயக்க, விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் ஹர்ஷ அபேவிக்ரம ஆகியோர் வரவேற்கின்றனர்.

# சீனப் பாதுகாப்பு அமைச்சரை வரவேற்கச் செல்லாத கோத்தா

கொழும்பு,ஓக.31

சீனப் பாதுகாப்பு அமைச்சரை வெளிவிவகார அமைச்சர் பீரிஸும் பாதுகாப்புத்துறை உயர் அதிகாரிகளும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வரவேற்றனர். ஆனால் பாதுகாப்பு அமைச்சைக் கவனிக்கும் அதன் செயலாளரான கோத்தபாய ராஜபக்ஷ அங்கு செல்லவில்லை. கோத்தபாய ராஜபக்ஷ சூடான் சென்றுள்ளதாலேயே, சீனப் பாதுகாப்பு அமைச்சரை வரவேற்கும் நிகழ்வில் பங்கேற்கவில்லை என்று இலங்கை பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அவர் சூடானில் முக்கியமான இடங்கள் மற்றும் இராணுவ நிலைகளுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளதுடன், முக்கிய பாதுகாப்பு அதிகாரிகளையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகள் மற்றும் ஒத்துழைப்புகளை அதிகரித்துக் கொள்வது குறித்து கோத்தபாய ராஜபக்ஷ, சூடானிய பாதுகாப்புச் செயலருடன் பேச்சு நடத்துவார் என்று அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

அதேவேளை, சீனப் பாதுகாப்பு அமைச்சரின் பயணம் பல வாரங்களுக்கு முன்னரே உறுதி செய்யப்பட்டுவிட்ட நிலையில், கோத்தபாய ராஜபக்ஷ திடீரென சூடானுக்கு மேற்கொண்டுள்ள பயணம் கேள்விகளை எழுப்பியுள்ளது.

எனினும், சீனப் பாதுகாப்பு அமைச்சர் நாடு திரும்ப முன்னர் அவர் கொழும்பு திரும்பி, ஜெனரல் லியாங் குவாங்லியுடன் பேச்சுகளை நடத்துவார் என்று பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# இலங்கைக்குப் படையெடுத்த சீன ஜெனரல்கள்

கொழும்பு,ஓக.31

இலங்கைக்கு வந்துள்ள சீனப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் லியாங் குவாங்லியுடன், சீனப் படைத்துறையை சேர்ந்த ஜெனரல் தரத்துக்கு நிகரான பதவிகளை வகிக்கும் 11 உயர் அதிகாரிகளும் கொழும்பு வந்துள்ளனர்.

ஒரே நேரத்தில் வெளிநாடு ஒன்றின் அதிகளவிலான அதிஉயர் மட்டப் படை அதிகாரிகள் இலங்கைக்கு அரசு முறைப் பயணமாக வந்திருப்பது இதுவே முதல் முறை என்று கூறப்படுகி றது.

சீனப் பாதுகாப்பு அமைச்சருடன் சீனாவின் அதிஉயர் மட்ட பாதுகாப்பு அதிகாரிகள் 23 பேர் கொழும்பு வந்துள்ளனர். நேற்றுமுன்தினம் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த இவர்களுக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

சீனப் பாதுகாப்பு அமைச்சர் தலைமையிலான குழுவினரை அமைச்சர் பீரிஸுடன் இலங்கை கூட்டுப் படைகளின் தளபதி, முப்படைகளின் தளபதிகள் விமான நிலையத்தில் வர வேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

# சீனப் பாதுகாப்பு அமைச்சரை சந்தித்துவிட்டே மஹிந்த பயணம்

கொழும்பு,ஓக.31

சீனப் பாதுகாப்பு அமைச்சரைச் சந்தித்து விட்டே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் மாலை ஈரான் சென்றுள்ளார்.

அணிசேரா நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஈரான் சென்றுள்ளார்.

சீனப் பாதுகாப்பு அமைச்சர் நேற்றுமுன்தினம் பிற்பகல் கொழும்பு வந்ததுமே அவரை அலரி மாளிகையில் ஜனாதிபதி சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பில் சீன பாதுகாப்பு அமைச்சர் உள்ளிட்ட 13 முக்கிய சீனப் படை அதிகாரிகள் பங்கேற்றனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஈரானில் இருந்து திரும்பும் வரை சீனப் பாதுகாப்பு அமைச்சர் கொழும்பில் தங்கியிருப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ச)

# காலபோக நெல் முழுவதையும் கொள்வனவு செய்யத் திட்டம்

## வர்த்தக அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,ஓக.31

விவசாயிகளிடமிருந்து அனைத்து நெல்லையும் கொள்வனவு செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக 2 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதோடு, 90 வீதமான களஞ்சியங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்று கூட்டுறவு மற்றும் உள்துறை வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

விவசாயிகளிடம் இருந்து அரசு நெல் கொள்வனவு செய்வதில்லையென எதிர்க்கட்சி தெரிவிக்கும் குற்றச்சாட்டை முற்றாக அவர் நிராகரித்துள்ளார்.

ஐ.ம.சு.மு. ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் மாநாட்டில் நேற்றுமுன்தினம் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த போகத்தின் போது கொள்வனவு செய்யப்பட்ட பழைய நெல் ஒரு லட்சத்து 30 ஆயிரம் தொன் கையிருப்பில் உள்ளது. அது சந்தைக்கு விடப்படாது, அநுராதபுரத்தில் உள்ள 'தேசத்துக்கு மகுடம்' களஞ்சியத்தில் வைக்கப்பட்டுள்ளது. நெல்கொள்வனவுக்கு தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

(ச)

# ஆள் கடத்தலுக்கு 20 வருட சிறை

## விரைவில் சட்டம் வருகிறது என்கிறார் சூளானந்த பெரேரா

கொழும்பு,ஓக.31

ஆள்கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு 20 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதிப்பது குறித்து அரசு தீர்மானித்துள்ளதாக என்று குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் சூளானந்த பெரேரா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சட்டவிரோதமான முறையில் படகுகள் மூலம் வெளிநாடுகளில் புகலிடம் கோருவதற்கான ஒழுங்குகளைச் செய்வோர் மற்றும் ஆள் கடத்தல்காரர்களுக்கு எதிரான சட்டங்களை கடுமையாக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆள்கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவோரின் சொத்துக்களை முடக்குவது தொடர்பிலும் அரசு கவனம் செலுத்தி வருகின்றது. விரைவில் இந்தச் சட்டங்கள் அறிமுகம் செய்யப்படவுள்ளன.

2006ஆம் ஆண்டு குடிவரவு குடியகல்வுச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வர தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆள்கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு எதிர்காலத்தில் பிணை வழங்க முடியாத வகையில் சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சு மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளின் அடிப் படையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

சட்டவிரோத ஆள்கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களுக்கு எந்தவிதமான மன்னிப்பும் வழங்கப்படமாட்டாது - என்றார். (ச)

**சட்டவிரோத ஆள்கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு எதிர்காலத்தில் பிணை வழங்க முடியாத வகையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப் படவுள்ளது.**



# பரீட்சைகளை அரசியலாக்க வேண்டாம்

## அமைச்சர் டலஸ் அழகப்பெரும கோரிக்கை

கொழும்பு,ஓக.31

பரீட்சை முறை தொடர்பில் மாணவர்களுக்கு இருக்கும் நம்பிக்கையைக் குழப்ப முயல வேண்டாம் என்று அரசு எதிர்க்கட்சிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. தங்களுடைய அரசியல் வங்குரோத்து நிலையை மறைப்பதற்காக பரீட்சைகள் தொடர்பிலான விடயங்களை அரசியலாக்க வேண்டாம் என்று அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

ஐ.ம.சு.மு. ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்றுமுன்தினம் புதன்கிழமை மகாவலி நிலையத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்பொழுது 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை குறித்து குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்படுகின்றன. வினாத் தாள் முன்கூட்டியே வெளியானதாகக் கூறப்படுவது குறித்து புலனாய்வுப் பிரிவு விசாரணை நடத்துகிறது. வினாப்பத்திரங்களை கல்வி அமைச்சர் தயார்படுத்துவதில்லை. வரலாற்றில் இது போன்ற தவறுகள் நிகழ்ந்துள்ளன.

சிறில் மத்தியூ அமைச்சராக இருந்த போது முன்கூட்டியே வெளியான வினாத்தாள்கள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டன. 2003 ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த போது உயர்தர பௌதிகவியல் பாடப் பரீட்சை ரத்துச் செய்யப்பட்டு மீளப் பரீட்சை நடத்தப்பட்டது.

எனவே, பரீட்சைகள் தொடர்பில் மாணவர்களுக்குள்ள நம்பிக்கையை அரசியல் லாபம் பெறுவதற்காக சீர்குலைக்க வேண்டாம்.

புத்தபெருமானின் தந்த தாதுவைக் காட்டி அரசு வாக்குப்பெற முயல்வதாக ஐ.தே.க. செயலாளர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்த அறிக்கை குறித்து வெட்கப்படுகிறோம். இது ஐ.தே.க.வின் வங்குரோத்து நிலைமையையே காட்டுகிறது. இது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒரு வருடத்துக்கு முன் இந்தியப் பிரதமரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.



தேர்தல் ஆணையாளர் சுதந்திரமான தேர்தலொன்றை நடத்த சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறார். இதற்கு ஐ.ம.சு.மு. முழு ஒத்துழைப்பும் வழங்கும். பொலிஸாரும் பக்கச் சார்பின்றி செயற்பட்டு வருகின்றனர்.

இனவாதத்தைத் தூண்டி அரசியல் செய்வதை அனைவரும்கைவிட வேண்டும். எதிர்க் கட்சிகள் இன நல்லுறவைக் குழப்ப வேண்டாம்- என்றார். (ச)

# கூடங்குளம் அணுமின் நிலையம் இலங்கைக்குப் பெரும் பாதிப்பு

கொழும்பு,ஓக.31

தமிழகத்தின் கூடங்குளம் அணுமின்சார நியைம் இலங் கைக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று இலங்கையின் சூழலியலாளர்கள் மீண்டும் எச்சரித்துள்ளனர்.

இலங்கையின் வெளியுறவு அமைச்சு இந்த விடயத்தை இந்திய அரசின் கவனத்துக்குக் கொண்டு செல்லவேண்டும் என்று இலங்கையின் சூழ லியலாளர்களின் சட்டத்தரணி ஜெகத் குணவர்த்தன தெரிவித்தார்.

அணுமின் சார உற்பத்தியை மேற்கொள்ளும் முன்னர் இந்திய அரசு அருகில் உள்ள நாடுகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும் என்று அவர் கேட்டுள்ளார்.

கூடங்குளம் அணுமின் சார உற்பத்தி மையத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கை அரசு முன்னெச்சரிக்கைக் கோபுரங்களை அமைக்க வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார்.

(ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்தில் காயமடைந்த பெண் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்

யாழ்ப்பாணம், ஓக.31

ஓட்டோ விபத்தில் படு காயமடைந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குடும்பப்பெண் சிகிச்சை பயனளிக்காது நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து சுன்னாகம் பஸ் நிலையப் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் மூளாய் வீதி, சுழிபுரத்தைச் சேர்ந்த கனகரத்தினம் கனகம்மா (வயது-56) என்பவரே உயிரிழந்தார்.

விபத்தில் சம்பந்தப்பட்ட ஓட்டோ சாரதி சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்ற உத்தரவுக்கமைய எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். என்று பொலிஸார் தெரிவித்தனர். தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

(16-4)

# ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

வடமராட்சி, ஓக.31

வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இநத நிகழ்வு எதிர்வரும் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

எனவே பிரதேச திணைக்கள தலைவர்களும், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இந்த நிகழ்வில் தவறாது கலந்துகொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(16)

# அந்தியேட்டிக் கிரியை அழைப்பு

மண்ணில்
02.09.1948



விண்ணில்
18.08.2012

## அமரர் சுப்பிரமணியம் நடராசா

பருத்தித்துறை, இம்பர்சிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருவாளர் சுப்பிரமணியம் நடராசா அவர்களின் அந்தியேட்டிக்கிரியை நாளை மறுதினம் (02.09.2012) ஞாயிற்றுக்கிழமை காலை8 மணிக்கு இம்பர்சிட்டி அந்தியேட்டி மடத்தில் நடைபெற்று அங்கம் இம்பர்சிட்டி கடலில் கரைக்கப்படும். இதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பேரன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**இம்பர்சிட்டி,**
**பருத்தித்துறை.** (சி/2994)(45.6.7)

மனைவி, பிள்ளைகள்.

# வரையறுக்கப்பட்ட பச்சிலைப்பள்ளி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், பளை

## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்குக் கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998-05-19 ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான ''வடக்குக் கிழக்கு மாகாண நிர்வாக எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இயங்கி வரும் வரையறுக்கப்பட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் குழுக்களைத் தெரிவுசெய்வதற்கான விதிகள்'' இற்கு அமைய சிற்றம்பலம் தவராசா கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 04.08.2009 ஆம் திகதிய 1596/17 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் எம்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின்படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23 இற்கமைய மேற்படி சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக் குழுத் தெரிவுக்கான கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இந்தக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் உத்தியோகத்தர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

* இதற்கமைய இந்தக் கூட்டங்களிற் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
* கிளைப் பொதுச்சபைக் கூட்டத்துக்கான நிறைவெண் கூட்டத்துக்கு சமுகமளித்து வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்களின் நான்கிலொரு (1/4) பங்கினர் அல்லது 25 பேர் அதில் எது குறைவோ அத்தொகையாகும்.
* தவிசாளர் குறித்த கிளையின் பொதுச் சபையில் இருந்து கிளைக்குழுவுக்கான ஒன்பது (09) உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச்சபையை கோருவார். இவர்களுள் ஆகக்குறைந்தது இருவராவது (02) 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
* சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் ஒன்பது பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்வார்.
* இரண்டு அங்கத்தவர்களுக்கு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட அங்கத்தவர்களுக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
* தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையிற் பிரகடனப்படுத்துவதுடன் சங்கச் செயலாளருக்கும் எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.
* கிளைப் பொதுச்சபைக் கூட்டத்துக்கு வாக்களிக்கத் தகைமையுடைய உறுப்பினர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரால் 16.08.1998 ஆம் திகதிய 1028/06 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய கூட்ட அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. அறிவித்தல் கிடைக்காத வாக்களிக்க தகுதியுடைய அங்கத்தவர்களும் அன்றைய கூட்டத்துக்கு சமுகமளித்துத் தங்கள் ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தி கூட்டுறவு அமைப்பினை ஜனநாயக ஆளுமை கொண்டதாக செயல்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

### கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரம்

### கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் நடைபெறும் திகதியும் காலமும் 01.09.2012 சனிக்கிழமை

| கிளை இல | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | கூட்டம் நடைபெறும் திகதி நேரம் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 01. | பளை | ந.நாவேந்தன் | 01.09.2012 சனிக்கிழமை மு.ப. 10 மணி | பளை மத்திய கல்லூரி |
| 02. | மாசார் | சோ.கிருஷ்ணகுமார் | " | மாசார் அ.த.க.பாடசாலை |
| 03. | முள்ளிப்பற்று | க.விஷ்ணுகரன் | " | இயக்கச்சி அ.த.க.பாடசாலை |
| 04. | சோரன்பற்று | வி.சிவபாலன் | " | சோரன்பற்று கணேசா வித்தியாலயம் |
| 05. | புலோப்பளை | இ.ஜெகதீபன் | " | புலோப்பளை றோ.க.பாடசாலை |
| 06. | இத்தாவில் | க.செல்வகுமார் | " | பளை மத்திய கல்லூரி |
| 07. | முகமாலை | இ.விஜயகுமார் | " | பளை மத்திய கல்லூரி |
| 09. | கிளாலி | சி. சிவாகரன் | " | கிளாலி றோ.க.த.க.பாடசாலை |
| 10. | புலோப்பளை கிழக்கு | ரி.என்.ராஜா | " | புலோப்பளை றோ.க.பாடசாலை |
| 11. | அல்லிப்பளை | கே. செந்தூரன் | " | புலோப்பளை றோ.க.பாடசாலை |
| 12. | கச்சார் வெளி | இ.சுரேஷ் | " | பளை மத்திய கல்லூரி |
| 13. | தம்பகாமம் | வே.ஸ்ரீஸ்கந்தராசா | " | பாலர் பாடசாலை வண்ணாங்கேணி வடக்கு |
| 14. | சங்கத்தார் வயல் | பகீரதன் | " | கோயில் வயல் அ.த.க.பாடசாலை |

ஒப்பம்:
சிற்றம்பலம் தவராசா
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்.

(c/3002)(5.6.7)

IIS COMPUTER COURSES

புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு 1 : 05 - 09 - 2012
பிரிவு 11 : 14 - 09 - 2012
முற்பகல் 10.00 மணி

Certificate Courses

Office Solution Development — Duration : 4 Months
Networking — Duration : 4 Months
Multimedia — Duration : 4 Months
Java Programming — Duration : 4 Months
Visual Programming — Duration : 4 Months
Web Designing — Duration : 4 Months
Hardware Technology — Duration : 4 Months
DeskTop Publishing — Duration : 4 Months
Database Management System — Duration : 4 Months

Diploma Courses

Web Development — Duration : 6 Months
Eng-Drawing & AutoCAD — Duration : 6 Months
Computer Hardware Networking — Duration : 6 Months
Multimedia — Duration : 6 Months
Computerized Accounting — Duration : 6 Months
Software Development — Duration : 6 Months


தேசிய மற்றும் சர்வதேச தரத்திற்கு அமைய முற்றிலும் மாற்றியமைக்கப்பட்ட பாடவிதானங்களுடன் இக்கற்கை நெறிகள் கல்வியாண்டு 2012 இல் அறிமுகப்படுத்தப் படுகின்றது. இக்கற்கை நெறிகள் மூலம் மாணவர்கள் உயர் கல்வி, வேலை வாய்ப்புக்களை இலகுவாக்கிக் கொள்ள முடியும்.

மேலதிக விவரங்களுக்கு:
021 4 922 741

INSTITUTE OF INFORMATICS STUDIES
100, Clock Tower Road, Jaffna.
T.P :021 222 2831 Fax:021 222 6933

(சி/2989)(6.7.8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




5 மாவட்டங்களிலும் பெரும் பாலும் மேகக் கூட்டத் துடன் கூடிய காலநிலை நிலவும்.

## வேகக்கட்டுப்பாட்டு கற்கள் அமைப்பு

தென்மராட்சி, ஓக.31

யாழ். மாவட்டத்தில் அகலிப்பு பணிகள் பூர்த்தி யடைந்த வீதிகளில் வேகக் கட்டுப்பாட்டு கற்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபை யினரால் அமைக்கப்பட்டு வருகின்றன. தென்மராட்சி பிரதேசத்தில் அகலிப் புப்பணிகள் பூர்த்தியடைந்த கைதடி- கோப்பாய் வீதியில் வேகக் கட்டுப்பாட்டு கற்கள் நடப்பட்டுள்ளன. (3)

# இலங்கைப் படையினருக்கான பயிற்சி: மன்மோகன் நாடு திரும்பியதும் முடிவு



வெலிங்டன்இராணுவப் பயிற்சி முகாமில் பயிற்சி பெற்று வரும் ஸ்ரீலங்கா படை அதிகாரிகள் விரைவில் திருப்பி அனுப்பப்படுவார்கள்.

அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் பங்கேற்க ஈரான் சென்றுள்ள இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் நாடு திரும்பியதும் இலங்கை படையினருக்குப் பயிற்சி அளிப்பது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் என்று இந்தியப் பிரதமர் செயல கத்துக்கான இணையமைச் சர் நாராயணசாமி நேற்று முன்தினம் செய்தியாளர் களிடம் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்த தாவது:-

வெலிங்டன் இராணுவப் பயிற்சி முகாமில் பயிற்சி பெற்று வரும் இலங்கை படை அதிகாரிகளைத் திருப்பி அனுப்பக்கோரி, தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் வலி யுறுத்தி வருகின்றன.

இந்தநிலையில், பாது காப்பு இணையமைச்சர் பல்லம் ராஜு, இலங்கை எமது நட்பு நாடு, இலங்கை படையினருக்கான பயிற்சி களை இந்தியா தொடர்ந்தும் வழங்கும் என்று கூறியது, தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களிடம் கடும் கோபத்தை ஏற்படுத்தி யுள்ளது எனவும் வெலிங் டன் இராணுவப் பயிற்சி முகாமில் பயிற்சி பெற்று வரும் இலங்கை படை அதிகாரிகள் விரைவில் திருப்பி அனுப்பப்படுவார் கள் என்று பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி தம்மிடம் உறுதி அளித்துள்ளனர் என் றும், பிரதமர் மன்மோகன் சிங் நாடு திரும்பியதும், இலங்கைப் படையினருக் குப் பயிற்சி அளிப்பது குறித்து ஆலோசித்து இறுதி முடிவு எடுக்கப்படும் என் றும் கூறியுள்ளார். (3)

# நூல்கள் கையளிப்பு




யாழ்ப்பாணம், ஓக.31

ஏசியா பவுண்டேசன் நிறு வனத்தின் அனுசரணை யுடன் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 60 நூலகங்களுக்கு ஒருதொகுதிநூல்கள்கையளிக் கும் நிகழ்வு நேற்று யாழ். பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நூலகங்களில் வாசிப்புத் திறனை வலுவூட்டும் நோக் குடன் சகல மாவட்டங் களையும் சேர்ந்த நூலகங் களுக்கு இலவசமாக நூல் அன்பளிப்புச் செய்துவரும் 'ஏசியா பவுண்டேசன்' நிறு வனம் இந்த வருடம் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நூல கங்களுக்கு நூல்களை வழங்கியுள்ளது.

இந்த நிகழ்வில் ஏசியா பவுண்டேசன் நிறுவனத் தின் பிரதிநிதி அன்ரன் நல்லதம்பி, யாழ். மாநகர சபை ஆணையாளர் பிரணவ நாதன், ஸ்ரீலங்கா ரெலி கொம் நிறுவனத்தின் பிராந் திய முகாமையாளர் எஸ். சிவானந்தன் உட்பட பொது நூலகர்களும் கலந்து கொண் டனர்.

பொதுநூலகங்களுக்கு நூல் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து வாசிப்பை மேம் படுத்துவதற்கான கருத்தரங் கும் இடம்பெற்றது. (3-14)

# நுளம்பு வலைகள் கையளிப்பு

தென்மராட்சி, ஓக.31

வரணி வடக்கு மற்றும் கரம்பைக்குறிச்சி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கு நாளை சனிக்கிழமை நுளம்பு வலைகள் விநியோகிக்கப்படவுள்ளன.

சுகாதாரத் திணைக்களத்தினால் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு வழங்கப்பட்ட நுளம்பு வலைகளே நாளை பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளன.

கடந்த மே மாதம் வரணி வடக்குப் பிரிவு குடும்பங்களுக்கு நுளம்பு வலைகள் விநி யோகிக்கப்பட்ட போது அவை கிடைக்கப் பெறாத குடும்பங்களுக்கு நாளை நுளம்பு வலைகள் விநியோகிக்கப்படும் என்று தெரி விக்கப்பட்டது.

இதேவேளை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதி களில் பிறக்கும் குழந்தைகளுக்கு விநி யோகிக்கவென ஒருதொகுதி நுளம்பு வலைகள் சுகாதாரத் திணைக்களத்தினால் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு கையளிக்கப்பட்டுள்ளன.

நாளை தொடக்கம் சுகாதார வைத் திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பிரிவுகளில் பிறக்கும் குழந்தைகளுக்கும் நுளம்பு வலைகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (3-9)

## நெற்செய்கையாளருக்கு உரமானியம்

தென்மராட்சி, ஓக. 31

சாவகச்சேரி கல்வயல் கமக்கார அமைப்பைச் சேர்ந்த நெற் செய்கையாளர்களுக்கான உரமானிய விண்ணப்பப்படிவங்கள் நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற் றுக்கிழமையும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை விநியோகிக்கப்படுமென அமைப்பின் செயலாளர் கா. வேதநாயகம் அறிவித்துள்ளார்.

பூர்த்தி செய்யப்பட்ட உரமானிய விண்ணப்பப்படிவங்கள் எதிர்வரும் 3 ஆம் திகதி திங்கட்கிழமை கையளிக்கப்பட வேண்டி யுள்ளதால் அமைப்பின் அனைத்து நெற்செய்கையாளர் களையும் வருகை தருமாறும் அறிவித்துள்ளார். (3-9)

**தவறிவிட்டது**

மீசாலை மேற்கு, மீசாலையைச் சேர்ந்த தில்லையம்பலம் சரவணமுத்து என்பவருடைய (NIC 593222560V) தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதி அட்டை, விசேட அடையாள அட்டை என்பன திங்கட்கிழமை (27.08.2012) நண்பகல் சாவகச்சேரி பிரதேச செயலக பக்கமாக உள்ள வீதியில் தவறிவிட் டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தந்துதவுமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும். 'சாய்ராம் மருந்தகம்', கல்மடி வீதி, சாவகச்சேரி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (சி/9360) (5-6-7)

**வீடு விற்பனைக்கு**

யாழ் மானிப்பாய் மெமோறியல் பாடசாலைக்கு மிக அருகில் சகல வசதிகளுட னும் அமைந்த 1½ பரப்பு காணியிலுள்ள வீடு உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0750 394 864

(18732) (5-6-7)

**31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு**



திருமதி மகேந்திரராசா மாலினி

தோற்றம் 19★05★1958

மறைவு 02★08★2012

கடந்த 02.08.2012 வியாழக்கிழமை சிவபத மடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்தியம் இன்று (31.08.2012) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடை பெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

626/8, கே.கே.எஸ். றோட்,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(22381) (45.6.7)

## பச்சிலைப்பள்ளி கூட்டுறவுச் சங்க கிளைகளுக்கு உறுப்பினர் தெரிவு

பளை, ஓக.31

பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட் டுறவுச் சங்கத்தின் 13 கிளைகளுக்கும் உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற் கான கூட்டம் கூட் டுறவு அபிவிருத்தி உதவி ஆணை யாள ரினால் அறிவிக்கப் பட்ட நிலையங் களில் நாளை சனிக் கிழமை நடைபெற வுள்ளது.

கிளைக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு தகைமை யுள்ள சங்க அங்கத்தவர் களுக்கு சங்கத்தி னால் கடிதங்கள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

கடிதங்கள் கிடைக் காத உறுப்பினர்கள் உரிய நிலையங் களுக்குச் சென்று கூட்டத்தில் பங்கு பற்றி கிளைக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்யுமாறு பச்சிலைப்பள்ளி பலநோக்கு சங்கத் தலைவர் அறிவித் துள்ளார். (3-9)

A/L இன் பின்னர்...

உங்கள் பொறியியலாளர் ஆகும் கனவை நனவாக்கும்!

City & Guilds Graduate Diploma in Engineering

(Accepted by IET, IMechE, ice)



பிரித்தானிய Engineering Council லினால் அங்கத்துவம் பெற்ற IET, IMechE, ice போன்ற பொறியியலாளர் தொழில்சார் நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்ட பொறியியலாளர் சான்றிதழ்.


Civil Engineering
Electronics Engineering
Quantity Surveying
Motor Vehicle Engineering
Electrical Engineering
Mechanical Engineering
Refrigeration & A/C

2011 ஆம் ஆண்டு கணிதப் பிரிவில் கல்வி கற்கும் போது City & Guilds பற்றி தெரிந்து கொண்டேன். A/L பரீட்சை எடுத்த பின்னர் Result வரும் மட்டும் காத்திருக்காமல் City & Guilds Civil Engineering Diploma கற்கைநெறிக்கு சேர்ந்து, கடந்த June மாதம் Diploma பட்டம் பெற்று இன்று இலங்கையில் புகழ் பெற்ற நிறுவனத்தில் தொழில் புரிந்து கொண்டு Advanced Diploma பாடநெறியை தொடர்கின்றேன்.

அன்று நான் எடுத்த முடிவு சரியானது என்பதை இப்போது உணர்கின்றேன் ஏனெனில் என்னுடன் உயர் கல்வி கற்ற பலர் இன்றும் தமது எதிர்காலத்தை நினைத்து காலத்தை வீணாக்கிக் கொண்டு இருக்கின்றார்கள். எனது எதிர்கால இலட்சியம் City & Guilds Graduate Diploma முடித்து பிரித்தானிய Engineering Council னால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பொறியியலாளராக வருவதுதான்.

விஜுஜன்
வெள்ளவத்தை.

நீங்கள் எந்த நிலையில் இருக்கின்றீர்கள்?




மேலதிக விபரங்களைப் பெறவும், பதிவுகளை மேற்கொள்ளவும்.

இன்றே அழையுங்கள்.
0771 067 394 or 0214 66 66 99

அல்லது SMS மூலம் விபரங்களைப் பெற ..
உங்கள் (Name) (Address) (Course) போன்ற விபரங்களை Type செய்து 0777 762 283 க்கு SMS செய்யுங்கள்.

City & Guilds Approved Centre

SCOT

SKILLS COLLEGE OF TECHNOLOGY

Nugegoda Campus
No. 102, Stanley Thilakarathna Mw, Nugegoda.
011 4 696 696
scot@skillsinternational.lk

Kurunegala Campus
No. 252, Puttalam Rd, Kurunegala.
037 3 616 868
kurunegala@skillsinternational.lk

Kandy Campus
No. 511, Peradeniya Road, Kandy.
081 4 951 522
kandy@skillsinternational.lk

Jaffna Campus
No. 207, Navalar Road, Jaffna.
021 4 666 699
jaffna@skillsinternational.lk

(சி/2657)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நிக்கோன் அறிமுகப்படுத்தும் அன்ரொயிட் கமரா

மக்கள் மனம் வென்ற உற்பத்திகளை சந்தைகளில் அறிமுகப்படுத்திவரும் நிக்கோன் நிறுவனமானது, தற்போது முதலாவது அன்ரோயிட்டை அடிப்படையாகக் கொண்ட Coolpix S800c என்ற கமராவை அறிமுகப்படுத்துகின்றது.

இக்கமராவில் GPS வசதி காணப்படுவதுடன் 16 மெகாபிக்சல் உடைய BSI CMOS சென்சாரினையும் கொண்டுள்ளது. தவிர 10x என்ற உருப்பெருக்கம் கொண்ட வில்லைகள் பொருத்தப்பட்டுள்ளது. மேலும் 3.5 அங்குல அளவுகொண்ட OLED WVGA தொடுதிரை வசதி, 1080p காணொலிப் பதிவு, Android 2.3 போன்றவற்றையும் தன்னகத்தே கொண்டுள்ளது. 4GB சேமிப்பு வதியும் கொண்ட இந்தக் கமராவின் பெறுமதி 350 அமெரிக்க டொலர்கள் ஆகும்.

## அறிமுகமாகின்றது LG Optimus L9 கைப்பேசிகள்



எல்.ஜி. நிறுவனமானது இரட்டை சிம் வசதி கொண்டதும் நவீன தொழில்நுட்பத்தில் அமைந்ததுமான ஒப்டிமஸ் எல் 9 (Optimus L9) எனப்படும் கைப்பேசிகளை விரைவில் அறிமுகப்படுத்தவுள்ளது. கொரிய நாட்டிலில் தயாரிக்கப்பட்டு வரும் இந்தக் கைப்பேசிகள் கூகுளின் அன் ரோயிட் இயங்குதளத்தில் செயற்படக் கூடியவாறு உருவாக்கப்படுகின்றது. மேலும் 1GHz வேகத்தில் செயற்படவுள்ள புரோசசர், 4.7 அங்குலமுடைய தொடுதிரை, 5 மெகா பிக்சல்கள் உடைய கமரா போன்ற அம்சங்களை உள்ளடக்கியதாவும் காணப்படுகின்றது.

125 கிராம்களே உடைய இந்தக் கைப்பேசியின் உள்ளக நினைவகமானது 4GB வரை காணப்படுவதுடன் 44 வகையான மொழிகளுக்கு துலக்கத்தை ஏற்படுத்தக்கூடிய Optical Character Recognition மென்பொருளையும் தன்னகத்தே கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புதிய 'மக்' இயங்குதளம்




அதி சிறந்த கணினிகளை உற்பத்தி செய்து சந்தையில் முன்னணி இடத்தில் காணப்படும் அப்பிள் நிறுவனம், தனது கணினிகளுக்கான இயங்குதளங்களை தானே உருவாக்குகின்றது என்பது யாவரும் அறிந்த விடயமாகும்.

இந்த இயங்குதளங்களில் வரிசையில் Mac OS X Mountain Lion எனும் புதிய பதிப்பு ஒன்றை அண்மையில் அப்பிள் நிறுவனம் வெளியிட்டிருந்தது. இந்த இயங்குதளம் வெளியிடப்பட்ட முதல் நான்கு நாள்களில் மட்டும் 3 மில்லியன் பயனாளர்கள் அதனை தரவிறக்கம் செய்திருந்தனர்.

இவ்வாறு மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ள Mac OS X Mountain Lion இயங்குளத்திற்கான முதாலவது பதிவேற்றத்தை தற்போது அப்பிள நிறுவனம் வெளியிட்டுள்ளது. இதில் Mac OS X Mountain Lion இயங்குதளத்தில் காணப்பட்ட பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அசைவின் மூலம் மின்னேற்றம்

நடக்கும்போது சுயமாகவே மின்னேற்றம் ஆகும் மின்கலங்களைக் கண்டுபிடித்து மின்கல உற்பத்தியில் மேலும் ஒரு புரட்சியை ஏற்படுத்தியுள்ளது ஜோர்ஜியா டெக் (Georgia Tech) ஆய்வு நிறுவனம்.

இலிதியம் அயன்களைக் கொண்டு விசேட தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்டுள்ள இந்த மின்கலங்கள் அவற்றை இணைப்பதற்கென விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ள காலணி ஒன்றின் கீழ்ப்பகுதியில் பொருத்தப்பட்டு இவ்வாறு சுயமாக மின்னேற்றம் செய்யப்படுகின்றது.

தற்போது நாணயங்களின் வடிவில் அமைக்கப்பட்டுள்ள சுயமாக மின்னேற்றமாகும் மின்கலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள போதிலும் விரைவில் இவ்வாறான தொழில்நுட்பத்தில் அமைந்த கைப்பேசிகளுக்குரிய மின்கலங்களும் கண்டுபிடிக்கப்படும் என குறித்த ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.




## பிலிப்சின் அட்டகாசமான ஒலிப்பேழை

பிலிப்ஸ் இந்தியா நிறுவனம் அட்டகாசமான புதிய பொழுதுபோக்கு சாதனங்களை மிக விரைவில் களமிறக்க இருக்கிறது. குறிப்பாக ஹோம் தியேட்டர் முதல் கையடக்க இசைத்தட்டுகள் வரை பல சிறந்த இசைப் பேழைகளை இந்திய சந்தையில் பிலிப்ஸ் இந்த ஓகஸ்ட் தொடக்கம் விற்பனை செய்யவுள்ளது. இந்த பிலிப்சின் புதிய இசைச் சாதனங்கள் ரசிகர்கள் மத்தியில் பெரிய வரவேற்பைப் பெறும் என்று நம்பலாம்.

குறிப்பாக பல புதிய ஹோம் தியேட்டர் வகைகளைக் களமிறக்க இருக்கிறது. இந்த ஹோம் தியேட்டர்களில் டி.விடி, வி.சிடி, சிடி மற்றும் யு.எஸ்.பி. போன்ற அனைத்துச் சாதனங்களையும் இணைத்துக் கொள்ளலாம். இந்த ஹோம் தியேட்டர்கள் இந்திய மதிப்பில் ரூ.9,890 இற்கு விற்கப்பட இருக்கின்றன.

அடுத்ததாக இரண்டு சிறந்த ஸ்பீக்கர்களை பிலிப்ஸ் விற்பனை செய்யவுள்ளது. இந்த ஸ்பீக்கர்கள் எச்.டி.எம்.ஐ மற்றும் ரிமோட் வசதியுடன் வருகின்றன. மேலும் சில அடக்கமான ஸ்பீக்கர்களையும் களமிறக்குகிறது பிலிப்ஸ். இந்த 3டி வகையான ஸ்பீக்கர்கள் சினிமாவின் தரத்தை வீட்டுக்கே கொண்டு வந்துவிடும்.

அதோடு கோகியர் என்ற பெயரில் எம்பி3 மற்றும் எம்பி4 ப்ளேயர்களையும் களமிறக்க இருக்கிறது. அதோடு பிலிப்ஸ், ஐபோன் மற்றும் ஐபோடுக்கான டோக்கிங் ஸ்பீக்கர்களையும் விற்பனை செய்ய இருக்கிறது. இந்த ஸ்பீக்கர்களில் சவுண்ட் ஸ்பியர் தொழில்நுட்பமும் உள்ளது.

அடுத்ததாக ஒருசில ஆன்ட்ராய்டு டோக்கிங் ஸ்பீக்கர்களையும் பிலிப்ஸ் விற்பனை செய்ய இருக்கிறது.

## விரைவில் புதிய தோற்றத்தில் யூ டியூப்

காணொலிகளைப் பகிரும் சேவையை வழங்குவதில் முன்னணியில் திகழும் யூ டியூப் இணைய சேவையானது தனது இணையப்பக்கத்தில் காணொலிகளை காட்சிப்படுத்தும் விதத்தை அதன் பயனாளர்களுக்காக மாற்றியமைக்கவுள்ளது.

தற்போது பரீட்சார்த்த நிலையில் காணப்படும் இப் புதிய அம்சமானது Mood wall எனும் பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் பயனாளர்கள் தமக்குத் தேவையான காணொலி வகைகளைக் கொண்டு இலகுவாகத் தேட முடிவதுடன் அவை தொடர்பான மேலதிக காணொலிகளையும் பார்வையிட முடியும்.

அதாவது 'லேபிள்' களை அடிப்படையாகக் கொண்ட இந்தப்புதிய தோற்றத்தைக் கொண்ட யூ டியூப் இணையப் பக்கத்தினை விரைவில் அனைத்துப் பயனரார்களும் விரைவில் பயன்படுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அறிமுகமாகிறது ஐபேட் மினி



அப்பிள் நிறுவனம் தனது புதிய ஐபோனை செப்ரெம்பர் 5 ஆம் திகதி அறிமுகம் செய்வதை தொடர்ந்து, ஒரோபர் மாதம் ஐபேட் மினி டேப்லட்டையும் அறிமுகம் செய்வ தாக புதிய தகவல்கள் வெளியாகி உள்ளன.

அடுத்து அப்பிளின் ஐபோன்-5 ஸ்மார்ட்போனுக்கு மிகுந்த எதிர்பார்ப்பு காத்திருக்கிறது. இதை எதிர்பார்ப்பு என்பதை விட வரவேற்பு காத்திருக்கிறது என்று சொல்லலாம்.

ஐபோன்-5 ஸ்மார்ட்போனின் தொழில்நுட்பங்கள் பற்றி நிறைய தொழில்நுட்ப விவரங்கள் வெளியாகி வந்தது. இதில் அப்பிளின் இந்தப் புதிய ஐபோன்-5 ஸ்மார்ட்போன், கவர்ச்சிகரமான மெல்லிய திரை வசதியை வழங்கும். வாடிக்கையாளர்கள் மத்தியில் பெரிய பாராட்டுதல்களைப் பெற்று தந்த ஐபோன் 4-எஸ் ஸ்மார்ட்போன் போல, ஐபோன்-5 ஸ்மார்ட்போன் சிறந்த தொழில்நுட்ப வசதிகளை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் ஐபோன்-5 ஸ்மார்ட்போனுக்காக வாடிக்கையாளர்கள் காத்திருக்க, இதைத் தொடர்ந்து ஐபேட் மினி டேப்லட்டும் ஒக்ரோபர் மாதம் அறிமுகம் செய்யப்படும் என்று கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமய சந்நிதிகளில்

சுன்னாகம் கிழக்கு சிவபூதவராயர் ஆலயப் பெருந்திருவிழா கடந்த 22 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெற்று வருகின்றது.

இந்த ஆலயத்தின் தீர்த்தத் திருவிழா இன்று முற்பகல் 10மணிக்கு நடைபெறவுள்ளது. (3-13)

* * *

தெல்லிப்பழை, சித்தியம்புளியடி சித்தியம்பதி அண்ணமார் ஆலய விசேட அபிஷேகம் நாளை சனிக்கிழமை அதிகாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. முற்பகல் 11 மணிக்கு விசேட பூசை நடைபெற்று நண்பகல் 12 மணிக்கு அண்ணமார் பெருமான் வெளிவீதி வலம் வரவுள்ளார். (3)

* * *

யாழ்ப்பாணம், ஓக. 31

துன்னாலை வடக்கு சகாயமாதா ஆலய வருடாந்தப் பெருவிழா செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து நடைபெறும் திருநாள் வழிபாடுகளில் 8 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6மணிக்கு நற்கருணை வழிபாடும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 6.45 மணிக்கு திருநாள் திருப்பலி பூசையும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (3-78)

* * *

வவுனியா நெளுக்குளம் சாம்பல் தோட்ட பிள்ளையார் ஆலய வருடாந்த அலங்காரத்திருவிழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி செப்ரெம்பர் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. (3-402)

## புனர் நிர்மாணத்துக்கு உதவி



யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் - பௌத்த சங்கம் சுவிற்சர்லாந்தில் இயங்கும் இந்து பௌத்த சங்கத்துடன் இணைந்து இலங்கையின் வட பகுதியில் மேற்கொண்ட பணிகளை நாட்டின் சகல பாகங்களுக்கும் விஸ்தரிக்கவுள்ளது.


இதன் ஒரு கட்டமாக மாத்தளை கொங்கஹமுல பளாபத்வெள விஜேசேகரராமய விகாரை புனரமைப்புக்கு ஒரு லட்சம் ரூபாவும், மாத்தளை வெள்ளைக்கல் அழகர் பெருமாள் திருக்கோயில் புனர் நிர்மாணத்துக்கு ஒரு லட்சம் ரூபாவும் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொங்கஹமுல பளாபத்வெள விஜேசேகரராமய விகாரையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட தமிழ் பௌத்த சங்கத்தின்செயலாளர்சுகிருஷாணந், இந்து பௌத்த சங்கத்தின் தலைவர் த.லோகேஸ்வரனால் வழங்கப்பட்ட நிதியை மேற்படி ஆலயம் மற்றும் விகாரை என்பவற்றுக்கு வழங்கினார். (வ)

## அமைதிக்கான வழி

ஞானக்கதிர்

நாம் தேடிக் கொண்டிருக்கும் அந்த அமைதி ஆத்மாக்களாகிய எம்முள் ஆழமாகப் புதைந்து இருக்கின்றது. அதாவது காமம், கோபம், பற்று, பேராசை, ஆணவம், பொறாமை ஆகிய அசுர குணங்கள் எமக்குள் இருக்க வேண்டிய அமைதி, அன்பு, சந்தோஷம் போன்ற ஆத்மாவின் தெய்வீகக் குணங்கள் அனைத்தையும் ஆழத்திற் புதைத்துவிட்டன. ஆகவே, இப்போது நாம் இவற்றை வெளியிலே தேடுவதில் பிரயோசனம் கிடையாது. ஆகவே, எம்முள் இருக்கும் அமைதியை வெளிக் கொண்டு வருவதுதான் அமைதியைப் பெறுவதற்கான சிறந்த ஒரு வழியாகும். முதலாவதாக நாம் இந்த உடல் அல்ல, நாம் என்றென்றும் அழிவில்லாத அமைதியான ஆத்மா என்ற உண்மையான ஞானத்தைப் புரிந்து அந்த ஞானத்தை எம் விழிப்புணர்வில் வைத்து ஆத்மாக்களின் தந்தையாகிய பரமாத்மா என்று அழைக்கப்படும் இறைவன் பால் எம் மனத்தை நிலைநிறுத்தி அவரை நினைவு செய்தல் வேண்டும். இந்த நினைவின் மூலமாக மட்டுமே ஆத்மா (மனிதன்) அமைதியாலும் ஆனந்தத்தாலும் அலங்கரிக்கப்படுகின்றது. இந்த அமைதியின் அலைக்கதிர்கள் இந்தச் சூழலைச் சென்றடைவதனால் நாம் வாழும் சூழலே அமைதியான சூழலாக மாறிவிடும். அப்போது மகிழ்ச்சி என்ற மாபெரும் கிடைத்தற்கரிய செல்வம் நம் வாழ்விற் குடிகொண்டுவிடும்.



தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலய வருடாந்த தீர்த்தோற்சவத்தில் அம்மன் கேணியில் தீர்த்தம் ஆடி வெளிவீதியுலா வரும் காட்சியையும், பெருந்திரளான மக்கள் திரண்டிருப்பதையும் காணலாம். (3-86)



நெடுந்தீவு மேற்கு புனித லோறஞ்ஸியார் தேவாலய உற்சவத்தின் இறுதி நாள் திருச்சுற்றுப் பிரகாரத்தின்போது... (3-7)



23 வருடங்களின் பின்னர் காரைநகர் அரசடிக்காடு கதிர்வேலாயுத சுவாமி கோயில் பெருந்திருவிழாவின் இறுதி நாள் தீ மிதிப்பு நடைபெற்றது. பக்தர்கள் புடைசூழ வேற்பெருமான் எழுந்தருளி இருப்பதையும் பக்தர் ஒருவர் தீ மிதிப்பதையும் காணலாம். (3-250)

## கிளிநொச்சியில் பயிற்சி நெறிகள்

கிளிநொச்சி, ஓக.31

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சால் தேசிய பயிலுநர் கைத்தொழில்கள் அபிவிருத்திச் சபை, கிளிநொச்சி மாவட்டத்தில் பயிற்சிகளை ஆரம்பிக்கவுள்ளது.

6 மாத காலம் கொண்ட கணினி வன்பொருள் திருத்துநர் கற்கை நெறிக்கு தரம்- 9 சித்தியடைந்திருத்தல் வேண்டும். [illegible] கற்கை நெறிக்கு [illegible] சாதாரண தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும். 9 மாத காலம் கொண்ட பிரத்தியேக செயலாளர் கற்கைநெறிக்கு சாதாரண தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும். மற்றும் 6 மாத காலம் கொண்ட கற்கைநெறியான நீர்க்குழாய் பொருத்துதல், குளிரூட்டி பொருத்துதல் ஆகியவற்றுக்கு தரம்-8 சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி 16 வயதுக்கும் 35 வயதுக்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும். தகுதியான விண்ணப்பதாரிகள் தங்களது சுயவிவரக் கோவையை தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை, ஆனந்தபுரம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு மாவட்ட முகாமையாளர் தெரிவித்துள்ளார். (3-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### எவரெஸ்ற் வெற்றிக்கிண்ண உதைபந்து

# கஜானன் 'ஹற்றிக்' கோல்; சென். அன்ரனிஸ் சம்பியன்

**ஆட்டம் ஆரம்பமாகி 5 ஆவது நிமிடத்தில் பாஷையூர் சென் .அன்ரனிஸ் விளையாட்டுக்கழக வீரர் கலிஸ்ரஸ் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி தனது அணிக்கான முதலாவது கோலினை அடித்தார். இதனால் ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது**


யாழ்ப்பாணம் , ஒக.31
கஜானனின் 'ஹற்றிக்' கோலை கொடுக்க ஊரெழு றோயலைப் பந்தாடியது பாஷையூர் சென். அன்ரனிஸ்.

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் புத்தூர் எவறெஸ்ற் விளையாட்டுக்கழகம் நடத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான 11பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டித் தொடரிலேயே இந்த வெற்றயைப் பெற்று நீண்ட காலத்துக்குப் பின்னர் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

குறித்த சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை மின்னொளியில் புத்தூர் எவறெஸ்ற் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது. இதில் பாஷையூர்சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் களமிறங்கியது.

முதல் பாதியாட்டத்தில் இரு அணியினரும் மிகச்சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்தினர். ஆட்டம் ஆரம்பமாகி 5 ஆவது நிமிடத்தில் பாஷையூர் சென் .அன்ரனிஸ் விளையாட்டுக் கழக வீரர் கலிஸ்ரஸ் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி தனது அணிக்கான முதலாவது கோலினை அடித்தார். இதனால் ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது. தொடர்ந்தும் இரண்டு அணியினரும் கோல்கள் பெறுவதற்காக முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர். 10ஆவது நிமிடத்தில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக வீரன் கஜானன் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி தனது அணிக்கான இரண்டாவது கோலினை அடித்தார். பாஷையூர் அன்ரனிஸ் அணிக்கு பதிலடி கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு ஆக்ரோசமாக ஆடத் தொடங்கிய றோயல் அணியினர், எதிர் அணியினரின் கோல்பரப்பினை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர். ஆனாலும் அந்த முயற்சிகளை முறியடித்த படி முன்னேறிய கஜானன் றோயல் அணி எதிர்பாராத தருணத்தில், தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தனது அணிக்கான மூன்றாவது கோலினைப் பெற்றுக் கொடுத்தார். ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்படுவதற்கு 2 நிமிடங்கள் இருக்கையில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியினருக்கு ஒரு தண்டனை உதை கிடைத்தது. அதனைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்ட ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியினர் கோல் அடித்தனர். ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்ட போது 3:1 என்ற கோல்கணக்கில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின்னர் இரண்டாம் பாதி ஆட்டம் தொடங்கிய போது ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி, முதல் பாதி ஆட்டத்தில் விட்ட தவறுகளை இரண்டாம் பாதியாட்டத்தில் நிவர்த்தி செய்யும் முகமாக ஆட்டதை வேகப்படுத்தி கோல் பெறுவதற்கான முயற்சியில் ஈடுபட்டது. ஆயினும் அந்த முயற்சிகள் யாவும் தோல்வியில் முடிவடைய மீண்டும் அன்ரனிஸின் கை ஓங்கியது. இரண்டாம் பாதி ஆட்டத்தின் 20 ஆவது நிமிடத்தில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி வீரன் கஜானன் தன்னுடைய 'ஹற்றிக்' கோலினை அடித்து, தனது அணியினுடைய வெற்றியினை உறுதிப்படுத்தினார். ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியினர் ஆட்டத்தின் இறுதி நிமிடம் வரை தமது அணிக்காக மேலதிக கோல்களைப் பெறவேண்டும் என்ற நோக்கோடு தமது முழு பலத்தினையும் வெளிப்படுத்தி ஆடிய போதும் அவர்களால் கோல்கள் எதுவும் பெறமுடியவில்லை. இதனால் போட்டி முடிவில் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 4:1 என்ற கோல்கணக்கில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை தனதாக்கிக் கொண்டது.



மூன்றாமிடத்திற்கான ஆட்டத்தில் வதிரிடைமண்ஸ் விளையாட்டுக்கழக அணியைஎதிர்த்து மயிலங்காடுஞான முருகன் விளையாட்டுகழக அணி மோதிக் கொண்டது. இதில் வதிரிடைமண்ஸ் விளையாடுக்கழக அணி 4:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தை தனதாக்கிக் கொண்டது.

இறுதியாட்டத்தில் சிறந்த வீரனாக பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த கஜானன் தெரிவுசெய்யப்பட்டார். இறுதியாட்ட நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் மா. பிரதீபன் கலந்து கொண்டு வெற்றி பெற்றோருக்கு பரிசில்கள் வழங்கி கௌரவித்தார்.

(ங-23)

## மன்னார் பிறீமியர் லீக் கிரிக்கெட் தொடர் அன்ரனிஸ், கிளிநொச்சி அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம் ,ஒக.31
பெரியகடை ஸ்ரார் ஈகிள் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்படும் ''மன்னார் பிறீமியர் லீக் கிரிக்கெட்'' சுற்றுப்போட்டிபரபரப்பான கட்டத்தை எட்டியுள்ளது.

இந்தச் சுற்றுத் தொடரின் 15 ஆவது போட்டி கிறீன் பீல்ட் விளையாட்டுக்கழக அணிக்கும், சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் நடைபெற்றது.

இதில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கிறீன் பீல்ட் விளையாட்டுக்கழக அணியினர் சென். அன்ரனிஸ் வீரர்களின் பந்துகளை எதிர் கொள்வதில் தடுமாறினர். இந்தத் தடுமாற்றத்தை மிகச் சரியாகப் பயன்படுத்திக் கொண்ட அன்ரனிஸ் அணியின் பந்துவீச்சாளர்கள் இலக்குவேட்டை நடத்தினர். இதனால் கிறீன்பீல்ட் அணி 10பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 54 ஓட்டங்களை பெற்றனர்.

கிறீன் பீல்ட் விளையாட்டுக்கழக அணிசார்பாக நிஷாந்தன் 10 பந்துகளில் 14 ஓட்டங்களையும், நார்தீபன் 6 பந்துகளில் 10 ஓட்டங்களையும், அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணிசார்பாக சுகந்தன் 5 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், பிரதீப் 12 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியினர் 6.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஒரு இலக்கினை மாத்திரமே இழந்து மிகச் சுலபமாக வெற்றி இலக்கினை அடைந்தனர்.

இதில் பிரதீப் 19 பந்துகளில் 30 ஓட்டங்களையும், சுகந்தன் 13 பந்துகளில் 16 ஓட்டங்களையும் தமது அணிக்காக பெற்றுக்கொடுத்து வெற்றியை உறுதி செய்தனர்.

பந்துவீச்சில் கிறீன் பீல்ட் விளையாட்டுக்கழக அணிசார்பாக வீழ்த்தப்பட்ட ஒரு இலக்கினை ரூபன் 12 ஓட்டங்களை கொடுத்து கைப்பற்றினர்.

பின்னர் நடைபெற்ற 16 ஆவது போட்டியில் ஏசியன் விளையாட்டுக்கழக அணியும்; கிளிநொச்சி மாவட்ட அணியும் மோதிக்கொண்டன.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஏசியன் விளையாட்டுக்கழக அணியினர் 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 75ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் ஏசியன் விளையாட்டுக்கழக அணிசார்பாக சுஜி 18 பந்துகளில் 21 ஓட்டங்களையும், மோகன் 21 பந்துகளில் 19ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கிளிநொச்சி மாவட்ட அணிசார்பாகஅனுசன் 17ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், சுதன் 15 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

மிகக் கடினமான இலக்கைநோக்கி, பதிலளித்தாடிய கிளிநொச்சி மாவட்ட அணியினர், கீரனின் அபாரமான துடுப்பாட்டத்தின் உதவியுடன் 8.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து வெற்றி பெற்றனர்.

கிளிநொச்சி மாவட்ட அணிசார்பாக கீரன் 25 பந்துகளில் 42 ஓட்டங்களையும், றேகன் 15பந்துகளில் 15ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் ஏசியன் விளையாட்டுக்கழக அணி சார்பாக சுதேசன், செல்வம் ஆகியோர் தலா இரு இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.

(ங-23)

## அரையிறுதியில் கலைமதி வி.க.



யாழ்ப்பாணம்,ஒக.31
பருத்தித்துறை உதைபந்தாட்ட அனுசரணையுடன் அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் 85 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் காலிறுதியாட்டம் ஒன்றில் கலைமதி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இந்தக் காலிறுதியாட்டத்தில் கலைமதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விண்மீன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் கலைமதி விளையாட்டுக்கழக அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அடுத்தடுத்து கோல் மழை பொழிந்தது. இதனால் ஆட்ட நேர நிறைவில் கலைமதி அணி 3:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றது.

(ங-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக.31
மன்னார் பெரிய கடை ஸ்ரார்ஈகிள் விளையாட்டுக் கழகம் நடத்தும் 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மன்னார் பிறீமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு பெறவுள்ள அணிகளின் விபரங்கள் வருமாறு

கிறீன்பீல்ட் விளையாட்டுக்கழகம் எதிர் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம்

ஸ்ரார்ஈகிள் விளையாட்டுக்கழகம் எதிர் சென். ஜோசப் விளையாட்டுக்கழகம்

சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் சென். விக்ரோறிஸ் விளையாட்டுக்கழகம்

ஸ்ரார்ஈகிள் விளையாட்டுக்கழகம் எதிர் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம்.

* * *

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை நவாலி அட்டகிரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் அரையிறுதி ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விபரம் வருமாறு-

இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக 'பி' அணி

நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் இளவாலை சென். ஹாட்ஸ் விளையாட்டுக்கழகம்

* * *

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும், விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து தேசிய உதைபந்தாட்ட அணிக்கான வீரர்களை தெரிவு செய்யும் செயற்திட்டத்தின் முதற்கட்டமான பிரதேச செயலகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை கரைச்சி பிரதேச செயலக அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் உருத்திரபுரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் காலை 8.30 மணி முதல் மாலை 5 மணி வரை இடம்பெறவுள்ளன. (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் விளையாட நம்பிக்கை



சர்வதேச போட்டியில் மீண்டும் விளையாடுவது குறித்து மிகுந்த நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாக இந்திய அணி வீரர் யுவராஜ் சிங் தெரிவித்துள்ளார்.
விளையாட்டுத்துறையில் வெளிப்படுத்திய திறமைகளுக்காக யுவராஜ் சிங்கிற்கு அர்ஜுனா விருதை ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி நேற்று முன்தினம் வழங்கியிருந்தார்.
நுரையீரல் புற்றுநோய்க்கு சிகிச்சை பெற்றுவரும் நிலையில், யுவராஜ் சிங் கடந்த நவம்பர் மாதத்தின் பின்னர் எந்தவொரு சர்வதேச போட்டியிலும் விளையாடவில்லை. எனினும் இலங்கையில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள உலகக் கிண்ண 'ரி-20' கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணியில் அவர் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. [5]

# ஸ்ரோஸ் ஓய்வு; நெருக்கடியில் இங்கிலாந்து



இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைவர் அன்ட்ரு ஸ்ரோஸ் அனைத்து வகையான கிரிக்கெட் போட்டியிலு மிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார்.

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அறிவிக்கப்பட்டுள்ள இந்த அறிவிப்பை யடுத்து புதிய டெஸ்ட் தலைவராக அலஸ்ரெயர் குக் அறிவிக்கப்பட்டுள்ளார்.

நீண்ட சிந்தனையின் பின்னர் இந்த முடிவை எடுத்துள்ளதாகத் தெரிவித்த அன்ட்ரு ஸ்ரோரஸ், அனைத்து வகையான கிரிக்கெட் போட்டியிலிருந்தும் உடனடியாக ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். கடினமான ஒரு முடிவாக அமைந்ததாகத் தெரிவித்த அன்ட்ரு ஸ்ரோரஸ், ஆனால் இங்கிலாந்துக் கிரிக்கெட் அணியினதும், தனதும் நலனுக்காக இந்த முடிவை எடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.

தன்னோடு இணைந்து விளையாடிய இங்கிலாந்து வீரர்கள், தனது கழகமான மிடில்செக்ஸ் கழகம், பயிற்றுவிப்பாளர்கள் ஆகியோருக்குத் தனது நன்றிகளைத் தெரிவிப்பதாகத் தெரிவித்த அவர், குறிப்பாக தற்போதைய பயிற்றுவிப்பாளரான அன்டி பிளவருக்கும், முன்னாள் பயிற்றுவிப்பாளரும், தற்போதைய இந்திய அணியின் பயிற்றுவிப்பாளருமான டங்கன் பிளெற்சருக்கும் விசேட நன்றிகளைத் தெரிவித்தார்.

துடுப்பாட்டத்தில் அதிக ஓட்டங்களைக் குவிக்க முடியாது காணப்பட்டதாகத் தெரிவித்த அன்ட்ரு ஸ்ரோரஸ், இது நீண்ட காலமாக நீடித்துக் கொண்டிருந்ததாகவும், இந்த நிலை மேம்பட வாய்ப்புக்கள் இல்லாத நிலையில் ஓய்வுபெறுவதே சிறப்பானது எனவும் தெரிவித்தார்.

தென்னாபிரிக்காவிற்கெதிரான தொடரில் 2-0 என்ற கணக்கில் தோல்வியடைந்த போதிலும், அந்தத் தொடருக்கு முன்னரே ஓய்வு பற்றிய எண்ணம் ஏற்பட்டு விட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

தனது ஓய்விற்கு அண்மையில் ஏற்பட்ட கெவின் பீற்றர்சனுடனான மோதல் நிலை காரணம் அல்ல எனத் தெரிவித்த அன்ட்ரு ஸ்ரோரஸ், கெவின் பீற்றர்சனின் பிரச்சினை தீர்க்கப்படுவதற்குத் தொடர்ந்தும் அதனோடு சம்பந்தப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்க அணிக்கு எதிராக ஆடிய 3 ஆவது டெஸ்ட் ஆட்டம் ஸ்ரோரஸின் 100 ஆவது டெஸ்ட் ஆட்டமாகும். இதுவரை 40.91 என்ற சராசரியில் 7037 டெஸ்ட் ஓட்டங்களைப் பெற்றுள்ளார். அவற்றில் 21 சதங்களும், 27 அரைச்சதங்களும் அடங்குகின்றன. 127 ஒருநாள் சர்வதேசப் போட்டியில் அவர் 6 சதங்கள், 27 அரைச்சதங்கள் அடங்கலாக 35.63 என்ற சராசரியில் 4205 ஓட்டங்களையும் குவித்துள்ளார். (5)

# சர்வதேச விருது புதிய பட்டியல் வெளியீடு

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் இந்த ஆண்டுக்கான விருதுகளுக்கான குறும்பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள விருதுகளுக்கான குறும்பட்டியலில் இலங்கையின் குமார் சங்ககார - சிறந்த கிரிக்கெட் வீரர், சிறந்த டெஸ்ட் வீரர், சிறந்த ஒருநாள் சர்வதேசப் போட்டி வீரர் ஆகியவற்றுக்கான விருதுகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளார். அவர் தவிர திலகரட்ண டில்ஷான், அஜந்த மென்டிஸ் ஆகியோர் 'ரி-20' விருதுகளுக்காகவும், சிறந்த புதுமுக வீரருக்கான விருதுக்கு டினேஷ் சந்திமாலும் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

விருது வழங்கல் நிகழ்வு எதிர்வரும் செப்ரெம்பர் 15 ஆம் திகதி கொழும்பில் இடம்பெறவுள்ளது.

**இந்த ஆண்டுக்கான சிறந்த வீரர்**

குமார் சங்ககார (இலங்கை), ஹசிம் அம்லா (தென்னாபிரிக்கா), மைக்கல் கிளார்க் (ஆஸ்திரேலியா), வேர்ணன் பிலாந்தர் (தென்னாபிரிக்கா)

**சிறந்த டெஸ்ட் வீரர்**

குமார் சங்ககார (இலங்கை), ஹசிம் அம்லா (தென்னாபிரிக்கா), மைக்கல் கிளார்க் (ஆஸ்திரேலியா), வேர்ணன் பிலாந்தர் (தென்னாபிரிக்கா)

**சிறந்த ஒருநாள் சர்வதேசப் போட்டி வீரர்**

குமார் சங்ககார (இலங்கை), லசித் மலிங்க (இலங்கை), மகேந்திர சிங் டோனி (இந்தியா), விராத் ஹோக்லி (இந்தியா)

**சிறந்த புதுமுக வீரர்**

டினேஷ் சந்திமால் (இலங்கை), டக் பிரேஸ்வெல் (நியூசிலாந்து), சுனில் நரைன் (மேற்கிந்தியத் தீவுகள்), ஜேம்ஸ் பற்றின்சன் (ஆஸ்திரேலியா)

**துணை அங்கத்துவ நாடுகளில் சிறந்த வீரர்**

கெவின் ஓ பிரையன் (அயர்லாந்து), ஜோர்ஜ் டொக்ரெல் (அயர்லாந்து), எட் ஜொய்ஸ் (அயர்லாந்து), போல் ஸ்ரேர்லிங் (அயர்லாந்து), டாவ்லட் ஷட்ரன் (ஆப்கானிஸ்தான்)

**சிறந்த 'ரி-20' பெறுபேறு**

அஜந்த மென்டிஸ் (இலங்கை), திலகரட்ண டில்ஷான் (இலங்கை), கிறிஸ் கெயில் (மேற்கிந்தியத் தீவுகள்), ரிச்சாட் லெவி (தென்னாபிரிக்கா)

**சிறந்த நடுவர்**

பில்லி பௌடன், அலீம் தார், குமார் தர்மசேன, ரிச்சாட் கெற்றல்புரோ, சைமன் ரௌபல், ரொட்னி ரக்கர்

**சிறந்த விளையாட்டு உணர்வுடன் விளையாடியமைக்கான விருது**

மொஹமட் ஹபீஸ் (பாகிஸ்தான்), ஜக்ஸ் கலிஸ் (தென்னாபிரிக்கா), டானியல் விற்றோரி (நியூசிலாந்து), ஏ.பி.டி.வில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா)

**மக்கள் தெரிவுக்கான விருது (எண்ணிக்கை குறைக்கப்படவில்லை)**

குமார் சங்ககார (இலங்கை), சச்சின் டெண்டுல்கர் (இந்தியா), ஜேம்ஸ் அன்டர்சன் (இங்கிலாந்து), ஜக்ஸ் கலிஸ் (தென்னாபிரிக்கா), வேர்ணன் பிலாந்தர் (தென்னாபிரிக்கா) (5)

## சாதனை படைத்தது

# தென்னாபிரிக்கா



இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வரும் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி 3 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. தொடர்ந்து ஒரு நாள் ஆட்டத்தில் இங்கிலாந்து அணியை வெற்றி கொண்டது.

இதனையடுத்து, தென்னாபிரிக்க அணி இந்த வெற்றியின் மூலம் சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒரு நாள் தரவரிசையிலும் 124 புள்ளிகள் பெற்று முதலிடத்தைப் பிடித்தது. இதற்கு முன்னர் இங்கிலாந்து அணியை வீழ்த்தி டெஸ்ட் தொடரிலும் 120 புள்ளிகள் பெற்று முதலிடத்தைப் பிடித்தது. 'ரி-20' போட்டியிலும் ஏற்கனவே 130 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. இதன் மூலம் தென்னாபிரிக்க அணி மூன்று வகை கிரிக்கெட் போட்டியிலும் முதலிடத்தைப் பிடித்த அணி என்ற சாதனை படைத்துள்ளது. [5]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## DAY CLASS
A/L 2012 பரீட்சைக்கு தோற்றியவர்களுக்குரியது

**Chemistry**
அன்பு
Beno
சுசாந்தன்
**Physics**
பிரபா
**Maths**
கணேசன்
(கொழும்பு பிரபல ஆசிரியர்)

ஆரம்பம்:-03.09.2012 திங்கள் 11 மணி

**NEW SCIENCE CENTRE**
யாழ் நகர் (வெலிங்டன் சந்தி அருகில்)

(22358)(3.14)

## NEW SCIENCE HALL
கன்னாதிட்டி றோட் - யாழ்ப்பாணம்

### 2013 A/L DAY CLASS
திங்கள் தொடக்கம் வெள்ளி (2012 A/L பரீட்சைக்கு தோற்றியவர்கட்குரியது)

PHY-திரு.குகன்
CHE-திரு.சிவத்திரன்
COM.MATHS திரு.செந்தில் ராஜ், திரு.செந்தில் நாதன்
BIOLOGY வழமையான ஆசிரியர் திரு.கெங்காதரன்

ஆரம்பம்-01.09.2012 காலை 8.00 மணி

(2/3010)(9.14)

## விக்னா கல்வி நிறுவனம்
52 ஸ்ரான்லி வீதி யாழ்

வரலாறு
திரு.S.S.தாஸ் (B.A.Hons)
A/L 2013
கடந்தகால வினாக்கள் மீட்டல் வகுப்புக்கள்
ஆரம்பம்01.09.2012 (12.00 - 1.00 PM)

## விசேட வகுப்புக்கள்
* கூட்டுறவு பரிசோதகர் மற்றும் வடமாகாண பரீட்சைகளுக்கான பொது அறிவு, பொதுஉளச்சார்பு ஒவ்வொரு அணியும் 2 மணி தொடக்கம் 5 மணிவரை
* விளைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கான F.R, A.R கணினி விடயங்கள் சனி 9மணி, ஞாயிறு 2மணி

தொடர்புகளுக்கு- 0754164564
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)

(22377)(3.14)

## SCIENCE HALL
கன்னாதிட்டி யாழ்ப்பாணம்

யாழ். மாணவர்களுக்கான வரப்பிரசாதம்
**A/L Geography Paper Class - 2013**
By:-
S. ஐங்கரன் M.A
S. திலேஸ் B.A (Hons)

சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி 4 - 6 pm
* ஆரம்ப அலகிலிருந்து மீட்டலும் கடந்த கால வினாவும், மாதிரிவினாவிடையும் இடம் பெறும்
* ஒரு கட்டணம் மட்டுமே அறவிடப்படும்.

ஆரம்பம் - 3.09.2012 திங்கள் மாலை 4.00

(சி/3008)(3.6.7)

## விக்னா கல்வி நிறுவனம்
52 ஸ்ரான்லி வீதி யாழ்

**Political Science**
திரு.ஸ்ரீரங்கநாத்
A/L 2013
முதலாம் குடியரசு யாப்பு
A/L 2014
அரசுடன் தொடர்புடைய பிரதான எண்ணக்கருக்கள் ஆரம்பம் 01.09.2012

((சி3008) 15-6)




## Training
வேலை வாய்ப்பு நிறைந்த
Web Designing
Networking
Multimedia
Type Free <Course><Name> & Sms to 772395895
MCS IT CAMPUS 324,Palaly road, Jaffna.
Supported by UNDP/JRRP

## கார் விற்பனைக்கு
நல்ல நிலையில் HL XXXX தொடரிலக்க முடைய Nissan FB 15 கார் (2000 Model) உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு
0779947442,
0776510188

(22369)(3.6.14)

## விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்

புவியியல்
திரு.டினேஷ்
A/L 2013
சனி:- (சூழல் மூலகம்) நீரியல் வட்டம்
ஞாயிறு:- புவியியற் தகவல் ஒழுங்கு (G.I.S)
10-12 மணி
A/L 2014
சனி:- மானிடப் புவியியல் (சனத்தொகை)
ஞாயிறு:- சூழல் மூலகம் (புவிநடுக்கம், எரிமலை)
9-10 மணி ஆரம்பம் 01.09.2012

(சி/3006) (15-14)

## யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்!!!
**Diploma in Mobile Phone Repairing**
(Hardware and Software Repairing)

சகலவகையான கைத்தொலை பேசிகளையும் மிகக்குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான சுயதொழில் வாய்ப்பு கற்கைநெறி!!!

குறிப்பு:- இக் கற்கை நெறியை நீங்கள் கற்பதன் மூலம் ஒரு போன்சொப் ஒன்றை சுயமாக ஆரம்பிக்க முடியும்.
By :- Selvathashan, M.Sc in ICT

மேலதிக விபரங்களுக்கு :-
**UNI - ICT CAMPUS (PVT) LTD**
No:83,Palaly Road, Kantharmadam,Jaffna
T.P :- 021 321 6433 / 0777 110 862

## SHAMROCK ACADEMY
ஈச்சமோட்டை யாழ்.

* A/L 2013 - 2014 கலை வர்த்தக கணித விஞ்ஞான பிரிவுகள்
* GR.1 முதல் O/L வரை
  Eng med Gr - 6 To 11
  Eng Lit Gr - 10 To - 11
  ICT (செயன் முறைகளுடன்
  Gen - English
* சிங்களம் பேச / வாசிக்க சனிக்கிழமை 3.pm
  ஆரம்பம் 01.09.2012
* O/L Repeat

(சி/2992)(3.6.7)

## IIS CITY CAMPUS இல் இணைந்து
புத்தம் புதிய TOSHIBA i3 LAPTOP கணனி ஒன்றினை பரிசாக பெற்றுக் கொள்ளுங்கள்




edexcel BTEC
# HND
in
**COMPUTING**
**CIVIL ENGINEERING**
**QUANTITY SURVEYING**
**BUSINESS MANAGEMENT**

மாணவர்களே!!!
**September 2012** பிரிவிலே மேற்குறிப்பிட்ட **HND** கற்கை நெறிகளுக்கு தங்களை இணைத்துக் கொள்ளும் மாணவர்களுக்கு **TOSHIBA** *i3* **Laptop** கணினி ஒன்றினை **IIS** பரிசாக வழங்குகின்றது. இது வரை எந்த நிறுவனமும் சிந்திக்காத வழங்காத இச்சலுகை இப்பிரிவிற்கு மட்டுமே.

மேலதிக விபரங்களுக்கு : 021 4 900 900

(c/2998)

**IIS CITY CAMPUS**
200, Sivan Pannai Road, Jaffna
Tel: 222 8060 Fax: 222 6933 Web: www.iis.edu.lk

## SUBRA -14
சித்தங்கேணி - வட்டுக்கோட்டை இரு இடங்களிலும்
2013 புலமைப்பரிசில் வகுப்புக்கள்
ஆரம்பம் 03.09.2012 (திங்கள்) மாலை 4.30

**வெற்றி தேர்வு வளவாளர்களுடன்**
ஆசிரியர்கள்
திருமதி ஜீவா
(முன்னாள் யாழ்ப்பாண கல்லூரி ஆசிரியை)
திரு. S. கைலைநாதன்

* வாரம் தோறும் பயிற்சிப் பரீட்சைகள்
* ஒரு பிரிவில் 40 மாணவர்கள் மட்டும்
* இன்று நேற்று அல்ல என்றென்றும் தனித்துவம் பெற்ற ஒரே நிறுவனம் SUBRA மட்டுமே.

## விற்பனைக்கு
தரமான கருஞ் சல்லிகள் (½", ¾", 1", 1½", 4", 9x6) போன்றவை நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்பு-
0775890730.

## கணக்கீடு
தொங்கல் கணக்கு
ஆரம்பம்:- நாளை
பிரிவு I :- 6 am
பிரிவு II :- 2 pm
S. தவா

(22387)(3.6)

**Universal**
கந்தர்மடம்

## A/L 2013, 2014, Paper Class

| | |
|---|---|
| தமிழ் திரு.குகன் | இந்து நாகரிகம் திரு.ஜெயக்குமார் |
| அரசியல் திரு.பாபு | நாடக அரங்கு திரு.மங்களேஸ் |
| வரலாறு திரு.தாஸ் | புவியியல் திரு.கரன் |
| அளவையியல் திரு.துரை | திரு.நீதன் |

பொருளியல் திரு.சண்
கணக்கீடு திரு.தவா
வணிகக்கல்வி திரு.பிரதீபன்
யுனிவேர்சல் கந்தர்மடம்

## MIS BIT Academy BIT Semester 1
BIT
நீங்களும் ஒரு கணினிப்பட்டதாரியாக இச்சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்துங்கள்
இவ்வருடத்திற்கான கடைசிப் பிரிவு நாளை காலை 7.30 am ஆரம்பம்
A/L பரீட்சைக்குத் தோற்றியோரும் காலத்தினை வீணடிக்காமல் பதிவு செய்யவும்
வேறு நிறுவனங்களில் பதிவு செய்தவர்களும் வகுப்புக்களில் பங்குபற்றலாம்
திரு.இ.குமரன் ஆசிரியரின் வகுப்பு இங்கே மட்டுமே நடைபெறும் என்பதைக் கவனிக்கவும்
74,சபாபதி வீதி யாழ். Call Us:0776577359
For 10 Years ...

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில்நுட்பத்துடன் வழங்கும்

**Spoken English With Grammar** 1 ½ Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning Course)

**Diploma In English** 1 ½ Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention
* Birtish Council இனால் நடாத்தப்படும் Cambridge ESOL பரீட்சையை யாழ் நகரில் முதல் முறையாக 2013 மேத மாதத்தில் நடாத்தப்படும் பரீட்சைக்கு தோற்ற முடியும்.

(c/2995)

Batch 1 : 10.09.2012
Batch 2 : 12.09.2012
Batch 3 : 15.09.2012

மேலதிக விபரங்களும் இலவச ஆலோசனைகளுக்கும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி
**BCHS** No. 15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna
Tel:021 2224550 Hotlines: 0777222422/0777585913/0714299935/0777730074

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.